

# 2013

# කාර්ය සාධන වාර්තාව
# செயலாற்றுகை அறிக்கை
# PERFORMANCE REPORT

දේශීය ආදායම් දෙපාර්තමේන්තුව - ශ්‍රී ලංකාව
உள்நாட்டு இறைவரித் திணைக்களம் - இலங்கை
DEPARTMENT OF INLAND REVENUE - SRI LANKA

# දේශීය ආදායම් කොමසාරිස් ජනරාල්ගේ
# කාර්ය සාධන වාර්තාව

# உள்நாட்டு இறைவரி ஆணையாளரின்
# செயலாற்றுகை அறிக்கை

# PERFORMANCE REPORT
# OF THE
# COMMISSIONER GENERAL OF INLAND REVENUE

# 2013


**මල්ලිකා සමරසේකර**

**மல்லிகா சமரசேகர**

**Mallika Samarasekara**

**දේශීය ආදායම් දෙපාර්තමේන්තුව**
**உள்நாட்டு இறைவரி திணைக்களம்**
**DEPARTMENT OF INLAND REVENUE**

## 2013 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான செயலாற்றுகையின் பொழிப்பு

2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 492,539 மில்லியனாக இருந்துள்ளதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 11.07% அதிகரிப்பினைக் காட்டுகின்றது. இது மொத்த வருமானத்திற்கு 43.30% பங்களிப்பினையும் குறித்த ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு 5.68% பங்களிப்பினையும் வழங்கியுள்ளது.

உள்நாட்டு இறைவரி திணைக்களமானது, வரி இணக்கப்பாடுகளின் விரிவாக்கலுக்கான வசதிப்படுத்தல்கள் மற்றும் உள்ளக கட்டமைப்புக்களைக் கொண்டுள்ள ஒருங்கிணைக்கப்பட்ட பொறிமுறையொன்றினை ஈடுபடுத்தியிருந்தது.

இத்தகைய முயற்சிகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டமைக்கு சான்றாக சுயமான இணக்கப்பாட்டுடன் விபரத்திரட்டுக்கள் சமர்ப்பிக்கப்படுவது அதிகரித்துள்ளமையினை குறிப்பிடலாம். அரசாங்க வருமானத்திற்கு வரி செலுத்துனர்களின் பங்களிப்பினை அங்கீகரிப்பதற்காக வரி செலுத்துனர்களுக்கு சிறப்புரிமை அட்டைகளை வழங்கும் செயற்பாடானது, வரி செலுத்துனர்களைப் பாராட்டும் நோக்குடன் குறித்த ஆண்டிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது.

குறித்த ஆண்டு காலப்பகுதியில், வரி கணக்காய்வுகளை ஒழுங்குமுறைப்படுத்துவதன் மூலம் ரூபா 254,654 மில்லியன் தொடர்பான வெளிப்படுத்தப்படாத வருமானம் மற்றும் புரள்வு என்பவற்றிற்கு வரி விதிக்க முடிந்துள்ளது.குறித்த ஆண்டு காலப்பகுதியில் ரூபா 19,669 மில்லியன் தொடர்பானவற்றின் மீது மேலதிக வரிகளும் விதிக்கப்பட்டன.

வரியினை மீள அறவிடுவதற்கான பிற்போட்ட வரி அறவீட்டுச் சட்டத்திற்கு மேலதிகமாக உரிய சட்டவாக்கங்களில் விதித்துரைக்கப்பட்டவாறான நடவடிக்கைகள் மற்றும் செயல்முறைகள் என்பனவும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

வரிச் சட்டங்களை உரைபெயர்க்கும் குழுவானது சட்டவாக்கத்தின் குறித்த ஏற்பாடுகள் மீது தேவைப்படும் வழிகாட்டுதல்கள் மற்றும் அறிவுறுத்தல்களுக்கு மேலதிகமாக குறித்த ஆண்டு காலப்பகுதியில் 54 வழக்குகள் தொடர்பான உரைபெயர்ப்புக்கள் வழங்கப்பட்டன.

தகவல் பிரிவு மற்றும் வரி செலுத்துனர் சேவை பிரிவு மற்றும் ஏனைய பிரிவுகள் மற்றும் பிராந்திய பணிமனைகளினால் முன்னெடுக்கப்பட்ட ஆரம்பிக்குகைகளுடன் கணிசமானளவு புதிய கோவைகளும் திறக்கப்பட்டுள்ளன.

உதவியினை அல்லது தகவலினைக் கோருகின்ற ஒவ்வொரு நபருக்கும் உதவியளிக்கும் நோக்குடன் குறித்த ஆண்டு காலப்பகுதியில் வரி செலுத்துனர் சேவைப் பிரிவானது உரிய அலுவலகங்களைக் கொண்டதாக தாபிக்கப்பட்டுள்ளது. வரி செலுத்துனர்களுக்கும் அவ்வாறே திணைக்களத்தின் பதவியினருக்கும் அறிவூட்டும் நோக்குடன் பல்வேறு கருத்தரங்குகள் மற்றும் விரிவுரைகள் என்பனவும் ஏற்பாடு செய்யப்பட்டன.

மீளாய்வு ஆண்டு காலப்பகுதியினுள் நிதி, திட்டமிடல் அமைச்சின் மேற்பார்வையின் கீழ் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வினைத்திறனை விரிவாக்கும் நோக்குடன் வருமான நிருவாக முகாமைத்துவ தகவல் முறைமையினை (RAMIS) அமுல்படுத்துவதற்குத் தேவையான பூர்வாங்க நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

## தூரநோக்கு

வரி செலுத்தும் பொதுமக்களுக்கு மிகச் சிறப்பாக பயிற்றுவிக்கப்பட்ட அர்ப்பணிப்புள்ள மற்றும் முழுமையாக தன்னியக்க முறைமையினால் வசதியளிக்கப்பட்ட பதவியினரைக் கொண்டு வரி செலுத்துனர் நட்பு வரி நிருவாக சேவை வழங்குநராக இருத்தல்.

## பணிக்கூற்று

வரி ஏய்ப்பு மற்றும் வரி தவிர்ப்புக்களினை தடுக்கும் அதேவேளை தன்னார்வ இணக்கப்பாட்டினை ஊக்குவிப்பதன் மூலம் வரி மற்றும் பிற தொடர்புடைய சட்டங்களின் நியதிகளுக்கு அமைவாக வரிகளைச் சேகரித்தல்; மற்றும்

வரிகளையும் தொடர்புற்ற சட்டங்களையும் நியாயமாகவும் நட்புறவுமிக்கதாகவும் மற்றும் திறமையான முறையிலும் நிர்வகிப்பதன் மூலம் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் முறைமையொன்றில் பொதுமக்களின் நம்பிக்கையை மேம்படுத்தலும் அதன் மூலமாக நன்மைபயக்கத்தக்க வரிக் கலாச்சாரம் ஒன்றினை அதிகரிக்கச் செய்தல்.

## உபாய இலக்குகள்

- வரிச் சட்டங்களுடனான வரி செலுத்துநரின் சுயவிருப்பு இணக்கப்பாட்டினை மேம்படுத்துவதற்காக அதனை ஊக்குவிப்பதில் உதவத்தக்க நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளுதலும் அவ்விதமான இணக்கப்பாட்டினைக் காட்டாதவர்களைக் கண்டறிதலும் பொருத்தமானதும் உகந்ததுமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலும்.

- செயற்றிறன்மிக்க வேலை நடைமுறைகள், தொழில்நுட்பம் என்பவற்றைப் பிரயோகித்து கிடைப்பனவிலுள்ள வளங்களைச் சிறப்பாகப் பயன்படுத்துவதன் மூலம் திணைக்களத்தின் செயற்றிறனை மேம்படுத்தல்.
- திணைக்களத்தினால் அதனது குறிக்கோளை நிறைவு செய்யும் முகமாக அதன் பதவியணியினர் மேலும் சிறந்த முறையில் பங்களிப்புச் செய்வதற்கு வசதியாக முகாமைத்துவம், தொழில்நுட்ப பயிற்சி மற்றும் வேலை அனுபவம் என்பவற்றின் மூலம் அவர்களது உற்பத்தித் திறனையும் தொழிற்துறைத் திறமையையும் உயர்த்துதல்.

## பிரதான அலுவலர்கள்

| | |
|---|---|
| **திருமதி. மல்லிகா சமரசேகர** | **ஆணையாளர் நாயகம்** |
| **திரு.எச்.பீ.ஏ.செனவிரத்ன** | **சிரேஷ்ட பிரதி ஆணையாளர் நாயகம்**<br>வரிக் கொள்கை, திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி, சட்டவாக்கம், விதிப்பனவுகள் மற்றும் சர்வதேச உறவுகள், முதலீட்டுச் சபை தொழில்முயற்சிகள் |
| **திரு.கே.ஏ.பி. களுவாராச்சி** | **பிரதி ஆணையாளர் நாயகம்**<br>நேரடி வரி நிருவாகம் |
| **திருமதி. எல். ராமநாயக்க** | **பிரதி ஆணையாளர் நாயகம்**<br>புலன் விசாரணை, வரி மேற்பார்வை மற்றும் இடர் முகாமைத்துவம் |
| **திருமதி.கே.தஹநாயக்க** | **பிரதி ஆணையாளர் நாயகம்**<br>மறைமுக வரி முகாமைத்துவம் |
| **திரு.கே.ஏ.ஜீ.அபயரத்ன** | **பிரதி ஆணையாளர் நாயகம்**<br>சேகரிப்பும் விடுவிப்பும், தவறவிட்ட வரி அறவீடு, மேன்முறையீடு, சட்டம் மற்றும் தகவல் |

| | |
|---|---|
| **திருமதி.டப்.அனுலாவதி** | **ஆணையாளர்**<br>மனிதவள முகாமைத்துவம் |
| **திருமதி.ஆர்.எம்.ஆர்.டப்.மஞ்சநாயக்க** | **ஆணையாளர்**<br>நிறுவன வரி 1 |
| **திரு.டி.எம்.எல்.ஐ.திசாநாயக்க** | **ஆணையாளர்**<br>பாரிய வரி செலுத்துனர் பிரிவு |
| **திரு.ஏ.என்.குருகே** | **ஆணையாளர்**<br>நிறுவன வரி II |
| **திருமதி.பி.ரோஹினி** | **ஆணையாளர்**<br>வலயம் 1 |
| **திருமதி.ஆர்.எம்.பி.எஸ்.கே.ராஜபக்ஷ** | **ஆணையாளர்**<br>சேகரிப்பு மற்றும் விடுவிப்பு, தவறுகை வரி அறவீடு |
| **திரு.ஏ.ஏ.டி.யு.அபேசிங்க** | **ஆணையாளர்**<br>வலயம் II,  நிறுத்திவைத்தல் வரி (வட்டி) |
| **செல்வி.டி.ஜி.பி.டப்.குணதிலக** | **ஆணையாளர்**<br>வரி ஆலோசகர் – அரசிறைக் கொள்கைத் திணைக்களம் |
| **திரு.ஜே.பி.டி.ஆர்.ஜயசேகர** | **ஆணையாளர்**<br>தகவல் தொடர்பு தொழில் நுட்பம் |
| **திரு.டி.எம்.எஸ்.திசாநாயக்க** | **ஆணையாளர்**<br>வரி செலுத்துனர் சேவைகள் மற்றும் முத்திரைத் தீர்வை |
| **திரு.எம்.ஜி.சோமச்சந்திர** | **ஆணையாளர்**<br>மனிதவள அபிவிருத்தி |
| **திருமதி.சி.எச்.வீரசிங்க** | **ஆணையாளர்**<br>உள்ளக கணக்காய்வு மற்றும் மதிப்பீட்டு கட்டுப்பாடு |
| **திருமதி.எச்.எம்.டி.முனசிங்க** | **ஆணையாளர்**<br>பாரிய வரி செலுத்துனர் பிரிவு (அலகு 6இ, 10 மற்றும் பாரிய வரி செலுத்துனர் பிரிவு கணக்காய்வு) |
| **திரு.பி.ஜி.கே.சமரதுங்க** | **ஆணையாளர்**<br>பெ.சே.வரி மீளளிப்பு |
| **திருமதி.எஸ்.கருணாரத்ன** | **ஆணையாளர்**<br>பெசேவ, இபெசேவ |
| **திரு.ஓ.பி.பி.கே.சிறிசேன** | **ஆணையாளர்**<br>பெறுகைகள் மற்றும் வழங்கல்கள் |
| **திரு.கே.தர்மசேன** | **ஆணையாளர்**<br>புலன்விசாரணை |
| **திரு.எச்.எம்.ஜீ.விஜேசிங்க** | **ஆணையாளர்**<br>சர்வதேச வரிக் கொள்கை |
| **திருமதி.பீ.ஏ.டி.டி.ஹேரத்** | **ஆணையாளர்**<br>வரிக் கொள்கை |
| **திரு.டி.பீ.திசாநயாக்க** | **ஆணையாளர்**<br>தேகவ, பொசேக, பந்தய மற்றும் சூதாட்டம் |
| **திரு.டி.டி.என்.பி.கோரலேஆரச்சி** | **ஆணையாளர்**<br>மேன்முறையீடு |
| **திரு.ரி.எம்.தயானந்த** | **ஆணையாளர்**<br>தகவல் |
| **திரு.டப்.எஸ்.கே. டீ.கொஸ்தா** | **ஆணையாளர்**<br>வலயம் III, உபொசெவ, பிரிவு 1, 2 மற்றும் 3 |

# உள்ளடக்கம்


**2013 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான செயலாற்றுகையின் பொழிப்பு ....iii**
**பிரதான அலுவலர்கள்....vii**
**உள்ளடக்கம் ....ix**
**குறித்த ஆண்டின் போது திணைக்களத்தினால் நிருவகிக்கப்பட்ட வரிகள் .... x**
**பகுதி I - மனித வள முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி** .... 1

**அத்தியாயம் 1 - மனித வளங்கள் .... 1**
1.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, பதவியில் இருப்பவர்களின் எண்ணிக்கையும் பதவி வெற்றிடங்களும் ....1
1.2 பதவி உயர்வுகள் ....2
1.4 ஒழுக்காற்று நடவடிக்கைகள் ....4
1.5 பயிற்சி ....4
1.5.1 உள்ளக பயிற்சியளித்தல் ....4
1.5.2 வெளிநாட்டு பயிற்சி5
**பகுதி 11 - வரி நிருவாகம்** .... 9

**அத்தியாயம் 2 - வருமான சேகரிப்பு .... 9**
**2..1 வரி செலுத்துனர்கள் மற்றும் வரிக்கோவைகளின் எண்ணிக்கை ....9**
2.2 மொத்த வருமான சேகரிப்பு ....10
2.3 மொத்த வருமான பாய்ச்சல் ....12
2.4 முன்னைய ஆண்டுடனான வருமான ஒப்பீடு ....13
2.5 முத்திரைத் தீர்வை, தேசக் கட்டுமான வரி என்பவற்றின் வருமானத்தினை மாகாண சபைகளுக்கு மாற்றுதல் ....14
2.6 வருமான சேகரிப்பு - சுய மதிப்பீடும் ஏனையவையும் ....14
2.7 அரசாங்க வருமானத்திற்கான உள்நாட்டு இறைவரியின் பங்களிப்பு ....15
2.8 வரி விபரத்திரட்டு இணக்கப்பாடு ....16
2.9 வருமான வரி சேகரிப்பு ....17
2.9.1 வருமான வரி சேகரிப்பு - துறை ரீதியான வகுப்பாக்கம் ....17
2.9.2 மூலத்தின் அடிப்படையில் வருமான வரி சேகரிப்பு பகுப்பாய்வு ....18
2.9.3 வருமான வரியுடன் தொடர்புடைய பிரதான கொள்கை மாற்றங்கள் ....18
2.10 பெறுமதி சேர் வரி சேகரிப்பு ....23
2.10.1 பெறுமதி சேர் வரியின் கைத்தொழில் ரீதியான பகுப்பாய்வு ....24
2.10.2 பெறுமதி சேர் வரியுடன் தொடர்புடைய பிரதான கொள்கை மாற்றங்கள் ....24
2.11 தேசக் கட்டுமான வரி சேகரிப்பு ....25
2.11.1 தேசக் கட்டுமான வரி தொடர்பான பிரதான கொள்கை மாற்றங்கள் ....26
2.12 பொருளாதார சேவைக் கட்டண சேகரிப்பு ....27
2.12.1 பொ.சே.கட்டணம் தொடர்பான பிரதான கொள்கை மாற்றங்கள் ....28
2.13 உழைக்கும் பொழுது செலுத்தும் வரி சேகரிப்பு ....28
2.14 நிறுத்திவைத்தல் வரிகள் (வட்டி மற்றும் விதித்துரைக்கப்பட்ட கட்டணங்களின் மீது) ....29
2.15 பந்தய மற்றும் சூதாட்ட அறவீடு ....29
2.16 நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதி அறவீடு சேகரிப்பு ....30
2.17 முத்திரைத் தீர்வை சேகரிப்பு ....30
2.18 காணி மீதான மாற்றல் வரி ....30
2.19 2009 இலிருந்து 2013 வரைக்கும் உள்நாட்டு இறைவரி சேகரிப்பு ....30

**அத்தியாயம் 3 - செலவினம் மற்றும் உற்பத்தி வினைத்திறன் விகிதாசாரம் ....32**
3.1 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் ஏற்பட்ட மொத்த செலவினத்தின் ஒப்பீடு ....32
3.2 மீண்டுவரும் செலவினத்தின் பகுப்பாய்வு - 2013 ....33
3.3 உற்பத்தி வினைத்திறன் விகிதாசாரம் ....33
3.4 உள்ளக கணக்காய்வு ....34

**அத்தியாயம் 4 - தவறவிடப்பட்ட வரிகள் ....35**
4.1 தவறவிடப்பட்ட வரிகள் ....35
4.2 தவறவிடப்பட்ட வரிகளைக் குறைப்பதற்கான திட்டங்கள் ....36
4.3 வரி நிலுவைகளை 3% இல் பேணுதல் ....36

**அத்தியாயம் 5 - கணக்காய்வுகள், மேலதிக வரி சேகரிப்பு, மீள் கொடுப்பனவுகள், அறவீட்டு நடவடிக்கைகள் மற்றும் மேன்முறையீடுகள் ....37**
5.1 கணக்காய்வுகள் ....37
5.2 மேன்முறையீடுகள் ....38
5.3 பெறுமதி சேர் வரிக்குப் பின்னரான மீள் கொடுப்பனவு கணக்காய்வுகள் ....38
5.4 அறவீட்டு நடவடிக்கைகள் ....38
5.5 மீள் கொடுப்பனவுகள் ....38

**அத்தியாயம் 6 - சர்வதேச உறவுகள் ....40**
6.1 இரட்டை வரி விதிப்பினைத் தவிர்க்கும் ஒப்பந்தங்கள் ....40
6.1.1 இரட்டை வரி விதிப்பு ஒப்பந்தங்கள் மற்றும் பல்தரப்பு ஒப்பந்தங்களின் விபரம் ....40
6.1.2. 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இரட்டை வரி விதிப்பு ஒப்பந்தங்கள் தொடர்பிலான விடயங்கள் ....41
6.2 வெளிநாடுகளில் நடாத்தப்பட்ட சர்வதேச வரி விதிப்பு தொடர்பான விடயங்களில் பங்குபற்றுதல்கள் ....42
அட்டவணை 31 - வெளிநாடுகளில் நடாத்தப்பட்ட சர்வதேச வரி விதிப்பு தொடர்பான விடயங்களில் பங்குபற்றுதல்கள் ....42

**அத்தியாயம் 7 - சட்டவாக்கம் ....44**
7.1 குறித்த ஆண்டு காலப்பகுதியில் சட்டமாக்கப்பட்ட சட்டவாக்கம் ....44
7.2 அங்கீகரிக்கப்பட்ட தரும தாபனங்கள் ....44
7.3 வர்த்தமானி அறிவித்தல்கள் ....44
7.4 உரைபெயர்ப்புக் குழு ....44

**அத்தியாயம் 8 - ஏனைய பணிகள் ....46**
8.1 வரி செலுத்துனர் சேவைப் பிரிவு ....46
8.2 திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பணிப்புரைகள் மற்றும் இசைவாணைச் சான்றிதழ்கள் ....46
8.3 பகுப்பாய்வு அறிக்கைகள் ....47
8.4 வருமான நிருவாக முகாமைத்துவ தகவல் பிரிவு (RAMIS) ....47

## குறித்த ஆண்டின் போது திணைக்களத்தினால் நிருவகிக்கப்பட்ட வரிகள்

குறித்த ஆண்டின் போது திணைக்களத்தினால் நிருவகிக்கப்பட்ட வரிகளும் தொடர்புடைய சட்டவாக்கங்களும் பின்வருமாறு;

| வரி | தொடர்புடைய சட்டவாக்கம் |
|---|---|
| வருமான வரி | 2007 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, 2008 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, 2009 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, 2011 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, 2012 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க மற்றும் 2013 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம். |
| பெறுமதிசேர் வரி (நிதி சேவைகள் மீதான பெசேவ, பெசேவ மீதான முற்பண வரி மற்றும் பெசேவ தேர்ந்தெடுப்பு உள்ளடங்கலாக) | 2003 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, 2004 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, 2005 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, 2006 ஆம் ஆண்டின் 8 மற்றும் 49 ஆம் இலக்க, 2007 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, 2008 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, 2009 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, 2011 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, 2012 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க மற்றும் 2013 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டம். |
| பொருளாதார சேவைக் கட்டணம் | 2007 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, 2008 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, 2009 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, 2011 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, 2012 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க மற்றும் 2013 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டண வரிச் சட்டம். |
| தேசக் கட்டுமான வரி | 2009 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, 2011 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, 2012 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க மற்றும் 2013 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க தேசக் கட்டுமான வரிச் சட்டம். |
| பந்தய மற்றும் சூதாட்ட வரி | 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க பந்தய மற்றும் சூதாட்ட வரிச் சட்டம். |
| முத்திரைத் தீர்வை | 2008 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க மற்றும் 2011 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1982 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க முத்திரை தீர்வை சட்டம் மற்றும் 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரை தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம். |
| பங்கு கொடுக்கல்வாங்கல் வரி | 2007 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க நிதிச் சட்டம் மற்றும் 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிச் சட்டம். |
| நிர்மாண கைத்தொழில் உத்தரவாத அறவீட்டு நிதியம் | |
| சமூகப் பொறுப்பு அறவீடு | 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிச் சட்டம், 2006 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டம் மற்றும் 2008 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க நிதிச் சட்டம். |
| புரள்வு வரி (வட மாகாணம்) | திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க புரள்வு வரிச் சட்டம். |

பின்வரும் வரிகள் ஆரம்பத்தில் விதிக்கப்பட்டு தற்பொழுது அவை நீக்கப்பட்டு இருப்பினும் திணைக்களம் அவற்றின் மதிப்பீடு மற்றும் சேகரிப்பு பணியில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றது.

| வரி | தொடர்புடைய சட்டவாக்கம் |
|---|---|
| தேசிய பாதுகாப்பு அறவீடு | திருத்தப்பட்டவாறான 1991 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு வரிச் சட்டம் |
| பொருட்கள் சேவைகள் வரி | திருத்தப்பட்டவாறான 1996 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க பொருட்கள், சேவைகள் வரிச் சட்டம் |
| தேசத்தைப் பாதுகாப்பதற்கான பங்களிப்பு | திருத்தப்பட்டவாறான 1996 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க தேச பங்களிப்பு சட்டத்தினைப் பாதுகாத்தல் |
| நலன் வரி மீதான மேலதிகக் கட்டணம் | 1982 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க மற்றும் 1989 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க செல்வ வரிச் சட்டத்தின் மீதான மிகைக் கட்டணம் |
| வருமான வரி மீதான மேலதிகக் கட்டணம் | திருத்தப்பட்டவாறான 1982 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, 1984 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, 1989 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க வருமான வரி சட்டத்தின் மீதான மிகைக் கட்டணம் |
| பற்று வரி | 2003 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க, 2007 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, 2009 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மற்றும் 2011 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2002 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பற்று வரிச் சட்டம் |
| காணித் தீர்வை | திருத்தப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க காணித் தீர்வை சட்டம் |

# பகுதி I – மனித வள முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி

## அத்தியாயம் 1 - மனித வளங்கள்

### 1.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, பதவியில் இருப்பவர்களின் எண்ணிக்கையும் பதவி வெற்றிடங்களும்

பின்வரும் அட்டவணை திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியையும் 2013 டிசெம்பர் 31 அன்றுள்ளவாறு பதவியில் இருப்பவர்களின் எண்ணிக்கை மற்றும் பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கையையும் காட்டுகின்றது.

**2013.12.31 அன்றுள்ளவாறு திணைக்களத்தின் பதவியணி**

| பதவியணி | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | சேவை.எண். | வெற்றிடம் |
|---|---|---|---|
| ஆணையாளர் நாயகம் | 1 | 1 | - |
| மேலதிக ஆணையாளர் நாயகம் | 1 | - | 1 |
| சிரேஷ்ட பிரதி ஆணையாளர் நாயகம் | | 1 | - |
| பிரதி ஆணையாளர் நாயகம் | 9 | 2 | 7 |
| சிரேஷ்ட ஆணையாளர் | 22 | 2 | 20 |
| ஆணையாளர் | 90 | 86 | 4 |
| பிரதி ஆணையாளர்** | - | 15 | - |
| சிரேஷ்ட பிரதி ஆணையாளர்/பிரதி ஆணையாளர்/ பதில் ஆணையாளர் | 1107 | - | - |
| சிரேஷ்ட வரி மதிப்பீட்டாளர்/வரி மதிப்பீட்டாளர் *** | - | 609 | - |
| சிரேஷ்ட வரி அலுவலர்/வரி அலுவலர்*** | - | 528 | - |
| **இணைந்த சேவைகள்** | | | |
| பணிப்பாளர் (நிர்வாகம்) | 1 | 1 | 0 |
| கணக்காளர் | 8 | 5 | 3 |
| உள்ளக கணக்காய்வாளர் | 1 | 1 | |
| நிர்வாக அலுவலர் (Supra) | 3 | 3 | 0 |
| மொழிபெயர்ப்பாளர் | 9 | 9 | 0 |
| நூலகர் | 2 | 1 | 1 |
| பொதுமுகாமைத்துவ உதவியாளர் | 606 | 500 | 106 |
| வரவு செலவுத்திட்ட உதவியாளர் | 2 | 2 | 0 |
| போக்குவரத்து அலுவலர் | 1 | 0 | 1 |
| சாரதி | 74 | 72 | 2 |
| அலுவலக உதவியாளர் | 319 | 292 | 27 |
| **ஏனையவை** | | | |
| பொறியியலாளர் | 1 | 1 | 0 |
| முறைமை பகுப்பாய்வாளர் | 1 | 1 | 0 |
| பணிப்பாளர் (IT) | 1 | 0 | 1 |
| பிரதி/பதில் பணிப்பாளர் (தகவல் தொழில்நுட்பம்) | 6 | 4 | 2 |
| தகவல் தொழில்நுட்ப அலுவலர் | 12 | 11 | 1 |
| தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | 30 | 26 | 4 |
| முறைமை கட்டுப்பாட்டாளர் | 3 | 1 | 0 |
| முறைமை இயக்குனர் | 3 | 2 | 0 |
| தரவு இயக்குனர் | 8 | 7 | 0 |
| வரவேற்பாளர் | 4 | 3 | 1 |
| வழங்கல் உதவியாளர் | 2 | 0 | 2 |
| தொழில்நுட்ப அலுவலர் | 2 | 0 | 2 |
| கட்டிட மேற்பார்வையாளர் | 1 | 0 | 1 |
| களஞ்சிய பொறுப்பாளர் | 2 | 0 | 2 |
| தச்சன் | 1 | 1 | 0 |
| **மொத்தம்** | **2333** | **2187** | **188** |

* புதிய சேவைக் குறிப்புக்கிணங்க, தற்போது சிரேஷ்ட பிரதி ஆணையாளர் நாயகமாக பதவி வகிக்கும் அலுவலர் மேலதிக ஆணையாளர் நாயகமாக பதவி உயர்த்தப்படுதல் வேண்டும். அப்பதவியானது அவருக்கு தனிப்பட்ட முறையிலானதாக அமையும்.

** புதிய சேவைக் குறிப்புக்கிணங்க, தற்போது பிரதி ஆணையாளர்களாக பதவி வகிக்கும் அலுவலர்கள் ஆணையாளர்களாக நியமிக்கப்படுதல் வேண்டும்.

*** புதிய சேவைக் குறிப்புக்கிணங்க, சிரேஷ்ட வரி மதிப்பீட்டாளர்/வரி மதிப்பீட்டாளர்/சிரேஷ்ட வரி அலுவலர்/வரி அலுவலர்கள் போன்ற பதவிகள் இல்லாமல் செய்யப்பட்டு அவற்றிற்குப் பதிலாக 1107 எண்ணிக்கையிலான அலுவலர்கள் சிரேஷ்ட பிரதி ஆணையாளர்/பிரதி ஆணையாளர்/பதவி ஆணையாளர் போன்ற பதவிகளில் அமர்த்தப்பட்டுள்ளதுடன் அவர்கள் அக்குறித்த பதவிகளில் இன்னமும் நியமிக்கப்படவில்லை.

## 1.2 பதவி உயர்வுகள்

பின்வரும் சிரேஷ்ட ஆணையாளர்கள் மற்றும் ஆணையாளர்கள் பிரதி ஆணையாளர் நாயகங்களின் கடமைகளை மேற்கொள்வதற்கு உரித்தளிக்கப்பட்டுள்ளார்கள்.

| பெயர் | பயன்வலுப்பெறும் திகதி |
|---|---|
| திருமதி.கே.தஹநாயக்க | 2013.04.02 |
| திரு.கே.ஏ.ஜீ.அபயரத்ன | 2013.08.13 |
| திரு.டி.பி.ஜயசேகர | 2013.08.13 |
| திருமதி.டப்.அனுலாவதி | 2013.12.19 |
| திருமதி.ஆர்.எம்.ஆர்.டப்.மஞ்சநாயக்க | 2013.12.19 |

- அறுபத்தெட்டு பிரதி ஆணையாளர்கள் ஆணையாளர்கள் பதவிக்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.
- மூன்று பிரதி ஆணையாளர்கள் ஆணையாளர்களின் கடமைகளை மேற்கொள்வதற்கு உரித்தளிக்கப்பட்டுள்ளார்கள்.
- ஆறு சிரேஷ்ட வரி மதிப்பீட்டாளர்களுக்கு பிரதி ஆணையாளர்களின் கடமைகள் உரித்தளிக்கப்பட்டன.

## 1.3 இளைப்பாறல்கள்

குறித்த ஆண்டு காலப்பகுதியில் பின்வரும் அலுவலர்கள் சேவையிலிருந்து இளைப்பாறினார்கள்.

| | |
|---|---|
| • திருமதி.டி.எம்.நந்தாவதி | பிரதி ஆணையாளர் நாயகம் |
| • திரு.டப்.எம்.மென்டிஸ் | பிரதி ஆணையாளர் நாயகம் |
| • திரு.ஏ.எல்.ஏ.சிறிசேன | பிரதி ஆணையாளர் நாயகம் |
| • திருமதி.எச்.எம்.சி.ஐ.குணசேகர | பிரதி ஆணையாளர் நாயகம் |
| • திரு.டி.பீ.ஜயசேகர | பிரதி ஆணையாளர் நாயகம் |
| • திரு.டப்.வி.பி.கருணாரத்ன | சிரேஷ்ட ஆணையாளர் |
| • திரு.பி.ஏ.வி.பிரேமரத்ன | சிரேஷ்ட ஆணையாளர் |
| • திரு.ஐ.எம்.பி.செனவிரத்ன பண்டா | ஆணையாளர் |

**ஏனைய இளைப்பாறல்கள்**

| | |
|---|---|
| • பிரதி ஆணையாளர் | 03 |
| • சிரேஷ்ட வரி மதிப்பீட்டாளர் | 02 |
| • வரி மதிப்பீட்டாளர் | 11 |
| • அரச முகாமைத்துவ உதவியாளர் | 16 |
| • முறைமை தொழிற்படுத்துனர்கள் | 01 |
| • முறைமை கட்டுப்பாட்டாளர் | 02 |
| • சாரதிகள் | 03 |

**<u>திருமதி.டி.எம்.நந்தாவதி</u>**

திருமதி.டி.எம்.நந்தாவதி ஓர் வரி மதிப்பீட்டாளராக 1978 டிசெம்பர் 01 இல் திணைக்களத்தில் இணைந்து கொண்டார். இவர் 2009 இல் சிரேஷ்ட பிரதி ஆணையாளர் நாயகமாக பதவி உயர்த்தப்படும் வரையில் பல்வேறு பதவிகளில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றியுள்ளார். இவர் 2013 ஏப்ரல் 02 ஆம் திகதி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் 29 வருட காலங்கள் சேவையாற்றிய அனுபவத்துடன் சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார். திருமதி.நந்தாவதி தனது பதவிக் காலத்தில் 2006 இல் இந்தியாவில் இடம்பெற்ற அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் வரிக் கொள்கை மற்றும் வரி நிருவாகம் போன்ற நடைமுறை விடயங்கள் தொடர்பான பயிற்சியளித்தல் நிகழ்ச்சித் திட்டங்கள் உள்ளடங்கலான பல்வேறு வெளிநாட்டு வரி விதிப்பு நிகழ்ச்சித் திட்டங்களில் பயிற்சி பெற்றும் பங்குபற்றியுமுள்ளார். (2007 இல் இந்தியாவில் NADT இல் புலனாய்வு மற்றும் முகாமைத்துவம் மீதான விசேட பயிற்சியளித்தல் நிகழ்ச்சி திட்டம்).

**<u>திரு.டப்.எம்.மென்டிஸ்</u>**

திரு.டப்.எம்.மென்டிஸ் அவர்கள் 1980 இல் திணைக்களத்தில் இணைந்து கொண்டுள்ளதுடன் அவர் 2011 டிசெம்பர் 27 இலிருந்து பயன்வலுப்பெறும் வகையில் பிரதி ஆணையாளர் நாயகமாக பதவி உயர்த்தப்பட்டார். திரு.டப்.எம்.மென்டிஸ் தனது 33 வருட திணைக்கள சேவையினை அர்ப்பணிப்புடன் பூர்த்தி செய்து 2013 ஆகஸ்ட் 10 ஆம் திகதி சேவையிலிருந்து இளைப்பாறினார்.

**<u>திரு.ஏ.எல்.ஏ.சிறிசேன</u>**

1981 இல் திணைக்களத்தில் இணைந்து கொண்ட திரு.ஏ.எல்.ஏ.சிறிசேன அவர்கள் 2012 மே 22 ஆம் திகதியன்று பிரதி ஆணையாளர் நாயகமாக பதவி உயர்த்தப்பட்டார். இவர் 2013 ஜூலை 25 ஆம் திகதியன்று சேவையிலிருந்து இளைப்பாறினார். திரு.ஏ.எல்.ஏ.சிறிசேன அவர்கள் தனது பதவிக் காலத்தின்போது பல்வேறு பயிற்சிகளைப் பெற்றுள்ளதுடன், ஐக்கிய இராச்சியத்தில் நடாத்தப்பட்ட வரிப் பகுப்பாய்வு மற்றும் வருமான எதிர்வு கூறல் தொடர்பான நிகழ்ச்சித்திட்டம் 2007 இல் பிரான்ஸில் இடம் பெற்ற வரி ஒப்பந்தங்கள் மீதான 12 ஆவது வருடாந்த சர்வதேச கூட்டம் மற்றும் 2007 இல் இந்தியாவில் இடம் பெற்ற NADT இல் புலனாய்வு மற்றும் முகாமைத்துவம் தொடர்பான விசேட பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டத்திலும் 2013 இல் சிங்கப்பூரில் இடம் பெற்ற இலத்திரனியல் ஆட்சி முறை மற்றும் முகாமைத்துவ மாற்றம் தொடர்பான பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டத்திலும் பங்குபற்றியிருந்தார்.

**<u>திருமதி.எச்.எம்.சி.குணசேகர</u>**

திருமதி.எச்.எம்.சி.ஐ.குணசேகர வரி மதிப்பீட்டாளராக திணைக்களத்தில் இணைந்து கொண்டார். 2013 டிசெம்பர் 12 ஆம் திகதியன்று அவர் இளைப்பாறுகின்ற போது அவர் பிரதி ஆணையாளர் நாயகமாக கடமையாற்றிக் கொண்டிருந்தார். திருமதி.குணசேகர அவர்கள் உள்நாட்டு இறைவரி சேவையில் பல்வேறு பதவிகளை வகித்துள்ளதுடன் 32 வருடங்கள் தமது அர்ப்பணிப்பு மிக்க சேவையினை இத்திணைக்களத்திற்கு வழங்கியுள்ளார். அவர் தனது பதவிக் காலத்தின் போது 1993/1994 ஜப்பானில் நடாத்தப்பட்ட வரி விதிப்பு (JICA) மீதான கருத்தரங்கு 2012 இல் நேபாளத்தில் இடம் பெற்ற வரி செலுத்துனர் சேவைகள் மீதான சார்க் கருத்தரங்கு 2006 இல் இந்தியாவில் நடாத்தப்பட்ட அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் வரிக் கொள்கை மற்றும் நிருவாகம் என்பவற்றின் நடைமுறை விடயங்கள் குறித்த பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டம், 2007 இல்

இந்தியாவில் NADT இல் புலனாய்வு மற்றும் முகாமைத்துவம் மீதான விசேடமான பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் 2013 இல் சிங்கப்பூரில் நடாத்தப்பட்ட இலத்திரனியல் ஆட்சி முறை மற்றும் மாற்ற முகாமைத்துவம் மீதான பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டம் என்பன உள்ளடங்கலான பல்வேறு வெளிநாட்டு பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றியிருந்தார்.

**திரு.டி.பீ.ஜயசேகர**

திரு.டி.பீ.ஜயசேகர அவர்கள் வரி மதிப்பீட்டாளராக 1981 இல் திணைக்களத்தில் இணைந்து கொண்டார். இவர் தனது 32 வருட சேவைக் காலத்தில் திணைக்களத்தில் பல்வேறு பதவிகளை வகித்துள்ளார். 2013 டிசெம்பர் 04 ஆம் திகதியன்று அவர் இச்சேவையிலிருந்து ஓய்வு பெறும் போது பிரதி ஆணையாளர் நாயகமாக (கடமைகளை நிறைவேற்றுதல்) கடமையாற்றியிருந்தார். திரு.டி.பீ.ஜயசேகர தனது பதவிக் காலத்தின் போது 2006 இல் இந்தியாவில் நடாத்தப்பட்ட அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலுள்ள வரிக் கொள்கை மற்றும் நிருவாகம் போன்ற விடயங்களிலுள்ள நடைமுறை பிரச்சனைகள் தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்கள் 2007 இல் NADT இல் நடாத்தப்பட்ட புலனாய்வு மற்றும் முகாமைத்துவம் மீதான விசேட பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் 2011 இல் பிரான்ஸில் நடாத்தப்பட்ட வரி நிருவாக பாடநெறி மற்றும் 2013 இல் சிங்கப்பூரில் நடாத்தப்பட்ட இலத்திரனியல் ஆட்சி முறை மற்றும் மாற்ற முகாமைத்துவம் மீதான பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டம் உள்ளடங்கலான பல்வேறு வெளிநாட்டு பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டங்களிலும் பங்குபற்றியிருந்தார்.

## 1.4 ஒழுக்காற்று நடவடிக்கைகள்

| வகுதி | இல் 2013.01.01 உள்ளவாறான மீதி | குறித்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டவை | குறித்த ஆண்டில் நிறைவு பெற்றவை | இல் 2013.12.31 உள்ளவாறான மீதி |
|---|---|---|---|---|
| வரி மதிப்பீட்டாளர் | 9 | 1 | 1 | 9 |
| வரி உத்தியோகத்தர் | - | - | - | - |

## 1.5 பயிற்சி

### 1.5.1 உள்ளக பயிற்சியளித்தல்

திணைக்களத்தின் பயிற்சியளித்தல் கிளையானது, வரி மதிப்பீட்டாளர்கள் மற்றும் வரி உத்தியோகத்தர்களுக்கான பயிற்சியளித்தல் பாடநெறிகளையும் பரீட்சைகளையும் கிரமமாக நடாத்தி வருகின்றது. இவை அவர்களின் அறிவினை விருத்தி செய்வதனையும் பகுப்பாய்வு திறன்களை மேம்படுத்துவதனையும் குறிப்பாக வரி விதிப்பனவு மற்றும் கணக்கீட்டு அறிவினை விருத்தி செய்வதனையும் நோக்காகக் கொண்டு வழங்கப்பட்டு வருகின்றன. இத்தகைய பாடநெறிகளானவை, உத்தியோகத்தர்கள் அவர்கள் வகிக்கும் வகுப்புக்களில் அவர்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு தேவையான பல்வேறு சேவைத் தேவைப்பாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் குறித்த விடயங்களில் பயிற்சியினை அளிக்கும் வகையிலும் அவர்களின் கடமைகளை நிறைவேற்றுவதற்கான அறிவினை பெற்றுக் கொள்ளும் நோக்குடனும் விசேடமாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

குறித்த ஆண்டு காலப்பகுதியில் பயிற்சியளிக்கப்பட்ட ஆட்கள் மற்றும் நடாத்தப்பட்ட பரீட்சைகளின் விபரம் பின்வருமாறு.

- **வரி மதிப்பீட்டாளர்களுக்கானது**

| பாடநெறி/பரீட்சை | பயிலுனர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|
| முதலாவது திணைக்களப் பரீட்சைக்காக வகுப்பு II தரம் II இல் வரி மதிப்பீட்டாளர்களுக்காக நடாத்தப்பட்ட பயிற்சியளித்தல் வகுப்புக்கள் | 60 | |
| இரண்டாவது திணைக்களப் பரீட்சைக்காக வகுப்பு II தரம் II இல் வரி மதிப்பீட்டாளர்களுக்காக நடாத்தப்பட்ட பயிற்சியளித்தல் வகுப்புக்கள் | 60 | |
| இரண்டாவது திணைக்களப் பரீட்சைக்காக வகுப்பு II தரம் II இல் வரி மதிப்பீட்டாளர்களுக்காக நடாத்தப்பட்ட பயிற்சியளித்தல் வகுப்புக்கள் | 3 | |
| வகுப்பு II தரம் II இனைச் சேர்ந்த வரி மதிப்பீட்டாளர்களுக்கான இரண்டாவது திணைக்களப் பரீட்சை | 4 ஆவது தடவை | 11 |
| வகுப்பு II தரம் II இனைச் சேர்ந்த வரி மதிப்பீட்டாளர்களுக்கான முதலாவது திணைக்களப் பரீட்சை | 1 ஆவது தடவை | 54 |
| | 2 ஆவது தடவை | 12 |

- **வரி உத்தியோகத்தர்களுக்கானது**

| பாடநெறி/பரீட்சை | பயிலுனர்களின் எண்ணிக்கை |
|---|---|
| வகுப்பு II தரம் II இல் உறுதிப்படுத்துவதற்காக வகுப்பு III தரம் II இலுள்ள வரி உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்பட்ட பயிற்சியளித்தல் பாடநெறி | 3 |
| வகுப்பு II தரம் II இல் உறுதிப்படுத்துவதற்காக வகுப்பு III தரம் II இலுள்ள வரி உத்தியோகத்தர்களுக்கான இறுதி திணைக்கள பரீட்சை | 3 |

- **கருத்தரங்குகள், செயலமர்வுகள் போன்றவை**

| விடயம் | குறித்த ஆண்டில் நடாத்தப்பட்ட கருத்தரங்கு/ செயலமர்வுகளின் எண்ணிக்கை | பங்குபற்றிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| பெசேவ ஆய்வு முறை | 1 | 60 |
| சந்தை நடத்தையும் அரசாங்க தலையீடும் | 1 | 48 |
| தேசிய வருமானமும் வரி விதிப்பும் | 1 | 50 |
| வருமான வரி கணக்காய்வு மற்றும் மாற்றல் விலையிடலுக்கான அடிப்படை கட்டமைப்பு | 1 | 57 |
| சிறிய நடுத்தர தொழில்முயற்சிகளின் வரி விதிப்பு | 1 | 85 |
| சொத்து வெளிப்படுத்தல் கணக்காய்வு | 1 | 60 |

### 1.5.2 வெளிநாட்டு பயிற்சி

சிறந்த வரி நிருவாகிகளாக அலுவலர்களின் உயர் தொழில் மட்டத்தினைப் பேணும் பொருட்டு வரிச்சட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றகரமான மாற்றங்கள் மற்றும் ஏனைய நாடுகளிலுள்ள மிகச் சிறந்த நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள் அல்லது செயலமர்வுகளில் திணைக்களத்தின் பல்வேறு அதிகாரிகளும் பங்குபற்றுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

அத்தகைய வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகளுக்காக அனுப்பி வைக்கப்பட்ட அலுவலர்களின் விபரங்கள் பின்வருமாறு.

| | அலுவலரின் பெயரும் பதவியும் | நிகழ்ச்சித்திட்ட பெயர்/ கருத்தரங்கு/ செயலமர்வு | பயிற்சி வழங்கிய நாடு | காலம் |
|---|---|---|---|---|
| 1 | திரு.கே.ஏ.பி.களுஆரச்சி<br>பிரதி ஆணையாளர் நாயகம் | 34 ஆவது CATA தொழில்நுட்ப மாநாடு | றுவண்டா | 21.10.2013-25.10.2013 |
| 2 | திரு.கே.ஏ.ஜி.அபேரத்ன<br>பிரதி ஆணையாளர் நாயகம்<br>(பதிற் கடமைகள் புரிதல்) | 34 ஆவது CATA தொழில்நுட்ப மாநாடு | றுவண்டா | 21.10.2013-25.10.2013 |
| 3 | திருமதி.ஆர்.எம்.ஆர்.டப்.மஞ்சநாயக்க<br>பிரதி ஆணையாளர் நாயகம்<br>(பதிற் கடமைகள் புரிதல்) | சிங்கப்பூர் உள்நாட்டு இறைவரி அதிகாரசபைக்கான உத்தேச விஜயம் | சிங்கப்பூர் | 09.11.2013-12.11.2013 |
| 4 | திரு.டி.எம்.எல்.ஐ.திசாநாயக்க<br>ஆணையாளர் | 34 ஆவது CATA தொழில்நுட்ப மாநாடு | றுவண்டா | 21.10.2013-25.10.2013 |
| 5 | திரு.ஏ.ஏ.டி.யு.அபேசிங்க<br>ஆணையாளர் | இணைந்த வரி சபையின் 3 ஆவது சர்வதேச வரி மாநாடு | நைஜீரியா | 21.10.2013-25.10.2013 |
| 6 | செல்வி.டி.ஜி.பி.டப்.குணதிலக<br>ஆணையாளர் | 5 ஆவது சர்வதேச வரி உரையாடல் மாநாடு | மொறொக்கோ | 03.12.2013-07.12.2013 |
| 7 | திரு.ஜே.பி.டி.ஆர்.ஜயசேகர<br>ஆணையாளர் | சிங்கப்பூர் உள்நாட்டு இறைவரி அதிகாரசபைக்கான உத்தேச விஜயம் | சிங்கப்பூர் | 09.11.2013-12.11.2013 |
| 8 | திரு.டி.எம்.எஸ்.திசாநாயக்க<br>ஆணையாளர் | பயனுறுதிவாய்ந்த EOI – கணக்காய்வாளர்களின் சிந்திக்கும் ஆற்றல் | பிலிப்பைன்ஸ் | 10.09.2013-14.09.2013 |
| 9 | திரு.எம்.ஜி.சோமசந்திர<br>ஆணையாளர் | இணைந்த வரி சபையின் 3 ஆவது சர்வதேச வரி மாநாடு | நைஜீரியா | 21.10.2013-25.10.2013 |
| 10 | திரு.பி.ஜி.கே.சமரதுங்க<br>ஆணையாளர் | சர்வதேச திறன்விருத்தி செயலமர்வு | தாய்லாந்து & நியூசிலாந்து | 12.12.2013-21.12.2013 |
| 11 | திரு.கே.தர்மசேன<br>ஆணையாளர் | பயனுறுதிவாய்ந்த EOI – கணக்காய்வாளர்களின் சிந்திக்கும் ஆற்றல் | பிலிப்பைன்ஸ் | 10.09.2013-14.09.2013 |
| 12 | திரு.எச்.எம்.ஜி.விஜேசிங்க<br>ஆணையாளர் | IRBM- பிரித்தெடுக்கும் கைத்தொழிலுக்கான மாற்றல் விலையிடல் அம்சங்கள் | மலேசியா | 22.04.2013-26.04.2013 |
| 13 | திரு.கே.ஏ.டி.பி.கோரலேஆரச்சி<br>ஆணையாளர் | 34 ஆவது CATA தொழில்நுட்ப மாநாடு | றுவண்டா | 21.10.2013-25.10.2013 |
| 14 | திரு.ஏ.ஏ.தயாரத்ன<br>ஆணையாளர் | அரச நிதியில் நிதி திட்டமிடல் நிறைவேற்றுதர பதவியினருக்கான பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டம் | சிங்கப்பூர் | 29.07.2013-02.08.2013 |
| 15 | திரு.எம்.ஜி.குணசிறி<br>ஆணையாளர் | அரச நிதியில் நிதி திட்டமிடல் நிறைவேற்றுதர பதவியினருக்கான பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டம் | சிங்கப்பூர் | 29.07.2013-02.08.2013 |
| | | சிங்கப்பூர் உள்நாட்டு இறைவரி அதிகாரசபைக்கான உத்தேச விஜயம் | சிங்கப்பூர் | 09.11.2013-12.11.2013 |

| | | | | |
|---|---|---|---|---|
| 16 | திரு.டி.ரன்கல்ல<br>ஆணையாளர் | நிதி சுரண்டல் மற்றும் வரி ஏய்ப்புக்கெதிரான IRBM: IBFD | மலேசியா | 06.05.2013-10.05.2013 |
| | | சிங்கப்பூர் உள்நாட்டு இறைவரி அதிகாரசபைக்கான உத்தேச விஜயம் | சிங்கப்பூர் | 09.11.2013-12.11.2013 |
| 17 | திரு.ஆர்.எஸ்.சமரநாயக்க<br>ஆணையாளர் | IRBM-OECD: மாற்றல் விலையிடலுக்கான ஆய்வுக் கற்கைகள் | மலேசியா | 02.10.2013-06.10.2013 |
| 18 | திரு.எம்.எஸ்.எம்.சியான்<br>ஆணையாளர் | சர்வதேச வருகை தருநர் தலைமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் | ஐக்கிய அமெரிக்கா | 09.09.2013-28.09.2013 |
| | | சிங்கப்பூர் உள்நாட்டு இறைவரி அதிகாரசபைக்கான உத்தேச விஜயம் | சிங்கப்பூர் | 09.11.2013-12.11.2013 |
| 19 | திரு.யு.பி.எஸ்.ஏ.ஜயலத்<br>ஆணையாளர் | சிங்கப்பூர் உள்நாட்டு இறைவரி அதிகாரசபைக்கான உத்தேச விஜயம் | சிங்கப்பூர் | 09.11.2013-12.11.2013 |
| 20 | திரு.டி.யு.ஏ.ஜயவர்தன<br>ஆணையாளர் | அரச நிதியில் நிதி திட்டமிடல் நிறைவேற்றுதர பதவியினருக்கான பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டம் | சிங்கப்பூர் | 29.07.2013-02.08.2013 |
| | | சிங்கப்பூர் உள்நாட்டு இறைவரி அதிகாரசபைக்கான உத்தேச விஜயம் | சிங்கப்பூர் | 09.11.2013-12.11.2013 |
| 21 | திரு.ஜி.ஏ.ஜே.கஜதீர<br>ஆணையாளர் | IRBM:OECD; வரி மற்றும் குற்றம் | மலேசியா | 27.05.2013-31.05.2013 |
| 22 | திரு.ஜி.பி.மஹிந்த குமார<br>பிரதி ஆணையாளர் | வரி விதிப்பு தொடர்பான கருத்தரங்கு | சீனா | 18.10.2013-13.11.2013 |
| 23 | திரு.ஜி.எல்.ஜி.விமலரத்ன<br>பிரதி ஆணையாளர் | நிறுவன வரி சபையின் 3 ஆவது சர்வதேச வரி மாநாடு | நைஜீரியா | 21.10.2013-25.10.2013 |
| 24 | திரு.எல்.ஆர்.பெரேரா<br>பிரதி ஆணையாளர்<br>(பதிற் கடமைகள் புரிதல்) | நிறுவன வரி சபையின் 3 ஆவது சர்வதேச வரி மாநாடு | நைஜீரியா | 21.10.2013-25.10.2013 |
| 25 | திருமதி.ஆர்.பி.எச்.பெர்ணான்டோ<br>பிரதி ஆணையாளர்<br>(பதிற் கடமைகள் புரிதல்) | சர்வதேச வருகை தருநர் தலைமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் | ஐக்கிய அமெரிக்கா | 09.09.2013-28.09.2013 |
| 26 | திரு.பீ.கே.எஸ்.சாந்த<br>பிரதி ஆணையாளர்<br>(பதிற் கடமைகள் புரிதல்) | சர்வதேச வருகை தருநர் தலைமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் | ஐக்கிய அமெரிக்கா | 09.09.2013-28.09.2013 |
| 27 | திரு.கே.ஜி.பி.கே.தர்மவர்தன<br>சிரேஷ்ட வரி மதிப்பீட்டாளர் | CATA : உள்ளார்ந்த முகாமைத்துவத்தினை அடையப் பெறுதல் | ஐக்கிய இராச்சியம் | 29.07.2013-06.09.2013 |
| 28 | திரு.ஏ.எம்.நபீல்<br>சிரேஷ்ட வரி மதிப்பீட்டாளர் | வரி பகுப்பாய்வு மற்றும் வருமான எதிர்வுகூறல் நிகழ்ச்சித்திட்டம் | ஐக்கிய அமெரிக்கா | 23.06.2013-19.07.2013 |
| 29 | திரு.எம்.எல்.ஜே.ஜி.சந்திரசிறி<br>சிரேஷ்ட வரி மதிப்பீட்டாளர் | வரி பகுப்பாய்வு மற்றும் வருமான எதிர்வுகூறல் நிகழ்ச்சித்திட்டம் | ஐக்கிய அமெரிக்கா | 23.06.2013-19.07.2013 |
| 30 | செல்வி.ஏ.ஏ.டி.ஹேமலதா<br>வரி மதிப்பீட்டாளர் | CATA :பொதுநலவாய வரி பரிசோதகர்கள் பாடநெறி | ஐக்கிய இராச்சியம் | 29.07.2013-06.09.2013 |
| 31 | திரு.ஆர்.எம்.எஸ்.பி.கே.ரத்நாயக்க<br>சிரேஷ்ட வரி உத்தியோகத்தர் | சமூக நோக்கிலான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | இந்தியா | 02.09.2013-27.09.2013 |

### 1.5.3 அரசிறை முகாமைத்துவ மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தினூடாக அளிக்கப்பட்ட வெளிட்டு பயிற்சிகள்

குறித்த ஆண்டு காலப்பகுதியில், அரசிறை முகாமைத்துவ மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் அனுசரணையின் கீழ் இ – ஆட்சிமுறை மற்றும் மாற்றல் முகாமைத்துவம் தொடர்பான பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டமானது சிங்கப்பூரில் நடாத்தப்பட்டதுடன், அதற்கிணங்க, 117 அலுவலர்கள் வருமான நிருவாக முகாமைத்துவ தகவல் முறைமை (RAMIS) மீதான விசேட பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றியிருந்தார்கள்.

# பகுதி 11 – வரி நிருவாகம்

## அத்தியாயம் 2 - வருமான சேகரிப்பு

உள்நாட்டு இறைவரித் திணைக்களமானது அரசாங்க வருமான சேகரிப்பில் 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ரூபா 492,539,431,267/- (அரசிறை கொள்கை திணைக்களத்தின் கீழ் கணக்கு வைக்கப்பட்டுள்ள சமூகப் பொறுப்பு வரி, மாகாண சபைகளுக்கு முழுமையாக மாற்றப்பட்ட முத்திரைத் தீர்வை மற்றும் மாகாண சபைக்கு மாற்றப்பட்ட தேசக்கட்டுமான வரியின் கீழான வரி சேகரிப்பின் 1/3 உள்ளடங்கலாக) இனை தேறிய வருமானமாக சேகரித்துள்ளது. பல்வேறுபட்ட வரிகளின் சேகரிப்புக்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் பேணப்பட்டு வந்த மொத்த கோவைகளின் எண்ணிக்கையானது 2013.12.31 ஆந் திகதியன்று 577,414 ஆக இருந்துள்ளது.

### 2. 1 வரி செலுத்துனர்கள் மற்றும் வரிக்கோவைகளின் எண்ணிக்கை

ஆண்டு இறுதியின் போது வரி செலுத்துனர்களாக இத்திணைக்களத்தில் தம்மைப் பதிவு செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை அட்டவணை 01 இல் தரப்பட்டுள்ளது.

| அட்டவணை 01 – 2013.12.31 அன்றுள்ளவாறு வரி செலுத்துனர்களின் எண்ணிக்கையும் வரிக்கோவைகளும் | | |
|---|---|---|
| **வருமான வரி** | | |
| ***கம்பனிகள்*** | | |
| வதிவுள்ள கம்பனிகள் | 36,061 | |
| வதிவற்ற கம்பனிகள் | 583 | |
| அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும் அரச உடமை நிறுவனங்கள் | 46 | 36,690 |
| ***கம்பனிகளல்லாதவை*** | | |
| தனிப்பட்டவர்கள் | 161,482 | |
| பங்குடமையாளர்கள் | 17,180 | |
| ஆட்களின் குழுமங்கள் | 914 | |
| உ.பொ.செ. திட்டத்தின் கீழ் வருமான வரி செலுத்தும் ஊழியர்கள் (2013.03.31 இல் உள்ளவாறு)* | 297,240 | 476,816 |
| **மொத்த வருமான வரி செலுத்துனர்கள்** | | **513,506** |
| **பிற வரி செலுத்துனர்கள்** | | |
| பொ.சே.கட்டணத்திற்காக பதிவு செய்யப்பட்ட ஆட்கள் மற்றும் பங்குடமையாளர்கள் (ESC) | 4,561 | |
| பெறுமதிசேர் வரிக்காக பதிவு செய்த ஆட்கள் (VAT) | 14,851 | |
| நிதிச் சேவைகள் மீதான பெறுமதிசேர் வரிக்காக பதிவு செய்த ஆட்கள் | 170 | |
| விருப்பு பெ.சே.வரிக்காக பதிவு செய்த ஆட்கள் | 499 | |
| தேசக் கட்டுமான வரிக்காக பதிவு செய்த ஆட்கள் (NBT) | 20,480 | |
| பந்தய அறவீட்டு கோவைகள் | 1,067 | |
| சூதாட்ட அறவீட்டு கோவைகள் | 5 | |
| **மொத்த வரி செலுத்துனர்கள்** | | **41,628** |
| **உபொசே. வரி திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தொழில்தருநர்கள்** | 11,778 | |
| வட்டி மீதான நிறுத்திவைத்தல் வரி (நிறுத்திவைத்தல் முகவர்கள்) | 2,517 | |
| விதித்துரைக்கப்பட்ட கட்டணங்கள் மீதான நிறுத்திவைத்தல் வரி (முறையாக மாதாந்த அட்டவணைகளை அனுப்புவோர்) | 84 | |
| நிர்மாண அறவீடு | 253 | |
| முத்திரைத் தீர்வை (முறையாக மாதாந்த அட்டவணைகளை அனுப்புவோர்) | 7,648 | **22,280** |
| **2013.12.31 அன்றுள்ளவாறு வரி செலுத்துனர்களின் மொத்த எண்ணிக்கையும் வரிக்கோவைகளும்** | | **577,414** |

** Include 28,589 Government Employees and not include employees in the incomplete declarations furnished by Employers*

**குறிப்புக்கள்:**

i. ஊழியரொருவருக்கு பிற ஏதேனும் வருமானம் இருந்தாலன்றி உழைக்கும் போது செலுத்தும் வரித் திட்டத்தின் கீழ் கழிப்பனவு செய்யப்பட்ட சம்பளத்திற்கான வரி தொடர்பில் பொதுவாக தனியான கோவையொன்று இத்திணைக்களத்தில் பேணப்படுவதில்லை.

ii. இறுதி வரியாக மூலத்தில் வரி விதிக்கப் பெறுகின்ற வருமானத்தினைக் கொண்டுள்ள தனி நபர்கள் (வைப்புக்கள், திறைசேரி உண்டியல்கள் மற்றும் பங்கிலாபங்கள் போன்றவற்றின் மீதான வட்டி போன்றவை) ஒருங்கிணையாத கோவைகளின் வகையீட்டினுள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

iii. 218 எண்ணிக்கையினைக் கொண்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் மேற்குறிப்பிடப்பட்ட மொத்த எண்ணிக்கையினைக் கொண்ட கோவைகளினுள் உள்ளடங்கியுள்ளன.

## 2.2 மொத்த வருமான சேகரிப்பு

குறித்த ஆண்டுக்கான மொத்த வருமான சேகரிப்பான ரூபா 492,539 மில்லியனானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், ரூபா 49,084 மில்லியன் அல்லது 11.07% அதிகரிப்பினை காட்டுகின்றது. இந்த அடைவானது பிரதானமாக, இணக்கப்பாட்டின் வசதிப்படுத்தல் மற்றும் அமுலாக்கலுக்கான வரி நிருவாகத்தினால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாகவே சாத்தியமாகியுள்ளது. பொறுப்புக்கள் மற்றும் வரிகளின் சேகரிப்பு தொடர்பில் வரி செலுத்துனர்களின் மதிப்பீட்டினை இனங்காண்பதானது குறித்த அதிகரிப்பினை மேலும் தீவிரமாக்குவதற்கு ஏதுவாக அமைந்திருந்தது.

குறித்த ஆண்டில் அரசாங்க வருமானத்திற்கு பங்களிப்புச் செய்யப்பட்ட மொத்த உள்நாட்டு இறைவரி விகிதாசாரம் 43.30% ஆக இருந்துள்ளது. ஒத்திசைவான மதிப்பீடுகளுடனான ஒவ்வொரு வரி வகைகளின் கீழான வருமானத்துடன் ஒப்பிடுகையில் மொத்த வருமான சேகரிப்பானது இத்தகைய அடைவின் 89.90% இனைக் குறிப்பிடுகின்றது.

2013 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட பிரேரணைகளின் மூலம் எடுக்கப்பட்ட கொள்கைத் தீர்மானங்களின்படி, காலாண்டுக்கு ரூபா 3 மில்லியன் அல்லது வருடமொன்றுக்கு ரூபா 12 மில்லியனை விஞ்சாத வரி விதிக்கத்தக்க வழங்கலினைக் கொண்டுள்ள ஆட்களின் பெசேவ பதிவினை வலுவற்றதாக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. எவ்வாறாயினும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறித்த ஆண்டில் பெசேவ சேகரிப்பானது ரூபா 13,031 மில்லியனினால் அதிகரித்திருந்தது. இந்த அதிகரிப்புக்கு சாத்தியமான காரணம், வரி விதிக்கத்தக்க நடவடிக்கைகளாக மொத்த மற்றும் சில்லறை வர்த்தகத் துறையின் உள்ளடக்கத்தினூடாக பெறுமதி சேர் வரியின் நோக்கெல்லையினை விரிவாக்கக் கூடியதாக இருந்தமையே ஆகும்.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், குறித்த ஆண்டில் வருமான வரி சேகரிப்பானது 26.21% இனால் உயர்வடைந்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், ஒருங்கிணைந்த வருமான வரி மற்றும் வட்டி மீதான நிறுத்திவைத்தல் வரி என்பவற்றிலிருந்தான வருமானம் குறித்த ஆண்டில் அதிகரித்திருந்தது.


ஒத்திசைவான மதிப்பீடுகளுடனான ஒவ்வொரு வரி வகையின் கீழான வருமான ஒப்பீடானது அட்டவணை 02 இல் தரப்பட்டுள்ளதுடன் வரைபடம் 01 இன் மூலமாகவும் விபரிக்கப்பட்டுள்ளது. குறித்த ஆண்டு காலப்பகுதிக்கான காசுப் பாய்ச்சலானது அட்டவணை 03 இல் காட்டப்பட்டுள்ளதுடன் அது வரைபு 02 இன் மூலமாக விபரிக்கப்பட்டுள்ளது.

| அட்டவணை 02 – மொத்த வருமான சேகரிப்பு – 2013 | | | | |
|---|---|---|---|---|
| **வரி வகைகள்** | **வருமான மதிப்பீடு ரூபா (திருத்தப்பட்டது)** | **வருமான சேகரிப்பு ரூபா** | **மதிப்பீட்டில் சேகரிப்பின் விகிதம் %** | **மொத்த வருமான சேகரிப்பின் விகிதம் %** |
| வருமான வரி | 226,755,000,000 | 199,070,030,704 | 87.79% | 40.42% |
| பொருளாதார சேவைக் கட்டணம் | 12,763,000,000 | 6,595,600,863 | 51.68% | 1.34% |
| பற்று வரி | - | (83,401) | | 0.00% |
| பந்தய மற்றும் சூதாட்ட வரி | 850,000,000 | 591,870,451 | 69.63% | 0.12% |
| பங்கு கொடுக்கல்வாங்கல் வரி | 2,000,000,000 | 1,197,409,071 | 59.87% | 0.24% |
| பெறுமதிசேர் வரி | 255,353,000,000 | 217,686,923,042 | 85.25% | 44.20% |
| பொருட்கள் சேவைகள் வரி | 15,200,000 | 15,976,746 | 105.11% | 0.00% |
| புரள்வு வரி | 11,776,000 | 218,080,060 | 1851.90% | 0.04% |
| தேசிய பாதுகாப்பு அறவீடு | 2,435,000 | 2,149,612 | 88.28% | 0.00% |
| நிர்மாண கைத்தொழில் உத்தரவாத அறவீட்டு நிதியம் | 1,250,000,000 | 750,907,497 | 60.07% | 0.15% |
| தேசக் கட்டுமான வரி * | 48,782,000,000 | 59,397,332,038 | 121.76% | 12.06% |
| முத்திரைத் தீர்வை ** | - | 6,884,387,291 | | 1.40% |
| காணி வரி | 82,000,000 | 96,741,230 | 117.98% | 0.02% |
| சமூகப் பொறுப்பு அறவீடு *** | 14,000,000 | 32,106,064 | 229.33% | 0.01% |
| **மொத்த வருமான சேகரிப்பு** | **547,878,411,000** | **492,539,431,267** | **89.90%** | **100.00%** |

* மாகாண சபைக்கு மாற்றப்பட்ட தேசக் கட்டுமான வரி சேகரிப்பு தொகை ரூபா - 18,460,661,347.


** மாகாண சபைக்கு மாற்றப்பட்ட முத்திரைத் தீர்வை சேகரிப்பு தொகை ரூபா - 6,884,387,291.

*** அரசிறைக் கொள்கைத் திணைக்களத்திற்கு மாற்றப்பட்ட சமூகப் பொறுப்பு அறவீடு சேகரிப்பு தொகை ரூபா - 32,106,064.




## 2.3 மொத்த வருமான பாய்ச்சல்

| அட்டவணை 03 - மொத்த வருமான பாய்ச்சல் 2013 | | |
|---|---|---|
| மாதம் | வருமான சேகரிப்பு (சபொஅ உள்ளடங்கலாக) ரூபா | திரட்டிய வருமான சேகரிப்பு ரூபா |
| ஜனவரி | 41,485,980,187.68 | 41,485,980,187.68 |
| பெப்ரவரி | 44,795,059,800.28 | 86,281,039,987.96 |
| மார்ச் | 28,496,653,516.91 | 114,777,693,504.87 |
| ஏப்ரல் | 42,509,977,707.84 | 157,287,671,212.71 |
| மே | 43,511,825,075.19 | 200,799,496,287.90 |
| ஜூன் | 31,815,053,590.19 | 232,614,549,878.09 |
| ஜூலை | 38,080,548,642.05 | 270,695,098,520.14 |
| ஆகஸ்ட் | 45,960,792,774.97 | 316,655,891,295.11 |
| செப்டெம்பர் | 48,461,067,046.53 | 365,116,958,341.64 |
| ஒக்டோபர் | 37,342,569,392.60 | 402,459,527,734.24 |
| நவம்பர் | 50,451,232,385.65 | 452,910,760,119.89 |
| டிசெம்பர் | 39,628,671,147.42 | **492,539,431,267.31** |



## 2.4 முன்னைய ஆண்டுடனான வருமான ஒப்பீடு

| வரி வகை | 2013 வருமான சேகரிப்பு ரூபா: | 2012 வருமான சேகரிப்பு ரூபா: | சேகரிப்பில் உள்ளவாறான அதிகரிப்பு/ வீழ்ச்சி % |
|---|---|---|---|
| வருமான வரி | 199,070,030,704 | 157,728,902,903 | 26.21% |
| பொருளாதார சேவைக் கட்டணம் | 6,595,600,863 | 14,864,241,267 | -55.63% |
| பற்று வரி | (83,401) | -481,999 | -82.70% |
| பந்தய மற்றும் சூதாட்ட வரி | 591,870,451 | 289,175,098 | 104.68% |
| பங்கு கொடுக்கல்வாங்கல் வரி | 1,197,409,071 | 1,285,744,429 | -6.87% |
| பெறுமதிசேர் வரி | 217,686,923,042 | 204,656,032,805 | 6.37% |
| பொருட்கள் சேவைகள் வரி | 15,976,746 | 11,994,674 | 33.20% |
| புரள்வு வரி | 218,080,060 | 138,260,169 | 57.73% |
| தேசிய பாதுகாப்பு அறவீடு | 2,149,612 | 3,930,354 | -45.31% |
| நிர்மாண கைத்தொழில் உத்தரவாத அறவீட்டு நிதியம் | 750,907,497 | 709,648,933 | 5.81% |
| தேசக் கட்டுமான வரி | 59,397,332,038 | 57,105,793,114 | 4.01% |
| முத்திரைத் தீர்வை | 6,884,387,291 | 6,535,304,353 | 5.34% |
| காணி வரி | 96,741,230 | - | 0.00% |
| சமூகப் பொறுப்பு அறவீடு | 32,106,064 | 127,218,990 | -74.76% |
| **மொத்த வருமான சேகரிப்பு** | **492,539,431,267** | **443,455,765,090** | **11.07%** |



## 2.5 முத்திரைத் தீர்வை, தேசக் கட்டுமான வரி என்பவற்றின் வருமானத்தினை மாகாண சபைகளுக்கு மாற்றுதல்

2011 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளுக்கமைவாக மேற்கொள்ளப்பட்ட உரிய சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் சேகரிக்கப்பட்ட பின்வரும் வருமான வகையீடுகள் மாகாண சபைகளுக்கு மாற்றப்பட்டுள்ளன.

தேசக்கட்டுமான வரி சேகரிப்பில் 33.33%

முத்திரைத் தீர்வை சேகரிப்பில் 100%

அட்டவணை 04 ஆனது 2013 இல் மாகாண சபைகளுக்கு மாற்றப்பட்ட வருமான வரி மற்றும் திணைக்களத்தினால் சேகரிக்கப்பட்ட உரிய வரிகளின் மொத்தத் தொகையையும் காட்டுகின்றது.

**அட்டவணை 04 – வரி வருமானத்தினை மாகாண சபைகளுக்கு மாற்றுதல் - 2013**

| | மாகாண சபைகளுக்கு மாற்றல் தொகை (ரூபா) | மொத்த சேகரிப்பு (ரூபா) |
|---|---|---|
| தேசக் கட்டுமான வரி | 18,460,661,347.00 | 59,397,332,038.00 |
| முத்திரைத் தீர்வை | 6,884,387,290.00 | 6,884,387,290.00 |

## 2.6 வருமான சேகரிப்பு – சுய மதிப்பீடும் ஏனையவையும்

உத்தியோகபூர்வ வரி மதிப்பீடுகளின் மூலமான மொத்த சேகரிப்பில் அநேகமாக முழுமையாக பங்களிப்புச் செய்த சுய மதிப்பீடுகளுக்கான கொடுப்பனவுகள் (இறக்குமதிகள் மீதான பெறுமதி சேர் வரி மற்றும் தேசக் கட்டுமான வரி நீங்கலாக) குறித்த ஆண்டிற்கான மொத்த வருமான வரி திரட்டின் 4% ஆக மாத்திரம் அமைந்திருந்தது. இது சுய மதிப்பீடுகளின் அடிப்படையில் வருமானத்தினை சேகரிக்கும் அதன் நோக்கின் முதன்மைப் பகுதியாக சுய இணக்கப்பாட்டினை ஊக்குவிப்பதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகளின் வெற்றியினைக் காட்டுகின்றது. இது தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் இவ்வெற்றிக்கான வசதிகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. அட்டவணை 05 ஆனது தொகைகளுக்கிடையிலான ஒப்பீட்டினைக் காட்டுகின்றது.

**அட்டவணை 05 :- சுய மதிப்பீடு மற்றும் ஏனையவற்றின் அடிப்படையிலான சேகரிப்பின் ஒப்பீட்டு ரீதியான பகுப்பாய்வு**

| | 2011 (ரூபா'000) | | 2012 (ரூபா'000) | | 2013 (ரூபா'000) | |
|---|---|---|---|---|---|---|
| | சுய மதிப்பீடு | பிற | சுய மதிப்பீடு | பிற | சுய மதிப்பீடு | பிற |
| வருமான வரி | 130,990,294 | 4,983,219 | 152,640,354 | 5,088,549 | 189,657,462 | 9,412,569 |
| பெசேவ (இறக்குமதிகள் மீதான பெசேவ நீங்கலாக) | 98,826,247 | 4,283,614 | 101,816,629 | 3,370,532 | 117,622,485 | 3,474,351 |
| தேகவ (இறக்குமதிகள் மீதான பெசேவ நீங்கலாக) | 27,950,249 | 609,927 | 30,496,246 | 3,233,290 | 35,840,240 | 1,113,648 |
| ஏனையவை | 38,132,720 | 802,937 | 23,485,987 | 479,049 | 15,849,578 | 535,568 |
| மொத்தம் | 295,899,510 | 10,679,697 | **308,439,216** | **12,171,420** | **358,969,765** | **14,536,136** |
| மொத்த வருமானத்தின் நூற்று வீதம் % (இறக்குமதிகள் மீதான பெசேவ மற்றும் தேகவ நீங்கலாக) | 96.52% | 3.48% | 96% | 4% | 96% | 4% |

## 2.7 அரசாங்க வருமானத்திற்கான உள்நாட்டு இறைவரியின் பங்களிப்பு


அட்டவணை 06 ஆனது 2013 இல் அரசாங்க வருமானத்திற்கு உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் செய்யப்பட்ட பங்களிப்பு மற்றும் அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பனவற்றுடன் கடந்த நான்கு ஆண்டுகளில் அதன் போக்குகளையும் காட்டுகின்றது. வரைபு 03 ஆனது இத்தகைய பங்களிப்புக்களையும் விபரிக்கின்றது. 2013 இல் மொத்த அரசாங்க வருமானமானது ரூபா 1,137,447 மில்லியனுக்கு (நிதி திட்டமிடல் அமைச்சின் வருடாந்த அறிக்கை – 2013) அதிகரித்துள்ளதுடன் மொத்த அரசாங்க வருமானத்திலிருந்தான 43.30% பங்களிப்பினையும் பதிவு செய்துள்ளது.

பொருளாதார அபிவிருத்தி நோக்கானது, உள்ளக கட்டமைப்பு அபிவிருத்தி வாய்ப்புக்களினை கொண்டிருக்கின்ற முக்கிய பொருளாதார மற்றும் நடவடிக்கைகள் தொடர்பில் நுண்பாக பொருளியல் கொள்கைகளை பின்பற்றி வருவதுடன் உயர் தொழில்நுட்ப மற்றும் மின்பிறப்பாக்கிகளின் பயன்பாடு, தொழில்நுட்ப அறிமுகப்படுத்தலினை விருத்தி செய்தல் மற்றும் கொடுப்பனவுகளின் மீதியினை மேம்படுத்துவதற்காக ஏற்றுமதிகளை ஊக்குவித்தல் என்பன ஊக்குவிக்கப்பட்டு வசதியளிக்கப்பட்டன. வரிக் கொள்கையானது கடந்த காலத்தில் இந்நோக்கத்தினை அடைவதற்காக வரி விதிக்கப்படாத பொருளாதார செயற்பாடுகளில் கணிசமானளவாக காணப்படுகின்ற வரி ஊக்குவிப்புக்கள், விடுமுறைகள், விலக்களிப்புக்கள் மற்றும் சலுகை அடிப்படையிலான வரி வீதங்கள் மற்றும் ஏனையவை தொடர்பில் உறுதியான முடிவுகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்துள்ளது. இது விகிதாசாரங்களின் போக்கினை குறைப்பதற்கான மிக முக்கியமான காரணமாகவும் அமைகின்றது.

**அட்டவணை 06 – அரசாங்க வருமானத்திற்கு உள்நாட்டு இறைவரியின் பங்களிப்பும் பாரிய பொருளாதார நடவடிக்கைகளின் நடைமுறை விலைகளில் மொ.உ.உற்பத்தியும்**

| ஆண்டு | அரசாங்க வருமானம் ரூபா மில்.* | உ.இ.தி. சேகரிப்பு ரூபா மில். | அரசாங்க வருமானத்திற்கு உள்நாட்டு இறைவரியின் சேகரிப்பு % | பாரிய பொருளாதார நடவடிக்கைகளின் நடைமுறை விலைகளில் மொ.உ.உற்பத்தியும் ரூபா மில்.** | மொ.உ.உ. உள்நாட்டு இறைவரியின் சேகரிப்பு விகிதாசாரம் |
|---|---|---|---|---|---|
| 2009 | 699,643 | 353,015 | 50.46% | 4,835,293 | 7.30% |
| 2010 | 817,280 | 422,512 | 51.69% | 5,604,104 | 7.54% |
| 2011 | 934,812 | 443,830 | 47.48% | 6,544,009 | 6.78% |
| 2012 | 987,844 | 443,456 | 44.89% | 7,582,376 | 5.85% |
| 2013 | 1,137,447 | 492,539 | 43.30% | 8,673,870 | 5.68% |

மூலம்: - * நிதி திட்டமிடல் அமைச்சு (ஆண்டறிக்கை) ** இலங்கை மத்திய வங்கி (ஆண்டறிக்கை)



## 2.8 வரி விபரத்திரட்டு இணக்கப்பாடு

வரி செலுத்துனர்கள் சுய மதிப்பீட்டின் அடிப்படையில் உரிய நேரத்தில் வரி விபரத்திரட்டுக்களை நிரப்பி வரி செலுத்துவதனை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித் திட்டமானது குறித்த ஆண்டிலும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டது. சிறப்புரிமை அட்டைகளை (தங்கம் மற்றும் வெள்ளி) பரிசளித்தல், மோட்டார் வாகனங்களின் இறக்குமதி மீது வரிச் சலுகைகளை வழங்குதல், முன்கூட்டிய வரிக் கொடுப்பனவுகள் மீது கழிவுகள் வழங்குதல் போன்ற சுய இணக்கப்பாட்டினை விரிவாக்கும் நோக்குடன் தனிநபர் வரி செலுத்துனர்களுக்கு பயனளிக்கும் வகையிலான செயற்பாடுகள் தொடர்ந்தும் வினைத்திறனுடன் முன்னெடுக்கப்பட்டன.

அதற்கிணங்க, 2012/2013 வரி மதிப்பாண்டு காலப்பகுதியில் உரிய திகதியிலுள்ள ஒருங்கிணைந்த வருமான வரி விபரத்திரட்டுக்களை நிரப்பும் வீதாசாரமானது 56% ஆக இருந்துள்ளதுடன் உரிய திகதியிலிருந்தான ஒரு மாத காலப்பகுதியினுள் இது 70% இற்கு அதிகரித்திருந்தது. உரிய திகதியிலிருந்து இரண்டு மாதங்களின் பின்னரான இணக்கப்பாட்டு வீத வரியானது ஒருங்கிணைந்த துறையில் 75.5% இல் இருந்துள்ளது.

ஒருங்கிணைவில்லா துறையினைப் பொறுத்தவரையில், உரிய திகதியில் 41% ஆக இருந்துள்ளதுடன் உரிய திகதியிலிருந்து ஒரு மாத காலப்பகுதியினுள் 54% ஆகவும் இருந்துள்ளது. ஒருங்கிணைவில்லா துறையில் உரிய திகதியிலிருந்தான இரண்டு மாதங்களிலுள்ளான இணக்கப்பாட்டு வீத வரியானது 60% இல் இருந்துள்ளது.

அட்டவணை 07 ஆனது உரிய திகதியிலானதும் 2008/2009 இலிருந்து 2012/2013 வரையிலான ஆண்டுகளின் உரிய திகதியிலிருந்தான ஒரு மாத காலத்திலுள்ளானதுமான வருமான வரி விபரத்திரட்டு இணக்கப்பாட்டு வீத வரியினைக் காட்டுகின்றது. அட்டவணை 08 ஆனது ஏனைய வரிகள் மீதான விபரத்திரட்டு இணக்கப்பாட்டின் வீத வரிகளைக் காட்டுகின்றது.

**அட்டவணை 07– வருமான வரி விபரத்திரட்டு இணக்கப்பாடு 2008/2009 – 2011/2012**

| வரி மதிப்பீட்டாண்டு | துறை | முடிவுத் திகதி மீதான இணக்கப்பாடு | முடிவுத் திகதியிலிருந்து ஒரு மாத காலத்தினுள்ளான இணக்கப்பாடு |
|---|---|---|---|
| 2008/2009 | நிறுவனம் | 49% | 58% |
| | நிறுவனமல்லாத | 39% | 48% |
| 2009/2010 | நிறுவனம் | 52% | 66% |
| | நிறுவனமல்லாத | 41% | 53% |
| 2010/2011 | நிறுவனம் | 56% | 68% |
| | நிறுவனமல்லாத | 42% | 59% |
| 2011/2012 | நிறுவனம் | 56% | 60% |
| | நிறுவனமல்லாத | 39% | 48% |
| 2012/2013 | நிறுவனம் | 56% | 70% |
| | நிறுவனமல்லாத | 41% | 54% |

**அட்டவணை 08 – ஏனைய வரிகள் மீதான விபரத்திரட்டு இணக்கப்பாடு**

| | பெசேவ | பொசேக | தேகவ | உபொசெவ | |
|---|---|---|---|---|---|
| 2011 ஆண்டு | 94% | 85% | 89% | வரி மதிப்பீட்டாண்டு 2010/2011 | 63% |
| 2012 ஆண்டு | 89% | 80% | 79% | வரி மதிப்பீட்டாண்டு 2011/2012 | 52% |
| 2013 ஆண்டு | 78% | 99% | 77% | வரி மதிப்பீட்டாண்டு 2012/2013 | 53% |

## 2.9 வருமான வரி சேகரிப்பு

ஒருங்கிணைந்த வருமான வரியிலிருந்து திரட்டிய வருமானம் ; வருமான வரியின் மூலமான வருமான சேகரிப்பானது, 2013 இல் வட்டி மீதான ஒருங்கிணைந்த வருமான வரி தனிநபர் (தனிப்பட்ட) வருமான வரி, பங்கிலாப வரி மற்றும் நிறுத்திவைத்தல் வரி என்பனவற்றிலிருந்தான வருமான சேகரிப்பானது ரூபா 199,070 மில்லியனுக்கு அதிகரித்திருந்தது. இது 2012 ஆம் ஆண்டில் காணப்பட்ட ரூபா 157,728 உடன் ஒப்பிடுகையில் 26.21% மிகையானதாகும். குறித்த ஆண்டுக்காக திணைக்களத்தின் மொத்த வருமானத்தில் 40% இனை மொத்த வருமான வரி சேகரிப்பானது கொண்டிருந்ததுடன் அது 2012 இல் 36.20% ஆகவும் இருந்தது.

### 2.9.1 வருமான வரி சேகரிப்பு – துறை ரீதியான வகுப்பாக்கம்

மொத்த வருமான வரி சேகரிப்புக்கு (ரூபா 199,070 மில்லியன்) ஒருங்கிணைந்த துறையிலான பங்களிப்பு ரூபா 94,053 மில்லியனாக இருந்துள்ளது அல்லது மொத்த வருமான வரி சேகரிப்பில் 47% ஆக அமைந்திருந்தது. ஒருங்கிணையாத துறையானது ரூபா 105,016 மில்லியனை அல்லது 53% இனைப் பங்களிப்புச் செய்துள்ளது.

அட்டவணை 09 அதன் பொழிப்பினைக் காட்டுவதுடன் வரைபு 05 அது தொடர்பில் விபரிக்கின்றது.

**அட்டவணை 09 : - நிறுவனம் மற்றும் நிறுவனமல்லாத வருமான வரி சேகரிப்பு – 2012 & 2013**


| | 2013 | | 2012 | |
|---|---|---|---|---|
| | வரி சேகரிப்பு (ரூபா) | % | வரி சேகரிப்பு (ரூபா) | % |
| **நிறுவனம் *** | 94,053,497,550.00 | 47% | 77,054,016,253.00 | 49% |
| **நிறுவனமல்லாத **** | 105,016,533,154.00 | 53% | 80,674,886,650.00 | 51% |
| **மொத்தம்** | **199,070,030,704.00** | **100%** | **157,728,902,903.00** | **100%** |

குறிப்புகள் * 2012 இல் ரூபா 8,712 மில்லியன் மற்றும் 2013 இல் ரூபா 9,767 மில்லியன் பங்கிலாப வரியினையும் உள்ளடக்குகின்றது.

** உழைக்கும் போது செலுத்தும் வரி முறைமையின் கீழ் (PAYE) வருமான வரி செலுத்துகின்ற ஒருங்கிணைந்த துறை மற்றும் ஊழியர்களினால் அளிக்கப்படும் வட்டி வருமானம், சேவைகளிலிருந்து கழிப்பனவு செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்படும் நிறுத்திவைத்தல் வரி உள்ளடங்கலாக.

**வரைபு 05**

**ஒருங்கிணைந்த மற்றும் ஒருங்கிணையாத வருமான வரி சேகரிப்பு – 2012 & 2013**



### 2.9.2 மூலத்தின் அடிப்படையில் வருமான வரி சேகரிப்பு பகுப்பாய்வு

அட்டவணை 10 ஆனது குறித்த ஆண்டு காலப்பகுதியில் சேகரிக்கப்பட்ட மூலத்தின் அடிப்படையிலான வருமான வரி பகுப்பாய்வின் பொழிப்பினை (ஊழியம் மற்றும் ஏனையவை) காட்டுகின்றது.

| அட்டவணை 10 - வருமான வரி சேகரிப்பு - 2013 | | |
|---|---|---|
| மூலம் | சேகரிப்பு (ரூபா மில்.) | |
| **ஊழியம்** | | |
| உ.பொ.செ.வரி திட்டம் | 18,850.77 | |
| தவறுகையிலுள்ள வரிக்கான தண்டப்பணம் பற்றிய மதிப்பீடுகள் | 83.33 | **18,934.10** |
| **ஏனையவை** | | |
| சுய மதிப்பீடு மற்றும் தண்டப் பணம் பற்றிய மதிப்பீடுகள் | 92,832.93 | |
| ஆண்டுக் கட்டணங்கள், வேத்துரிமைக் கட்டணங்கள் அல்லது முகாமைத்துவக் கட்டணங்களின் கொடுப்பனவுகள் மீதான நிறுத்தி வைத்தல் வரி | 77,940.51 | |
| பிற மூலத்தின் கழிப்பனவு | 9,962.92 | |
| **மொத்த சேகரிப்பு** | | **180,736.36** |
| **கழி:** மீளளிப்பு | | (600.43) |
| **தேறிய சேகரிப்பு** | | **199,070.03** |

நிறுத்தி வைத்தல் வரி முறைமையினுள் உள்ளடங்காத வர்த்தகம் ,உயர் தொழில் ,வியாபாரம் , வாழ்க்கைத் தொழில் மற்றும் ஏனைய சேவைகள் மீதான வரிகள் கொண்டிருக்கின்ற தண்டப் .ஆகும் 92,833 பணங்களினுடனான சுய மதிப்பீடுகள் மற்றும் மதிப்பீடுகளின் மூலமான தொகை ரூபா

### 2.9.3 வருமான வரியுடன் தொடர்புடைய பிரதான கொள்கை மாற்றங்கள்

குறித்த ஆண்டு காலப்பகுதியில் வரவு செலவு திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு வரி விதிப்பு முன்மொழிவுகளை நிறைவேற்றுவதற்கு உள்நாட்டு இறைவரிச் சட்டத்தில் பின்வரும் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

***விலக்களிப்புக்கள்***

i. பின்வரும் நிறுவனங்களின் ஏதேனும் இலாபங்கள் அல்லது வருமானம் (பங்கிலாபம் மற்றும் வட்டி நீங்கலாக) வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன.

- 1974 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை பொது பயிலுனர்கள் கல்லூரி.
- 1996 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை சமூக பாதுகாப்பு சபை சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை சமூக பாதுகாப்பு சபை.
- ஒதுக்கீட்டு நிதியத்திலிருந்து பாராளுமன்றத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏதேனும் நிதியில் அல்லது அரசாங்கத்தினூடாக ஏற்பாடு செய்யப்பட்ட ஏதேனும் கடனிலிருந்து கட்டணமின்றி சேவைகளை வழங்குகின்ற ஏதேனும் பொதுக் கூட்டுத்தாபனம்.
- தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தினூடாக ஒருங்கிணைத்துள்ள ஏதேனும் இலங்கை சேமிப்பு வங்கி.
- லங்கா புத்திர அபிவிருத்தி வங்கி.

ii. பின்வரும் இலாபங்களும் வருமானங்களும் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன.

(அ) ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கான (இலங்கை தவிர்ந்த) பொருட்களின் ஏற்றுமதிகளிலிருந்தான இலாபங்கள்.

(ஆ) கம்பனிகள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்படாத கல்வி அமைச்சு மற்றும் அத்தகைய அமைச்சினால் வழங்கப்பட்ட சுற்றறிக்கைகளினால் உருவாக்கப்பட்ட அரசாங்க வகையீட்டினைப் பின்பற்றுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள கல்வி அமைச்சில் பதிவு செய்யப்பட்டுள்ளதுமான அரசாங்க உதவியளிக்கப்படும் ஏதேனும் தனியார் பாடசாலையின் இலாபங்களும் வருமானங்களும்.

(இ) சேதன வளமாக்கிகள் மற்றும் பூச்சி கொல்லிகளின் தயாரிப்பு, விநியோகம் அல்லது விற்பனையிலிருந்தான இலாபங்கள்.

(ஈ) இலங்கைக்கு வெளியே மேற்கொள்ளப்படும் வெளிநாட்டு நேரடி முதலீடு 50 மில்லியன் ஐ.அ.டொலரினை விஞ்சுமிடத்து, அத்தகைய சேவைகள் அந்த நோக்கத்திற்காக விடுக்கப்பட்ட கோரிக்கை மீது இலங்கை முதலீட்டு சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறு,

- இலங்கையில் அத்தகைய நடவடிக்கைகளினை நடாத்துவது மிகவும் அத்தியாவசியமானது; மற்றும்
- இலங்கையில் அவற்றினைப் பெற்றுக் கொள்ள முடியாதவையாக காணப்படுமாயின்;

(உ) இலங்கை பிணைகள் மற்றும் பரிமாற்று ஆணைக்குழுவினால் (நிறுத்திவைத்தல் வரி கழிப்பனவு உள்ளடங்கலாக) உரிமமளிக்கப்பட்ட ஒருங்கிணைந்த கடன் பிணை முறிகள் ஏதேனும் விலை கூறப்பட்ட பங்குப் பரிமாற்றத்தில் மேற்கொள்ளப்பட்ட முதலீட்டிலிருந்தான வட்டி வருமானம்.

(ஊ) பொதுத் திறைசேரியின் ஒப்புதலுடன் (நிறுத்திவைத்தல் வரி கழிப்பனவு உள்ளடங்கலாக) வழங்கப்பட்ட ஏதேனும் மாநகர முறியிலிருந்தான வட்டி வருமானம்.

(எ) நிபுணர்களின் வேதனாதிகள்

இந்நோக்கத்திற்காக விடுக்கப்பட்ட கோரிக்கை தொடர்பில் முதலீட்டு சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறான கம்பனியின் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு தேவையான அத்தகைய சேவைகளாயின், 50 மில்லியன் அமெரிக்க டொலரினை விஞ்சுகின்ற வெளிநாட்டு நேரடி முதலீடுகளில் மொத்த முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்குமிடத்து, உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரிவு 17அ அல்லது பிரிவு 16ஈ இன் கீழ் வரி விடுமுறை காலப்பகுதியில் இலங்கை பிரஜாவுரிமையைக் கொண்டிருக்காத ஒருவர் முதலீட்டு சபையில் பதிவு செய்யப்பட்ட கம்பனியொன்றின் மூலமாக இலங்கைக்கு கொண்டு வருகின்றதும், உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பந்தி (ஈஈ) இற்கமைவாக நிபுணர் ஒருவராக இருக்கும் தனியார் எவரேனினதும் இலங்கையில் எழுகின்ற வேதனாதிகளிலிருந்தான வருமானம். (ஆகக் கூடுதலாக 5 நிபுணர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டது)

(ஏ) பிணைகளின் முதலீட்டிலிருந்தான வட்டி

(ஐ) விவசாய நிலங்களில் புதுப்பிக்கத்தக்க சக்தி பயிர்களை பயிரிடுவதிலிருந்தான இலாபங்கள்

(ஒ) இலங்கைக்கு வெளியே சம்பாதிக்கும் இலங்கை பிரஜைகள்

- இலங்கையில் வதிவினையும் பிரஜாவுரிமையினையும் கொண்ட தனிநபரொருவரினால் இலங்கைக்கு வெளியேயுள்ள ஏதேனும் சொத்தொன்றிலிருந்து பெறப்படும் இலாபங்களும் வருமானங்களும், இலங்கையிலுள்ள வங்கியொன்றினூடாக அத்தகைய வருமானங்கள் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படுமாயின் அத்தகைய வருமானமானது வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது.

-

- உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரிவு 15 இல் குறித்துரைக்கப்பட்டவாறு இலங்கைக்கு வருகை தந்து இலங்கையில் தங்கியிருக்கும் இரட்டைப் பிரஜாவுரிமைக்கு ஏற்புடையவர்களினால் இலங்கைக்கு வெளியிலிருந்து பெறப்படும் இலாபங்கள் மற்றும் இலாபங்களின் மீதான விலக்களிப்பானது, வேறு ஏதேனும் நாட்டில் நிரந்தர வதிவுரிமையைப் பெற்றுள்ள அல்லது அதனையொத்த தன்மையினைக் கொண்டுள்ள இலங்கையில் மற்றும் வேறு ஏதேனும் நாட்டில் பிரஜாவுரிமையைப் பெற்றுள்ள அத்தகைய தனிநபர்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது.

(உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 79(3) ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட இடைவிடாத 365 நாட்களினைக் கொண்ட காலப்பகுதியில் இலங்கையில் வதியாமையினை அடிப்படையாகக் கொண்டு தனிநபரொருவரின் வதிவுரிமையைத் தீர்மானிக்கும் விதியானது நீக்கப்பட்டது. அதற்கிணங்க, வதிவுரிமையைத் தீர்மானிப்பது தொடர்பில் 183 நாட்கள் மட்டுமே ஏற்புடையதாகும்)

(ஓ) வெளிநாட்டில் வேலை புரிந்து நாடு திரும்புகின்ற எவரேனும் தனிநபரொருவர் அவரின் சேமிப்பினை முதலீடு செய்து ஆரம்பிக்கும் புதிய வியாபாரமொன்றின் புரள்வு மற்றும் அத்தகைய புதிய வியாபாரத்தின் அனைத்து வருமானங்கள், இலாபங்களின் மீதான அனைத்து செலுத்தத்தக்க வரிகளின் மீதும் 5 வருட காலப்பகுதிக்கு வரி விலக்களிக்கப்பட்டுள்ளது.

**சலுகை வீத வரிகள்**

i. அலகு நம்பிக்கை முகாமைத்துவ கம்பனிகளுடன் தொடர்புடைய ஏற்புடைய வரி வீதமானது 10% இற்கு குறைக்கப்பட்டிருந்தது.

ii. பிரிவு 40அ இல் குறித்துரைக்கப்பட்ட விமானமோட்டிகள் மற்றும் 40ஆ இல் குறித்துரைக்கப்பட்ட தகைமைவாய்ந்த ஊழியர்களின் வருமானத்திலிருந்தான இலாபங்கள் ஆகக் கூடுதலான வீதமான 16% இற்கு குறைக்கப்பட்டது.

iii. அனைத்து ஊழியர்களுக்கும் பொதுவில் ஏற்புடையதல்லாத ஊழிய இழப்புக்கான நட்டஈடாக விளங்குகின்ற ஊழிய வருமானம் மீதான ஏற்புடைய ஆகக் கூடிய வருமான வரி வீதமானது 16% இற்கு குறைக்கப்பட்டது.

iv. பால் பண்ணை நடவடிக்கைகளிலிருந்தான இலாபங்கள் மீதான வரி வீதமானது 10% இற்கு குறைக்கப்பட்டது.

v. வெளிநாட்டு நாணய வடிவில் பெறப்பட்ட கொடுப்பனவுகளுக்காக வெளிநாட்டு கப்பல்களுக்கு வழங்கப்பட்ட (கப்பலில் நுகருவதற்காக) இலங்கையில் தயாரிக்கப்பட்ட பொருட்களின் வழங்கல் அல்லது சேவை வழங்கலிலிருந்தான இலாபம் மற்றும் வருமானம் 12% வரி வீதத்தில் வரி விதிக்கப்படுகின்றன.

vi. இலங்கை மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்ட அந்நியச் செலாவணி கணக்கினூடாக வெளிநாட்டு நாணய வடிவிலான கொடுப்பனவுக்காக இலங்கையில் தயாரிக்கப்பட்ட ஏதேனும் உற்பத்திப் பொருட்களின் விற்பனையிலிருந்தான இலாபம் மற்றும் வருமானத்தின் மீது 12% வரி விதிக்கப்படுகின்றது.

vii. ஏற்றுமதி நோக்கில் இலங்கை முதலீட்டு சபையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமொன்றினால் இலங்கையில் தயாரிக்கப்பட்ட பொருட்களின் விற்பனை தொடர்பில் :

- உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 16இ, 17அ அல்லது 16ஈ பிரிவுகள் அல்லது உபாய அபிவிருத்தி கருத்திட்ட சட்டத்தின் கீழ் வரி விடுமுறைகளை அனுபவிக்கின்ற ஏதேனும் இலங்கை முதலீட்டு சபையில் பதிவு செய்யப்பட்ட தொழில்முயற்சியானது, கருத்திட்ட அமுலாக்கல் காலப்பகுதியில், இலங்கை முதலீட்டு சபை உடன்படிக்கையின் ஏற்பாடுகளின் கீழ் சுங்கத் தீர்வையற்ற அடிப்படையில் கருத்திட்டத்துடன் தொடர்புடைய பொருட்கள் அல்லது மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதியளிக்கப்படுகின்றது; அல்லது,

- ஏதேனும் அரசாங்க அதிகாரத்தின் கீழ் சுங்கத் தீர்வையற்ற அடிப்படையில் விதித்துரைக்கப்பட்ட பொருட்களை இறக்குமதி செய்யும் எவரேனும் ஆள்;

வரி நோக்கங்களுக்காக இறக்குமதி மாற்றீடாக இலங்கை முதலீட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தொகை வரையில் அத்தகைய பொருட்களின் தயாரிப்பாளரின் ஏற்றுமதிகளாக கருதப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

viii. 12% சலுகை வரி வீதத்தின் விண்ணப்பித்தலுக்காக மரபு முறை சாராத பொருட்களாக வகைப்படுத்தப்பட்ட “பாரியளவிலான சேதன தேயிலை”.

ix. 59ஆ பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ரூபா 300 மில்லியன் வருடாந்த புரள்வு 10% சலுகை வரி வீதத்தின் விண்ணப்பித்தலுக்காக ரூபா 500 மில்லியனுக்கு மீளாய்வு செய்யப்பட்டது.

x. 12% சலுகை வீதத்தில் வரி விதிக்கப்படும் சிறியளவிலான ஏதேனும் ஹைதரசன் மின்வலு கருத்திட்ட அல்லது வேறு ஏதேனும் மாற்று வலு மூலத் தொழிற்பாட்டிலிருந்தான எவரேனும் ஆள் அல்லது பங்குடமையின் இலாபங்களும் வருமானங்களும்.

xi. 2013.04.01 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் பங்குகளை நிரல்படுத்திய ஏதேனும் கம்பனியினால் பொதுமக்களுக்கு வழங்கப்படும் அதன் பங்குகளில் 10% இற்கு மேற்பட்ட செலுத்தத்தக்க வரியானது, நிரல்படுத்தப்பட்ட அத்தகைய பங்குகளை வரி மதிப்பீட்டாண்டுக்காகவும், வரி மதிப்பீட்டாண்டினை உடனடுத்து வரும் இரண்டு வரி மதிப்பீட்டாண்டுகளுக்காகவும் 50% இனால் குறைக்கப்பட்டது.

**இலாபங்கள் மற்றும் வருமானக் கணிப்பீடு**

i. ஏதேனும் பொறி, இயந்திரம் அல்லது உபகரணத்திற்கான கொள்ளல் செலவு- (2013 ஏப்ரல் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் கொள்வனவு செய்யப்பட்டது)

- வருடமொன்றின் 50% இல் கழிப்பனவுக்காக அனுமதிக்கப்பட்ட ஏதேனும் புதிய தொழில்நுட்பத்தினை அறிமுகப்படுத்துதல் அல்லது தொழில்நுட்ப தரமுயர்த்தல் நோக்கத்திற்காக;
- மாற்று வலு மூலங்களில் மொத்த மின் பிறப்பாக்கல் தேவைப்பட்டால் 30% இற்கும் அதிகமானவற்றினை வழங்குகின்றவை வலு வினைத்திறன் நோக்கங்களுக்காக முழுமையாக கழிப்பனவு செய்யப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன;

- இடர் முகாமைத்துவ முறைமையுடன் தொடர்புடைய CSE தேவைப்பாடுகளுடன் இணங்கியவாறான அலுவலகத்திற்கு உதவி புரியும் முகவர் முறைமையின் தாபித்தலுக்கு முழுமையான கழிப்பனவுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது;
- ஏதேனும் ஏற்றுமதி கைத்தொழிலானது ஆண்டொன்றுக்கு 50% இல் கழிப்பனவு செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

ii. அரசாங்கத்தினால் அறவீடு செய்யப்படும் விசேட வரிகள்

அரசாங்கத்திற்காக விசேட வரி என்ற வகையில் பொறுப்பேற்கும் பொதுக்கூட்டுத்தாபனம் அல்லது அரசாங்கத்திற்கு சொந்தமான வியாபாரமொன்றினால் செலுத்தப்படும் ஏதேனும் தொகையானது கழிப்பனவு செய்யத்தக்கதான செலவினமாக அனுமதிக்கப்பட்டுள்ளது.

iii. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவுகள்

அரசாங்க நிறுவனங்களினூடாக மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மீதான செலவினத்திற்காக அனுமதிக்கப்பட்ட மும்மடங்கு கழிப்பனவானது தனியார் துறை நிறுவனங்களினூடாக மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சி மீது ஏற்பட்ட அத்தகைய செலவினத்திற்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

iv. விளம்பர செலவுகள்

விளையாட்டுத்துறை அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச விளையாட்டு நிகழ்வுகளின் விசேட அனுசரணைக்காக விளம்பரச் செலவுகளின் (25%) கழிப்பனவு மீதான கட்டுப்பாடானது நீக்கப்பட்டுள்ளது. (2012 ஆகஸ்ட் 1 இலிருந்து அமுலுக்கு வரும் வகையில்)

**வட்டி வருமானம் மீதான நிறுத்திவைத்தல் வரி**

வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படாத ஒருங்கிணைந்த கடன் பிணைகள் மீதான வட்டி வருமானம் தொடர்பில்:

அ) வழங்கப்பட்ட நேரத்தில் உரிய காலப் பகுதிக்கான முழு வட்டி மீதான கழிப்பனவு அல்லது ஒவ்வொரு மீளாய்வு காலப் பகுதியின் ஆரம்பித்தலும், மிதக்கும் வட்டி வீதத்துடன் வழங்கப்பட்ட பிணைகளாக இருக்குமாயின்; மற்றும்

ஆ) முன்னதாக கழிப்பனவு செய்யப்பட்டிருக்காதவிடத்து, வட்டி கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகையில் கழிப்பனவு செய்யப்படும். (2011 ஏப்ரல் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர்)

**கால எல்லை**

2 வருட கால எல்லைப் பகுதியானது 2013 ஏப்ரல் 1 ஆம் திகதியிலிருந்து ஆரம்பமாகும் வரி மதிப்பீட்டாண்டிலிருந்து வலுப்பெறும் வகையில் 18 மாதங்களுக்கு குறைக்கப்பட்டுள்ளது.

**மாற்றல் விலையிடல் சட்டவாக்கம்**

(அ) ஒன்றிணைந்த கையேற்குகைகளின் உள்ளூர் கொடுக்கல் வாங்கல்களில் பொருட்கள் சேவைகளின் கைக்காசு விலையினைத் தீர்மானிப்பதற்காக தனியான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஆ) முன்கூட்டியே விலையிடும் ஒழுங்கமைப்புக்களுக்கான ஏற்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.


## 2.10 பெறுமதி சேர் வரி சேகரிப்பு

குறித்த ஆண்டு காலப்பகுதியில் பெறுமதி சேர் வரி சேகரிப்பானது ரூபா 217,686 மில்லியனாக அமைந்திருந்ததுடன் குறித்த ஆண்டுக்கென மதிப்பீடு செய்யப்பட்ட தொகையான ரூபா 255,353 உடன் ஒப்பிடுகையில் ரூபா 36,667 மில்லியன் வீழ்ச்சியினைப் பதிவு செய்துள்ளது. எவ்வாறாயினும், இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 13,030 மில்லியன் அல்லது 6.37% அதிகரிப்பினைப் பதிவு செய்துள்ளது. உள்நாட்டு வழங்கல்களின் மீது சேகரிக்கப்பட்ட பெறுமதி சேர் வரியின் பாகமானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கணிசமானளவு அதிகரிப்பினைக் காட்டியுள்ள அதேவேளையில், குறித்த ஆண்டு காலப்பகுதியில் இறக்குமதிகள் மீதான பெறுமதி சேர் வரியானது சிறியளவிலான வீழ்ச்சியினையும் காட்டியுள்ளது. குறித்த ஆண்டு காலப் பகுதியில் சேகரிக்கப்பட்ட மொத்த உள்நாட்டு பெறுமதி சேர் வரியானது ரூபா 121,096 மில்லியனாக இருந்த அதேவேளையில் 2012 ஆம் ஆண்டில் ரூபா 105,187 மில்லியனாக காணப்பட்டதுடன் இது ரூபா 15,909 மில்லியன் அதிகரிப்பினைக் காட்டுகின்றது. 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இறக்குமதிகள் மீது சேகரிக்கப்பட்ட மொத்தப் பெறுமதி சேர் வரியானது ரூபா 99,468 மில்லியனாக இருந்துள்ளதுடன் இது 2013 இல் ரூபா 96,590 மில்லியனாகவும் இருந்துள்ளது.

அட்டவணை II ஆனது வரைபில் சித்தரிக்கப்பட்டுள்ள பெறுமதி சேர் வரி மீளளிப்புக்கள் மற்றும் தேறிய சேகரிப்பு என்பவற்றின் துறை வாரியான மொத்தத்தினைக் காட்டுகின்றது.

**அட்டவணை 11 – பெறுமதிசேர் வரி மொத்த சேகரிப்பும் மீள் கொடுப்பனவுகளும்**

| துறை | 2012 | | 2013 | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | தேறிய சேகரிப்பு (ரூபா மில்.) | | மொத்த சேகரிப்பு (ரூபா மில்.) | | மீளளிப்புகள் | தேறிய சேகரிப்பு (ரூபா மில்.) | |
| **உற்பத்தித் துறை** | | 38,487.28 | | 44,071.51 | 352.77 | | 43,718.74 |
| **உற்பத்தியல்லா துறை** | | | | | | | |
| -சேவைகள் | 45,507.60 | | 56,256.74 | | 106.92 | 56,149.83 | |
| -நிதியியற் சேவைகள் | 21,090.80 | | 21,203.51 | | | 21,203.51 | |
| -விருப்பு பெசேவ | 101.48 | 66,699.88 | 24.76 | 77,485.01 | | | 77,378.10 |
| **இறக்குமதிகள்** | | 99,468.87 | | 96,590.09 | | | 96,590.08 |
| **மொத்தம்** | | **204,656.03** | | **218,146.61** | **459.69** | | **217,686.92** |



அட்டவணை 12 ஆனது மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு பெறுமதி சேர் வரி சேகரிப்பு மற்றும் பங்களிப்பு ஆகியவற்றின் துறை ரீதியான வகையீட்டினைக் காட்டுகின்றது.

**அட்டவணை 12 – மொ.உ.உற்பத்திக்கான பெ.சே.வரியின் பங்களிப்பு தொடர்பான துறை ரீதியான பகுப்பாய்வு**

| துறை | 2012 | | 2013 | | மொ.உ.உற்பத்தியில் பெசேவ சேகரிப்பின் சதவீதம் | |
|---|---|---|---|---|---|---|
| | தேறிய சேகரிப்பு (ரூபா) | % | தேறிய சேகரிப்பு (ரூபா) | % | 2012 | 2013 |
| உற்பத்தித் துறை | 38,487,278,292 | 18.81% | 43,718,740,385 | 20.08% | 0.51% | 0.50% |
| உற்பத்தியல்லா துறை | 66,699,883,293 | 32.59% | 77,378,096,221 | 35.55% | 0.88% | 0.89% |
| இறக்குமதிகள் மீதான | 99,468,871,220 | 48.60% | 96,590,086,435 | 44.37% | 1.31% | 1.11% |
| **மொத்தம்** | **204,656,032,805** | **100.00%** | **217,686,923,041** | **100.00%** | **2.70%** | **2.50%** |

### 2.10.1 பெறுமதி சேர் வரியின் கைத்தொழில் ரீதியான பகுப்பாய்வு

அட்டவணை 13 ஆனது வங்கியியல், காப்புறுதி, ஹோட்டல் மற்றும் உணவகம், நிர்மாணம், மின்சாரம் என்பவற்றின் கீழ் வகைப்படுத்தப்பட்ட உள்நாட்டு பெறுமதி சேர் வரியினையும் மொத்த பெறுமதி சேர் வரி வருமானத்துக்கு அவை வழங்கிய பங்களிப்பினையும் காட்டுகின்றது.

**அட்டவணை 13 – பெ.சே.வரி உள்ளூர் மொத்தம் – உற்பத்தி மற்றும் சேவைகள் துறைகள்**

| துறை | 2011 (ரூபா மில்.) | 2012 (ரூபா மில்.) | முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சி /அதிகரிப்பு % | 2013 (ரூபா மில்.) | முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சி /அதிகரிப்பு % |
|---|---|---|---|---|---|
| வங்கித்தொழில் | 14,828 | 14,380 | -3.02% | 15,921 | 10.72% |
| காப்புறுதி | 4,207 | 4,456 | 5.92% | 4,882 | 9.56% |
| ஹோட்டல் மற்றும் சுற்றுலா விடுதி | 4,590 | 5,396 | 17.56% | 5,672 | 5.11% |
| நிர்மாணம் | 6,828 | 5,871 | -14.02% | 5,293 | -9.85% |
| மின்சாரம் மற்றும் வாயு | 269 | 570 | 112% | 502 | -11.93% |
| இறக்குமதிகள் | 16,103 | 6,949 | -56.85% | 9,113 | 31.14% |
| நிதியளிப்பு | 11,072 | 10,576 | -4.48% | 11,860 | 12.14% |
| தொடர்பாடல் | 1,048 | 211 | -79.87% | 256 | 21.33% |
| பெற்றோலிய உற்பத்தி | 271 | 269 | -0.74% | 344 | 27.88% |
| குடிவகையும் மதுபானமும் | 8,877 | 9,043 | 1.87% | 9,747 | 7.79% |
| வகைப்படுத்தப்படாத சேவைகள் | 7,291 | 7,633 | 4.69% | 7,916 | 3.71% |
| வகைப்படுத்தப்படாத உற்பத்திகள் | 7,588 | 7,105 | -6.37% | 9,517 | 33.95% |
| ஏனையவை | 20,139 | 32,723 | 62.49% | 39,516 | 20.76% |
| மொத்தம் | **103,110** | **105,187** | **2.01%** | **120,538** | **14.59%** |

### 2.10.2 பெறுமதி சேர் வரியுடன் தொடர்புடைய பிரதான கொள்கை மாற்றங்கள்

**எல்லைகளை அதிகரித்தல்;**

அத்தகைய ஆள் அல்லது பங்குடமையினால் நடாத்தப்பட்டு வரும் அனைத்து வியாபாரங்களிலிருந்தும் ரூபா 12 மில்லியனை விஞ்சாத வருடாந்த வழங்கல்களினை வழங்கி வரும் எவரேனும் ஆள் அல்லது பங்குடமை.

குறித்த ஆண்டு காலப்பகுதியில் பெறுமதி சேர் வரிச் சட்டத்தில் பின்வரும் விலக்களிப்புக்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

(அ) பின்வரும் நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட வழங்கல்கள்

- இலங்கை மத்திய வங்கி (நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர் வரி உள்ளடங்கலாக)
- அரசாங்கத்தினூடாக ஏற்பாடு செய்யப்பட்ட ஏதேனும் கடனில் கட்டணமின்றி அரசாங்கத்தின் சார்பில் சேவை வழங்கலினை விரிவாக்கம் செய்வதற்கான ஏதேனும் பொதுக் கூட்டுத்தாபனம்.

(ஆ)அலகு நம்பிக்கை முகாமைத்துவ கம்பனியினால் நம்பிக்கை அலகுக்குரிய சேவைகளை வழங்குதல்

- விளையாட்டுத் துறையுடன் தொடர்புடைய ஏதேனும் நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்காக இலங்கைக்கு வருகை தரும் ஏதேனும் விளையாட்டு நிகழ்வின் எவரேனும் விளையாட்டு வீரர், ஏற்பாட்டாளர் அல்லது அனுசரணையாளருக்கான ஹோட்டல் தங்குமிட வசதி.
- தெங்கு கழிவுகளிலிருந்து உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட உற்பத்திப் பொருட்கள் (coco peat, தும்புக் கயிறு, grow pellets, grow bags, முறுக்கு நார், தென்னம் பொச்சு)
- சேதன வளமாக்கிகளும் பூச்சி கொல்லிகளும்

(இ) இறக்குமதியும் வழங்கலும் பின்வருவனவற்றினை உள்ளடக்குகின்றது:

- எச்.எஸ்.குறியீட்டு இல. 8704.23.10, 8704.23.20, 8704.32.10, 8704.32.20. இன் கீழான பவுஸர்கள்
- எச்.எஸ்.குறியீட்டு இல. 84.29 இன் கீழான புல்டோஸர், மட்டப்படுத்தும் இயந்திரம், மண் அகழ்வு இயந்திரம்
- எச்.எஸ்.குறியீட்டு இல. 8705.30.10 இன் கீழான தீயணைப்பு வாகனங்கள்
- எச்.எஸ்.குறியீட்டு இல. 8701.20.10 இன் கீழான சிறிய ட்ரெயிலர்களுக்கான வீதி உழவு இயந்திரங்கள்
- எச்.எஸ்.குறியீட்டு இல. 8543.90 இன் கீழான சக்தி சேமிப்பு மின்குமிழ்களின் தயாரிப்புக்கான மூலப் பொருட்கள்

(ஈ) மொத்த விற்பனை மற்றும் சில்லறை வியாபாரங்களுக்கான பெசேவ விதிப்பனவு:

- பெசேவ ஆனது மொத்த விற்பனை அல்லது சில்லறை வியாபாரம் மற்றும் காலாண்டுக்கு ரூபா 500 மில்லியனுக்கு குறையாத புரள்வுகள்/வழங்கல்களினை (விலக்களிப்பு பெற்ற புரள்வு/வழங்கல்கள் உள்ளடங்கலாக) மேற்கொள்கின்ற எவரேனும் ஆள் அல்லது பங்குடமையின் மீது விதிக்கப்பட்டது. எவ்வாறாயினும், பெசேவ ஆனது பொறுப்புடைய வழங்கல்களின் மீது மாத்திரம் அறவிடத்தக்கதாகும்.

(உ) தரம், தன்மை அல்லது ஏதேனும் துணி/ஆடையின் பெறுமதியின் மேம்படுத்தலுக்கான சேவைகளின் மீது ஏற்புடைய பெசேவ விலக்களிப்பானது ஏற்றுமதியாளர் அல்லாதோருக்கு அளிக்கப்படும் அத்தகைய சேவைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன் நூலுடன் தொடர்புடைய அத்தகைய சேவைகளையும் உள்ளடக்கியதாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது.


## 2.11 தேசக் கட்டுமான வரி சேகரிப்பு

குறித்த ஆண்டுக்கான தேகவ சேகரிப்பானது மொத்த வருமானத்திற்கு ரூபா 59,397 மில்லியனை பங்களிப்புச் செய்துள்ளது. மொத்த தேகவ வருமானத்தில் ரூபா 18,460 மில்லியன் மாகாண சபைகளுக்கு மாற்றப்பட்டுள்ளது. 2013.12.31 இலுள்ளவாறான தேகவ இற்காக பதிவு செய்யப்பட்டுள்ள வரி செலுத்துனர்களின் மொத்த எண்ணிக்கை 20,480 ஆக இருந்துள்ளது. குறித்த ஆண்டில் காலாண்டுக்கு ரூபா 3 மில்லியன் வரையில் புரள்வின் எல்லைப் பெறுமதியானது

அதிகரித்துள்ளமையினால், அப்புரள்வு எல்லைக்கு குறைவாகவுள்ள ஆட்களின் பதிவுகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

| அட்டவணை 14 – தே.க.வரி சேகரிப்புப் பகுப்பாய்வு – 2013 | | |
|---|---|---|
| துறை | தேறிய சேகரிப்பு (ரூபா) | |
| | 2012 | 2013 |
| உற்பத்தி | 11,617,896,700 | 16,418,159,594 |
| சேவைகள் | 22,111,639,351 | 20,535,728,568 |
| இறக்குமதிகள் | 23,376,257,063 | 22,443,443,876 |
| **மொத்தம்** | **57,105,795,126** | **59,397,332,038** |

| அட்டவணை 15 – தேசக் கட்டுமான வரி சேகரிப்பும் மதிப்பீடும் | | | |
|---|---|---|---|
| ஆண்டு | வருமான மதிப்பீடு (ரூபா) | வருமான சேகரிப்பு (ரூபா) | % |
| 2013 | 73,173,000,000 | 59,397,332,038 | 81% |
| 2012 | 65,629,785,000 | 57,105,793,114 | 87% |




## 2.11.1 தேசக் கட்டுமான வரி தொடர்பான பிரதான கொள்கை மாற்றங்கள்

வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டவாறு தேசக் கட்டுமான வரிச் சட்டத்தில் பின்வரும் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன.

**எல்லைகளை அதிகரித்தல்;**

அத்தகைய ஆள் அல்லது பங்குடமையினால் நடாத்தப்பட்டு வரும் அனைத்து வியாபாரங்களிலிருந்தும் ரூபா 12 மில்லியனை விஞ்சாத வருடாந்த வழங்கல்களினை வழங்கி வரும் எவரேனும் ஆள் அல்லது பங்குடமை.

**விலக்களிப்புக்கள்**

(அ) எச்.எஸ்.குறியீட்டு இலக்கங்களை 7610.90.10, 8501.31.10, 8541.40, 8513.10.10, 9405.10.20, 9405.20.20, 9405.40.40, 9405.50.20, 9032.89.10 மற்றும் 8539.31.20 ஆகியவற்றின் கீழ் சூரிய மின்சக்தி பிறப்பாக்கத்திற்கான சூரிய மின்கல தொகுதி, துணைப் பொருட்கள் அல்லது சூரிய வீட்டு சாதன முறைமைகள்.

(ஆ) எச்.எஸ்.குறியீட்டு இல. 2701.11, 2701.12 மற்றும் 2701.19

(இ) நிதி அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் சர்வதேச விளையாட்டு நிகழ்வுக்கான பொருட்களின் இறக்குமதி.

(ஈ) பட்டை தீட்டப்பட்டவாறான அத்தகைய விற்பனை உள்ளடங்கலாக சுங்க கட்டளை சட்டத்தின் (அத்தியாயம் 235) 6அ(அ) பிரிவின் கீழ் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானியில் விதித்துரைக்கப்பட்ட வீதத்திலான விசேட சேவைக் கட்டணத்திற்கமைவாக கொள்வனவு செய்யப்படும் இரத்தினக் கற்கள்.

(உ) பின்வரும் நிறுவனங்களின் புரள்வானது தேகவ இற்குப் பொறுப்பாகாது.

- இலங்கை மத்திய வங்கி.
- திரட்டு நிதி அல்லது அரசாங்கத்தினூடாக ஏற்பாடு செய்யப்பட்ட ஏதேனும் கடனிலிருந்து பாராளுமன்றத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியிலிருந்து கட்டணம் எதுவுமின்றி, அரசாங்கத்தின் சார்பில் சேவைகளை வழங்கி வருகின்ற ஏதேனும் பொதுக் கூட்டுத்தாபனம்.


(எ) சேதன வளமாக்கிகள் மற்றும் பூச்சி கொல்லிகளின் வழங்கல்.

## 2.12 பொருளாதார சேவைக் கட்டண சேகரிப்பு

குறித்த ஆண்டு காலப்பகுதியில் சேகரிக்கப்பட்ட பொ.சே.கட்டணத்தின் திரட்டிய தொகையாக ரூபா 6,595 மில்லியன் சேகரிக்கப்பட்டதுடன் மொத்த வருமான சேகரிப்பில் அதன் பங்களிப்பு 1.0% ஆக இருந்துள்ளது. இது குறித்த ஆண்டுக்கான மதிப்பீட்டின் 51.68% ஆகும். பொ.சே.கட்டணம் ஆனது வருமான வரிக்குரிய இலாபங்கள் வியாபார புரள்வின் மீதான பொசேக இற்கான பொறுப்புடமையானது நீக்கப்பட்டமை மற்றும் எல்லையானது 25 மில்லியனிலிருந்து 50 மில்லியனுக்கு விரிவாக்கப்பட்டதன் காரணமாகவும் பிரதானமாக குறித்த ஆண்டில் வீழ்ச்சிப் போக்கினைக் கொண்டிருக்கின்றது.

**அட்டவணை 16 – பொருளாதார சேவைக் கட்டண சேகரிப்பு**

| ஆண்டு | வருமான மதிப்பீடு (ரூபா) | வருமான சேகரிப்பு (ரூபா) | % |
|---|---|---|---|
| 2013 | 12,763,000,000 | 6,595,600,863 | 52% |
| 2012 | 17,318,000,000 | 14,864,241,267 | 86% |



### 2.12.1 பொ.சே.கட்டணம் தொடர்பான பிரதான கொள்கை மாற்றங்கள்

வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டவாறான விலக்களிப்புக்களின் பட்டியலில் பல்வேறு விலக்களிப்புக்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

**விலக்களிப்புக்கள்**

(அ) இலங்கை மத்திய வங்கி

(ஆ) ஏதேனும் பொதுக் கூட்டுத்தாபனத்தினால் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் சேவைகளை வழங்குவதற்காக அரசாங்கத்தினூடாக ஏற்பாடு செய்யப்பட்ட ஏதேனும் கடனிலிருந்து அல்லது ஒதுக்கு நிதியத்திலிருந்து பாராளுமன்றத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிகள்.

(இ) சேதன வளமாக்கிகள் மற்றும் பூச்சி கொல்லிகளின் தயாரிப்பு அல்லது விற்பனையிலிருந்தான புரள்வு.

## 2.13 உழைக்கும் பொழுது செலுத்தும் வரி சேகரிப்பு

உழைக்கும் போது செலுத்தும் வரி சேகரிப்பு திட்டத்தின் கீழ் குறித்த ஆண்டு காலப்பகுதியில் சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 18,934 மில்லியனாக இருந்துள்ளதுடன் 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 14,779 மில்லியனாக இருந்துள்ளது.

உழைக்கும் போது செலுத்தும் வரி சேகரிப்பின் கீழ் வருமான வரி செலுத்துகின்ற ஊழியர்களின் எண்ணிக்கையானது 297,240 இனைப் பதிவு செய்துள்ளதுடன் (குறித்த சில தொழில் வழங்குனர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட பூரணப்படுத்தப்படாத வெளிப்படுத்தல்களிலுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை நீங்கலாக) உழைக்கும் போது செலுத்தும் வரி சேகரிப்பு திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள தொழில் வழங்குனர்களின் எண்ணிக்கையானது 10.446.

**அட்டவணை 17 - பகுப்பாய்வு வரியின் கீழ் உ.பொ.செ. வரி மற்றும் வருமான மட்டங்கள்**

| வருமான எல்லை ரூபா | | மொத்த உழைப்பூதியங்களின் கூட்டுத்தொகை ரூபா | ஊழியர்களின் எண்ணிக்கை | உ.பொ.செ.வரியின் கீழான வரி ரூபா |
|---|---|---|---|---|
| கீழ் 600,000 | கழிக்கப்படாத வரி | 105,801,524,007 | 599,380 | - |
| | கழிக்கப்பட்ட வரி | 15,308,606,446 | 78,235 | 156,692,566 |
| 600,001-1,100,000 | | 76,307,380,239 | 106,082 | 956,252,427 |
| 1,100,001-1,600,000 | | 39,968,834,036 | 45,312 | 1,196,170,368 |
| 1,600,001-2,100,000 | | 18,890,054,347 | 10,572 | 973,516,297 |
| 2,100,001-2,600,000 | | 11,694,606,881 | 5,017 | 816,645,552 |
| 2,600,001-3,600,000 | | 16,454,070,299 | 4,632 | 1,330,162,783 |
| Above 3,600,000 | | 43,791,786,128 | 18,801 | 10,550,372,635 |
| **மொத்தம்** | | **328,216,862,382** | **868,031** | **15,979,812,629** |

*இந்த தகவல் 2012/2013 வரி மதிப்பாண்டின் போது தொழில்தருநர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட பூரணப்படுத்தப்பட்ட விபரத்திரட்டுக்களினை அடிப்படையாகக் கொண்டு பெறப்பட்டதாகும்.*

## 2.14 நிறுத்திவைத்தல் வரிகள் (வட்டி மற்றும் விதித்துரைக்கப்பட்ட கட்டணங்களின் மீது)

குறித்த ஆண்டு காலப்பகுதியில் வட்டி மீதான நிறுத்திவைத்தல் வரியாக ரூபா 77,679,112,229/- சேகரிக்கப்பட்டுள்ளதுடன் அத்தொகையானது அரசாங்க முறிகளின் மீதான ரூபா 62,704,548,497/- (2012 இல் ரூபா 49,415,264,431/-), நிதி நிறுவனங்களிலிருந்தான ரூபா 14,978,900,177/- இனையும் மீதித் தொகையானது ஏனைய ஆவணங்களின் மூலமாக பெறப்பட்டதனையும் உள்ளடக்குகின்றது. முன்னைய ஆண்டு சேகரிப்புடன் ஒப்பிடுகையில் இந்த வருட வட்டி மீதான நிறுத்திவைத்தல் வரி வருமானமானது ரூபா 18,417 மில்லியனினால் அதிகரித்துள்ளது. குறித்த ஆண்டு காலப்பகுதியில் அரசாங்க பிணைகள் மீதான வட்டி வருமானமானது அதிகரித்துள்ளது.

குறித்த ஆண்டு காலப்பகுதியில் ரூபா 254,908,743/- தொகையானது விதித்துரைக்கப்பட்ட கட்டணங்கள் மீதான நிறுத்திவைத்தல் வரியாக சேகரிக்கப்பட்டது. (2012 இல் ரூபா 344,211,910) விதித்துரைக்கப்பட்ட கட்டணங்கள் மீதான ஏற்புடைய நிறுத்திவைத்தல் வரியானது தொடர்ச்சியாக அறவிடப்படாமையினால் விதித்துரைக்கப்பட்ட கட்டணங்கள் மீதான நிறுத்திவைத்தல் வரியிலிருந்தான வருமானம் வீழ்ச்சியடைந்தது.


## 2.15 பந்தய மற்றும் சூதாட்ட அறவீடு

குறித்த ஆண்டு காலப்பகுதியில் பந்தய மற்றும் சூதாட்ட அறவீடு தொடர்பான சேகரிப்பானது ரூபா 591,870,451/- ஆக இருந்துள்ளது. இது குறித்த ஆண்டுக்கென மதிப்பிடப்பட்ட தொகையுடன் ஒப்பிடுகையில் ரூபா 258,129,549/- இனால் வீழ்ச்சியடைந்துள்ளமையினைக் காட்டுகின்றது.

அட்டவணை 18 ஆனது 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் பந்தய மற்றும் சூதாட்ட அறவீடு தொடர்பான வருமான மதிப்பீட்டினை ஒப்பீடு செய்கின்றது.

**அட்டவணை 18 – பந்தய மற்றும் சூதாட்ட அறவீடு சேகரிப்பு**

| ஆண்டு | வருமான மதிப்பீடு (ரூபா) | வருமான சேகரிப்பு (ரூபா) | % |
|---|---|---|---|
| 2013 | 850,000,000 | 591,870,451 | 70% |
| 2012 | 312,000,000 | 289,175,098 | 93% |



## 2.16 நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதி அறவீடு சேகரிப்பு

2013 இல் நிருமாணக் கைத்தொழில் உத்தரவாத நிதி அறவீடு சேகரிப்பிலிருந்தான வருமானமானது ரூபா 750,907,497/- ஆகும். இந்த அறவீட்டுக்காக மொத்த பதிவு செய்யப்பட்ட வரி செலுத்துனர்களின் எண்ணிக்கை 253 ஆகும்.

அட்டவணை 19 ஆனது 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் நிருமாண கைத்தொழில் உத்தரவாத நிதி அறவீடு தொடர்பான வருமான மதிப்பீட்டினை ஒப்பீடு செய்கின்றது.

## 2.17 முத்திரைத் தீர்வை சேகரிப்பு

**அட்டவணை 19 – நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதி அறவீடு சேகரிப்பும் மதிப்பீடுகளும்**

| ஆண்டு | வருமான மதிப்பீடு (ரூபா) | வருமான சேகரிப்பு (ரூபா) | % |
|---|---|---|---|
| 2013 | 1,250,000,000 | 750,907,497 | 60% |
| 2012 | 950,000,000 | 709,648,933 | 75% |

குறித்த ஆண்டு காலப்பகுதியில் முத்திரை தீர்வையிலிருந்து ரூபா 6,884 மில்லியன் வருமானமாக ஈட்டப்பட்டது. 2011 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க சட்டத்தின் நியதிகளின்படி (முத்திரை தீர்வை மாற்றல்) முத்திரை தீர்வையின் மொத்த சேகரிப்பும் உரிய மாகாண சபைகளுக்கு மாற்றப்பட்டது. திணைக்களமானது வரி அடிப்படையிலான விரிவாக்கும் நோக்குடன் மதியுரை மற்றும் மேற்பார்வை விஜயங்களை நடாத்தியுள்ளதுடன் அதற்கிணங்க, 2013 ஆம் ஆண்டில் 191 இடங்களுக்கு விஜயம் மேற்கொள்ளப்பட்டது. முத்திரை தீர்வையின் முறையாக பதிவு செய்யப்பட்டு ஒன்று சேர்ந்த முகவர்களின் எண்ணிக்கையானது 7,623 ஆக அமைந்திருந்ததுடன் (2013.09.30 இலுள்ளவாறு) இவர்களில் 7,591 பேர் 100% இணக்கப்பாடுகளுடன் அட்டவணைகளை சமர்ப்பித்துள்ளார்கள்.

## 2.18 காணி மீதான மாற்றல் வரி

2013 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளின் கீழ் அமுல்படுத்தப்படும் காணி வரியிலிருந்தான ஆண்டுக்கான சேகரிப்பானது ரூபா 96,741 மில்லியனைக் கொண்டிருந்ததுடன் ரூபா 14.74 மில்லியனினால் விஞ்சியுள்ளதாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

அரசாங்கமானது சொத்து மாற்றல் மீதான வரியினை 100% மீளாய்வு செய்வதாகவும் 2013 வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளின் மூலமான சில விதிவிலக்குகள் தொடர்பில் வெளிநாட்டவர்களுக்கு ஆதன உரிமை மாற்றம் செய்தலை தடுப்பதாகவும் அறிவித்துள்ளது.


வெளிநாட்டு பிரஜைகள் மற்றும் கம்பனிகளுக்கு ஆதன உரிமை மாற்றம் செய்தலானது தொடர்புடைய பெறுமதி மீதான 15% வரி விதிப்புக்குள்ளாகும் குத்தகை வழி மூலமாக அனுமதிக்கப்படுகின்றது.

## 2.19 2009 இலிருந்து 2013 வரைக்கும் உள்நாட்டு இறைவரி சேகரிப்பு

அட்டவணை 20 இல் தரப்பட்டுள்ள இலக்கங்கள் 2009 இலிருந்து 2013 வரையில் திணைக்களத்தின் வருமான சேகரிப்பின் வரி ரீதியான வகைப்படுத்தலினை பிரதிபலிக்கின்றது.

## அட்டவணை 20 :- உள்நாட்டு இறைவரி சேகரிப்பு 2009 - 2013 – வரி அடிப்படை பகுப்பாய்வு

| வரி வகை | 2009 | | 2010 | | 2011 | | 2012 | | 2013 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | சேகரிப்பு (ரூ.மில்) | % | சேகரிப்பு (ரூ.மில்) | % | சேகரிப்பு (ரூ.மில்) | % | சேகரிப்பு (ரூ.மில்) | % | சேகரிப்பு (ரூ.மில்) | % |
| வருமான வரி | 125,350 | 35.51 | 117,575 | 27.83 | 135,974 | 30.64 | 157,729 | 35.57 | 199,070 | 40.42 |
| பொருளாதார சேவைக் கட்டணம் | 14,207 | 4.02 | 18,048 | 4.27 | 21,335 | 4.81 | 14,864 | 3.35 | 6,596 | 1.34 |
| பெறுமதிசேர் வரி | 171,118 | 48.47 | 219,563 | 51.97 | 215,420 | 48.54 | 204,656 | 46.15 | 217,687 | 44.2 |
| பற்று வரி | 8,036 | 2.28 | 10,843 | 2.57 | 4,232 | 0.95 | - | - | - | - |
| பந்தயம் மற்றும் சூதாட்ட அறவீடு | 269 | 0.08 | 295 | 0.07 | 286 | 0.06 | 289 | 0.07 | 592 | 0.12 |
| பங்கு கொடுக்கல் வாங்கல் அறவீடு | 560 | 0.16 | 2273 | 0.54 | 3,264 | 0.74 | 1,285 | 0.29 | 1,197 | 0.24 |
| புரள்வு வரி | 337 | 0.10 | 388 | 0.09 | 131 | 0.03 | 138 | 0.03 | 218 | 0.04 |
| முத்திரைத் தீர்வை | 3,327 | 0.94 | 4,440 | 1.05 | 7,217 | 1.63 | 6,535 | 1.47 | 6,884 | 1.4 |
| பொருட்கள் சேவைகள் வரி | 56 | 0.02 | 39 | 0.01 | 25 | 0.01 | 12 | - | 16 | - |
| தேசிய பாதுகாப்பு அறவீடு | 17 | - | 23 | 0.01 | 15 | - | 4 | - | 2 | - |
| நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத அறவீடு | 571 | 0.16 | 830 | 0.20 | 1,106 | 0.25 | 710 | 0.16 | 751 | 0.15 |
| தேகவ | 27,205 | 7.71 | 46,022 | 10.89 | 53,501 | 12.05 | 57,106 | 12.88 | 59,397 | 12.06 |
| காணி வரி | - | - | - | - | - | - | - | - | 97 | 0.02 |
| சமூகப் பொறுப்பு அறவீடு | 1,962 | 0.56 | 2,173 | 0.51 | 1,324 | 0.30 | 127 | 0.03 | 32 | 0.01 |
| மொத்த சேகரிப்பு | **353,015** | **100.00** | **422,512** | **100.00** | **443,830** | **100.00** | **443,455** | **100.00** | **492,539** | **100.00** |



## அத்தியாயம் 3 - செலவினம் மற்றும் உற்பத்தி வினைத்திறன் விகிதாசாரம்


குறித்த ஆண்டில் திணைக்களத்தின் மொத்த செலவினமானது ரூபா 1,857 மில்லியனாக இருந்துள்ளதுடன் இது முன்னைய ஆண்டு தொகையான ரூபா 1,604 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 15.80% அதிகரிப்பினைப் பதிவு செய்துள்ளது. மொத்த செலவினத்துடன் மீண்டு வரும் செலவினத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 1,682 மில்லியனாக இருந்துள்ளதுடன் இது 91% இனைக் கொண்டுள்ளதுடன் 2012 ஆம் ஆண்டில் இத்தொகையானது ரூபா 1,562 மில்லியனாக இருந்துள்ளது. வேதனாதிகள் மீதான செலவினமானது 2012 இல் ரூபா 1,209 மில்லியனாக இருந்துள்ளதுடன் இது 5.21% இனால் அதிகரித்துள்ளது. இது மொத்த செலவினத்தில் 68.5% இனைக் கொண்டுள்ள தனியொரு செலவினமாக உள்ளதுடன் இது மீண்டுவரும் செலவினத்தின் 75.63% ஆக இருந்துள்ளது.

2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறித்த ஆண்டு காலப்பகுதியில், மூலதன செலவினமானது 316.54% அதிகரிப்பினை பதிவு செய்துள்ளதுடன் அது ரூபா 175 மில்லியனை அடையப் பெற்றுள்ளது. 2012 இல் அது ரூபா 42 மில்லியனாக இருந்துள்ளது. திணைக்களத்தின் மொத்த செலவினத்தில் மூலதன செலவினமானது, 9.43% இனைப் பிரதிபலிக்கின்றது. (2012 ஆம் ஆண்டு – 2.62%).


### 3.1 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் ஏற்பட்ட மொத்த செலவினத்தின் ஒப்பீடு

**அட்டவணை 21:- மொத்த செலவினம் – 2011, 2012 மற்றும் 2013**

| விபரம் | 2011 (ரூ.'000) | % | 2012 (ரூ.'000) | % | 2013 (ரூ.'000) | % |
|---|---|---|---|---|---|---|
| **மீண்டெழும் செலவினம்** | | | | | | |
| பிரயாணச் செலவுகள் | 1,110,669 | 71.17% | 1,209,700 | 75.40% | 1,272,722 | 67.85% |
| பிரயாணச் செலவுகள் | 15,844 | 1.01% | 24,231 | 1.51% | 19,124 | 1.02% |
| வழங்கல்கள் | 58,217 | 3.73% | 61,851 | 3.86% | 67,269 | 3.59% |
| பராமரிப்பு | 24,457 | 1.56% | 33,851 | 2.11% | 30,999 | 1.65% |
| ஒப்பந்த சேவைகள் | 209,962 | 13.45% | 210,813 | 13.14% | 265,284 | 14.14% |
| இடமாற்றல்கள் | 15,427 | 0.98% | 21,761 | 1.36% | 27,871 | 1.49% |
| ஏனையவை | - | 0.00% | 60 | 0.00% | | |
| **உப மொத்தம்** | **1,434,576** | **91.94%** | **1,562,267** | **97.38%** | **1,683,269** | **89.73%** |
| **மூலதனச் செலவினம்** | | | | | | |
| புனரமைப்பும் மேம்பாடும் | 108,142 | 6.93% | 19,893 | 1.24% | 131,414 | 7.01% |
| மூலதன ஆதனங்கள் சுவீகாரம் | 7,717 | 0.49% | 13,875 | 0.86% | 40,243 | 2.15% |
| கொள்ளளவு கட்டுமாணம் | 9,987 | 0.64% | 8,293 | 0.52% | 20,963 | 1.12% |
| **உப மொத்தம்** | **125,846** | **8.06%** | **42,061** | **2.62%** | **192,620** | **10.27%** |
| **மொத்தம்** | **1,560,422** | **100%** | **1,604,328** | **100%** | **1,875,889** | **100%** |



## 3.2 மீண்டுவரும் செலவினத்தின் பகுப்பாய்வு – 2013




## 3.3 உற்பத்தி வினைத்திறன் விகிதாசாரம்

2013 இல் திணைக்களத்தின் மொத்த செலவினமானது, ரூபா 1,875,888,898/- ஆக இருந்துள்ளதுடன் சேகரிக்கப்பட்ட வருமானமானது ரூபா 492,539,431,267/- ஆக இருந்துள்ளது. ஆகையால், உற்பத்தி வினைத்திறன் விகிதாசாரமானது, (அதாவது செலவினத்தின் ஒவ்வொரு ரூபாவுக்கும் சேகரிக்கப்பட்ட வருமானம்) 262:1 ஆகும். வேறு முறையில் கூறுவதாயின், ரூபா 100/- இற்கான சேகரிப்பு செலவானது 38 சதமாக இருந்துள்ளது. இறக்குமதிகள் மீதான பெசேவ மற்றும் தேகவ என்பன நீங்கலாக ரூபா 100/- இற்கான சேகரிப்பு செலவு 50 சதமாக இருந்துள்ளது. (முன்னைய ஆண்டில் இத்தொகைகள் முறையே 36 சதம் மற்றும் 50 சதமாக இருந்துள்ளது)

**அட்டவணை 22-வருமான சேகரிப்பு,மொத்த செலவினம் மற்றும் சேகரிப்பு செலவு(ரூபா.மில்)**

| விபரணம் | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|
| **வருமான சேகரிப்பு** | | | |
| வருமான வரி | 135,973.51 | 157,728.90 | 199,070.03 |
| பொருளாதார சேவைக் கட்டணம் | 21,335.09 | 14,864.24 | 6,595.60 |
| பெறுமதிசேர் வரி | 215,419.83 | 204,656.03 | 217,686.92 |
| தேசக் கட்டுமான வரி | 53,501.01 | 57,105.79 | 59,397.33 |
| பற்று வரி | 4,232.33 | -0.48 | (0.08) |
| பந்தய மற்றும் சூதாட்ட வரி | 286.88 | 289.18 | 591.87 |
| பங்கு கொடுக்கல்வாங்கல் வரி | 3,263.52 | 1,285.74 | 1,197.41 |
| புரள்வு வரி | 130.62 | 138.26 | 218.08 |
| முத்திரைத் தீர்வை | 7,217.34 | 6,535.31 | 6,884.39 |
| பொருட்கள் மற்றும் சேவைகள் வரி | 25.54 | 11.99 | 15.97 |
| தேசிய பாதுகாப்பு அறவீடு | 14.74 | 3.93 | 2.15 |
| நிர்மாண கைத்தொழில் உத்தரவாத நிதிய அறவீடு | 1,106.04 | 709.65 | 750.91 |
| காணி வரி | | | 96.74 |
| சமூகப் பொறுப்புடமை அறவீடு | 1323.56 | 127.22 | 32.11 |
| **மொத்த சேகரிப்பு** | **443,830.01** | **443,455.76** | **492,539.43** |

| | | | |
|---|---|---|---|
| **செலவினம்** | | | |
| **மீண்டுவரும் செலவினம்** | | | |
| வேதனாதிகள் | 1,110.67 | 1,209.70 | 1,272.72 |
| பிரயாணச் செலவுகள் | 15.84 | 24.23 | 19.12 |
| வழங்கல்களும் உபகரணங்களும் | 58.22 | 61.85 | 67.27 |
| பராமரிப்பும் திருத்தங்களும் | 24.46 | 33.85 | 31.00 |
| சேவைகள் | 209.96 | 210.81 | 265.28 |
| இடமாற்றல்கள் | 15.43 | 21.76 | 27.87 |
| ஏனையவை | | 0.06 | |
| **மூலதன செலவினம்** | | | |
| புனரமைப்பும் மேம்பாடும் | 108.14 | 19.89 | 131.41 |
| கொள்ளல்கள் | 7.72 | 13.88 | 40.24 |
| கொள்ளளவு கட்டுமாணம் | 9.98 | 8.29 | 20.96 |
| **மொத்த செலவினம்** | **1,560.42** | **1,604.32** | **1,875.89** |
| | | | |
| **100/- இற்கான சேகரிப்பு செலவு** | **0.35** | **0.36** | **0.38** |
| **பெசேவ மற்றும் தேகவ நீங்கலாக 100/- இற்கான சேகரிப்பு செலவு** | **0.5** | **0.5** | **0.5** |

## 3.4 உள்ளக கணக்காய்வு

அனைத்து கொடுப்பனவுகள், நாளாந்த வாகனம் பயணிக்கும் தூர அட்டவணைகள் (தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களினால் பேணப்படுபவை), கொடுப்பனவு தாள்கள், மதிப்பாய்வு சபையின் வருடாந்த அறிக்கைகள், இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் மத்திய வங்கிகளின் வங்கி கணக்கிணக்கம் போன்றவற்றினை ஆய்வு செய்தல் உள்ளடங்கலான கணக்காய்வுகள் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கும் மேலாக, மதிப்பிழந்த காசோலைகள் மீதான வரவேண்டிய தொகையினை அறவீடு செய்வதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து ஆய்வினை மேற்கொள்ளல், வருமான வரி மற்றும் பெசேவ தொடர்பான மீள் நிதியிடல்கள், கட்டுநிதி கணக்கு மற்றும் கட்டுநிதி காசுக் கணக்கினை செவ்வை பார்த்தல் என்பன உள்ளக கணக்காய்வு கிளையினால் நிறைவேற்றப்படும் ஏனைய பிரதான பணிகளாகும்.

# அத்தியாயம் 4 - தவறவிடப்பட்ட வரிகள்

## 4.1 தவறவிடப்பட்ட வரிகள்

அட்டவணை 23 ஆனது 2013.12.31 இலுள்ளவாறான தவறவிடப்பட்ட வரி தொகைகள், தண்டப் பணங்கள் மற்றும் சேகரிக்கத்தக்க தொகை என்பவற்றினைக் காட்டுகின்றது.

**அட்டவணை 23 - 2013.12.31 இலுள்ளவாறான நிலுவையிலுள்ள வரிகளின் பகுப்பாய்வு**

| வரி வகை | தவறவிடப்பட்ட மொத்த வரித் தொகை ரூபா | தண்டப்பணம் ரூபா | தண்டப்பணம் நீங்கலான பிணக்கு வரி (ரூபா) | பிணக்கு வரிகளுடன் தொடர்புடைய தண்டப்பணம் (ரூபா) | சேகரிக்கத்தக்க வரி (ரூபா) | சேகரிக்கத் தக்க தண்டப்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| வருமான வரி | 40,589,933,958 | 29,351,269,412 | 36,875,815,971 | 27,159,402,087 | 3,714,117,987 | 2,191,867,325 |
| வருமான வரி மீதான மிகைக் கட்டணம் | 667,380,976 | 511,022,570 | 663,803,828 | 509,232,244 | 3,577,148 | 1,790,326 |
| வருமான வரி (வட்டி மீதான பிடித்து வைத்தல் வரி வட்டி) | 1,448,532,023 | 633,876,377 | 1,358,583,354 | 593,652,671 | 89,948,669 | 40,223,706 |
| பெறுமதிசேர் வரி | 49,653,075,695 | 26,746,339,378 | 44,591,886,331 | 24,026,545,870 | 5,061,189,364 | 2,719,793,508 |
| பெறுமதிசேர் வரி (நிதிச் சேவைகள்) | 8,631,036,788 | 5,397,715,997 | 8,623,477,216 | 5,397,259,173 | 7,559,572 | 456,824 |
| பொருளாதார சேவைக் கட்டணம் | 4,844,148,037 | 2,770,569,835 | 3,370,431,050 | 2,057,012,141 | 1,473,716,987 | 713,557,694 |
| தேசக் கட்டுமான வரி | 2,653,570,063 | 1,383,855,770 | 1,611,407,258 | 951,089,645 | 1,042,162,805 | 432,766,125 |
| முத்திரைத் தீர்வை | 46,831,124 | 14,902,822 | - | - | 46,831,124 | 14,902,822 |
| பற்று வரி | 2,215,581,368 | - | 2215581368 | - | - | - |
| புரள்வு வரி | 3,708,257,287 | 1,805,763,704 | 3,708,257,287 | 1,805,763,704 | - | - |
| பொருட்கள் சேவைகள் வரி | 1,007,014,395 | 1,098,684,757 | 1,007,014,395 | 1,098,684,757 | - | - |
| தேசிய பாதுகாப்பு அறவீடு | 2,058,858,025 | 854,707,764 | 2,058,858,025 | 854,707,764 | - | - |
| தேச பாதுகாப்பு பங்களிப்பு | 29,598,611 | 8,045,839 | 29,598,611 | 8,045,839 | - | - |
| நலன் வரி | 919,732 | 504,648 | 919,732 | 504,648 | - | - |
| நன்கொடை வரி | 2,409 | 1,204 | 2,409 | 1,204 | - | - |
| சமூக பொறுப்பு அறவீடு | 2,276,342 | 188,856 | 1,940,879 | 147,605 | 335,463 | 41,251 |
| திரண்ட தண்டப்பணம் | - | 288,781,090 | - | 120,344,735 | - | 168,436,355 |
| **மொத்தம்** | **117,557,016,833** | **70,866,230,023** | **106,117,577,714** | **64,582,394,087** | **11,439,439,119** | **6,283,835,936** |

**குறிப்பு:**

i. தவறவிடப்பட்ட மொத்த வரிகள் உரிய வரிகளின் தற்போதைய திரண்ட மீதியினை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. எவ்வாறாயினும், மேலே வகுப்பாக்கம் செய்யப்பட்டவாறான தவறவிடப்பட்ட வரிகள் முழுமையான நிலுவையாக இருக்கமாட்டாது.

ii. ஏதாவதொரு காரணத்திற்காக மதிப்பீடொன்று வழங்கப்படுகையில் நிலுவைகள் அல்லது தவறுதல்கள் ஏற்படுகின்றன. (வரி செலுத்துனர்கள் விபரத்திரட்டுக்களை சமர்ப்பிக்காமை, விபரத்திரட்டுக்களின் அடிப்படையில் வரிகள் செலுத்தப்படாமை, பிழையான விபரத்திரட்டுக்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் போன்றன சமர்ப்பிக்கப்படுதல்). உரிய திகதியில் கொடுப்பனவு செய்யாமைக்காக பொதுவாக 10% தண்டப்பணமும், வருமான வரியினைப் பொறுத்தமட்டில் வரியின் 50% இனை அடையும் வரையில் கொடுப்பனவு செலுத்தாமைக்கு ஒவ்வொரு மாதமும் மேலும் 2% விதிக்கப்படுவதுடன் பெறுமதிசேர் வரியினைப் பொறுத்தவரையில் ஆகக் கூடுதலாக 100% விதிக்கப்படும்.

iii. சில வரி மதிப்பீடுகளுக்கெதிராக வரி செலுத்துனர்கள் மேன்முறையீட்டினை மேற்கொள்ளப்படுவதனைத் தொடர்ந்து வரி செலுத்துனரின் மேன்முறையீட்டு உரிமைகள் என்ற வகையில் இணக்கப்பாடுகள், சில விடயங்களில் உயர்ந்த மேன்முறையீட்டு மட்டங்களில் (வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு, மேன்முறையீட்டு நீதிமன்றம் போன்றவை) எட்டப்படுமிடத்து, அது தவறவிடப்பட்ட வரியாகக் கருதப்படுதல் வேண்டும். அந்த தவறவிடப்பட்ட வரித்தொகையானது பிணக்கிலுள்ள வரித்தொகையாக அல்லது வரி மீதான தண்டப் பணமாக வகுப்பாக்கம் செய்யப்படும். மேன்முறையீட்டினை இணக்கப்பாடு செய்யும் போது தண்டப் பணத்துடன் சேர்க்கப்பட்ட வரி மதிப்பீட்டுத் தொகையின் ஏதேனும் அதிகரிப்பு விடுவிப்புச் செய்யப்படும்.

## 4.2 தவறவிடப்பட்ட வரிகளைக் குறைப்பதற்கான திட்டங்கள்

அ. தவறவிடப்பட்ட வரிகளை அறவீடு செய்வதற்காக உரிய சட்டவாக்கங்களில் குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் படிமுறைகள் எடுக்கப்பட வேண்டியுள்ளன. அத்தகைய நடவடிக்கைகள், வரி மதிப்பீடுகளை வழங்குவதிலிருந்து தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட போதிலும் கணிசமானளவு தொகை தவறவிடப்பட்டிருந்தமையினைக் காண முடிந்துள்ளது.

ஆ.தவறவிடப்பட்ட வரி அறவீட்டுப் பிரிவானது, 2010 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க தவறவிடப்பட்ட வரிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தில் அளிக்கப்பட்டுள்ளவாறான தவறவிடப்பட்ட வரிகள் தொடர்பான அறிக்கையினை தயாரித்துள்ளதுடன் (குறித்த சில சந்தர்ப்பங்களில், தவறவிடப்பட்ட வரிகளை அறவீடு செய்வதற்கான விடயங்களை துரிதப்படுத்துவதற்கும் ஒழுங்கமைப்பதற்காகவும் அதனுடன் தொடர்புடைய விடயங்களை இனங்காண்பதற்காகவும் அளிக்கப்படும் ஒரு சட்டம்) அதிகாரமளிக்கப்பட்ட பயனுறுதி வாய்ந்த அறவீட்டு நடவடிக்கைகள் சிறந்த பெறுபேறுகளுக்கு வழிவகுக்கின்றன.

## 4.3 வரி நிலுவைகளை 3% இல் பேணுதல்

2010 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க தவறவிடப்பட்ட வரிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் நியதிகளின்படி சேர்ந்த தண்டப் பணம் நீங்கலாக ஏதேனும் வரிகளின் கூட்டுத்தொகையினை உறுதிப்படுத்துவது ஆணையாளர் நாயகத்தின் கடமையாக இருத்தல் வேண்டும் அல்லது வரியின் மிகை அல்லது தவறவிடப்பட்ட வரியின் ஏதேனும் பகுதி இச்சட்டத்தின் அட்டவணையில் விதித்துரைக்கப்பட்ட ஏதேனும் சட்டவிதியின் கீழ் தவறவிடப்பட்ட வரியானது 2010 ஜனவரி 1 ஆம் திகதி ஆரம்பமாகும் அல்லது அதன் பின்னர் ஆரம்பமாகும் ஏதேனும் கலண்டர் வருடத்தின் இறுதியிலுள்ளவாறு குறித்த சட்டத்தின் கீழ் அறவிடப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட சட்டங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட மொத்த வரியில் மூன்று சதவீதத்தினை விஞ்சாதிருத்தல் வேண்டும்.
அதற்கமைவாக,

| | | | |
|---|---|---|---|
| 2013.12.31 இலுள்ளவாறான தேறிய தவறவிடப்பட்ட வரி | - | ரூபா. | 11,439,439,119 |
| <u>கழி</u> | | | |
| 2012.12.31 இலுள்ளவாறான தேறிய தவறவிடப்பட்ட வரி | - | ரூபா. | <u>10,248,070,817</u> |
| 2013 இல் தவறவிடப்பட்ட வரியின் அதிகரிப்பு | - | ரூபா. | 1,191,368,30 |
| | | | |
| 2012.12.31 இல் முடிவடைந்த ஆண்டில் மொத்த வரி சேகரிப்பு | - | ரூபா. | 418,423,600,997 |
| 2012 இல் மொத்த வரி சேகரிப்பின் 3% | - | ரூபா. | 12,527,080,299 |

எனவே, 2010 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க தவறவிடப்பட்ட வரிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு, முன்னைய ஆண்டின் மொத்த வரி சேகரிப்பின் 3% இற்கு குறைவாக இருப்பதால் 2013 இல் தவறவிடப்பட்ட வரிகளில் தேறிய சேர்ப்பு எதுவும் இடம் பெறவில்லை.

## அத்தியாயம் 5 - கணக்காய்வுகள், மேலதிக வரி சேகரிப்பு, மீள் கொடுப்பனவுகள், அறவீட்டு நடவடிக்கைகள் மற்றும் மேன்முறையீடுகள்

### 5.1 கணக்காய்வுகள்

கணக்காய்வுகள் மற்றும் புலனாய்வுகள், வியாபாரச் செயற்பாடு, வியாபார வகை மற்றும் வியாபாரத்தின் அளவு என்பவற்றின் நியதிகளின்படி வரி செலுத்துனர் எண்ணிக்கையின் சாத்தியமான அனைவர் தொடர்பிலும் மேற்கொள்ளப்படுகின்றன. புலனாய்வு மூலவளங்களின் அதிகளவான உற்பத்தி திறன் பயன்பாடானது மிகப் பெரிய வரி செலுத்துனர்கள் தொடர்பில் பெற்றுள்ளமையினை அறிய முடிந்துள்ளது. மீளாய்வு ஆண்டில் இத்தகைய தெரிவு செயல்முறையானது திரும்பவும் தீர்வையில் கணிசமானளவு அதிகரிப்பு ஏற்பட்டதன் விளைவாக, இந்த வகையீடு தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்பட்டது. அதற்கிணங்க, அட்டவணை 24 இல் காட்டப்பட்டுள்ள மேலதிக வரிகளின் சேகரிப்பின் காரணமாக திருப்திகரமான முறையில் கணக்காய்வு தொழிற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**அட்டவணை 24 – குறித்த ஆண்டின் போது கணக்காய்வுகள் மற்றும் மேலதிக வரி சேகரிப்பு பற்றிய விபரங்கள் (ரூபா ‘000)**

| | வருமான வரி | பெசேவ | பொசேக | உபொசெவ | தேகவ | ஏனைய | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| குறித்த ஆண்டின் போது மதிப்பிடப்பட்ட மேலதிக வரியின் மொத்தத் தொகை | 7,646,917 | 5,701,667 | 467,464 | 229,155 | 2,461,476 | 3,163,295 | 19,669,974 |
| குறித்த ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட மேலதிக வரியின் மொத்தத் தொகை | 6,424,751 | 5,020,038 | 390,183 | 220,000 | 1,150,315 | 2,356,973 | 15,562,260 |
| 2013 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட கணக்காய்வுகளின் எண்ணிக்கை | **5,248** | | | | | | |
| 2013 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்ட கணக்காய்வுகளின் எண்ணிக்கை | **5,206** | | | | | | |

**அட்டவணை 25 – ஒருங்கிணைந்த மற்றும் ஏனைய அலகுகளினால் மேலதிக வரிகளின் பகுப்பாக்கம் (தண்டப்பணம் உள்ளடங்கலாக)**

| விபரம் | மேலதிக வருமானம்/புரள்வு மதிப்பீடும் உடன்பாடும் (ரூபா ‘000) | மேலதிக வரி மதிப்பீடும் உடன்பாடும் (ரூபா ‘000) | | | | சேகரிக்கப் பட்ட மேலதிக வரி (ரூபா ‘000) (தீர்க்கப்பட்ட கோரிக்கை மீளளிப்பு உள்ளடங்கலாக) |
|---|---|---|---|---|---|---|
| | | ஒருங்கிணைந்த - பாவபி | ஒருங்கிணைந்த - பிற | பிற அலகுகள் | மொத்தம் | |
| வருமான வரி | 51,374,741 | 5,008,968 | 1,482,610 | 1,155,339 | 7,646,917 | 6,424,751 |
| பெ.சே.வரி | 35,802,181 | 2,107,211 | 1,652,195 | 1,942,260 | 5,701,667 | 5,020,038 |
| பொ.சே.க | 80,313,986 | 174,587 | 181,454 | 111,423 | 467,464 | 390,183 |
| உபொசெவ | 494,793 | 163,000 | 66,155 | - | 229,155 | 220,000 |
| தே.க.வரி | 69,935,407 | 1,722,750 | 436,177 | 302,549 | 2,461,476 | 1,150,315 |
| ஏனையவை | 16,733,569 | 3,116,768 | 37,805 | 8,722 | 3,163,295 | 2,356,973 |
| **மொத்தம்** | **254,654,677** | **12,293,285** | **3,856,396** | **3,520,293** | **19,669,974** | **15,562,258** |

### 5.2 மேன்முறையீடுகள்

குறித்த ஆண்டின் போது வழங்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு எதிராகப் பெறப்பட்ட மேன்முறையீடுகளில் 1,480 இனை பூர்த்தி செய்துள்ளதுடன் மேன்முறையீடுகளின் பகுப்பாய்வு நிலைமை பின்வருமாறு;

**அட்டவணை 26 – பெறப்பட்டதும் தீர்க்கப்பட்டதுமான மேன்முறையீடுகளின் பகுப்பாய்வு**

| | | வருமான வரி | பெசேவ | பொசேக | தேகவ | ஏனைய | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 2013.01.01 அன்றுள்ளவாறு மீதி | அலகுகள் (மே.மு.2 இன்படி) | 147 | 367 | 28 | 39 | 2 | 583 |
| | மேன்முறையீட்டு கிளை (மே.மு.2 இன்படி) | 41 | 168 | - | 5 | - | 214 |
| | உ.இ.ஆ.நா. விசாரணைகள் | 131 | 355 | 28 | - | 1 | 515 |
| குறித்த ஆண்டின் போது பதிவு செய்யப்பட்டது (மே.மு.2 இன்படி) | | **411** | **933** | **70** | **60** | **2** | **1476** |
| பூரணப்படுத்தப்பட்டது | தீர்க்கப்பட்டவை (உ.இ.ஆ.நா) | 130 | 291 | 27 | 9 | 1 | 458 |
| | அலகுகள் (மே.மு.4) | 311 | 333 | 58 | 42 | - | 744 |
| | மேன்முறையீட்டு கிளை | 56 | 204 | 8 | 10 | - | 278 |
| உ.இ.ஆ.நா.விசாரணைக்காக சமர்ப்பிக்கப்பட்டவை | | **69** | **336** | **12** | **14** | **2** | **433** |
| 2013.12.31 அன்றுள்ளவாறு மீதி | அலகுகள் (மே.மு.2 இன்படி) | 114 | 135 | - | 15 | 2 | 266 |
| | *மேன்முறையீட்டுக் கிளை (மே.மு.2 இன்படி) | 49 | 460 | 20 | 23 | - | 552 |
| | உ.இ.ஆ.நா. விசாரணைகள் | 70 | 400 | 13 | 5 | 2 | 490 |
| *குறித்த ஆண்டின் போது மேன்முறையீட்டுக் கிளைக்கு கிடைக்கப் பெற்ற கோவைகள் | | **79** | **247** | **0** | **35** | **2** | **363** |

### 5.3 பெறுமதி சேர் வரிக்குப் பின்னரான மீள் கொடுப்பனவு கணக்காய்வுகள்

திணைக்களத்தின் விசேட கணக்காய்வு கிளையானது 5424 வரி விதிக்கத்தக்க காலப் பகுதியில் பெசேவ மீள் நிதியிடல் கணக்காய்வுக்குப் பின்னரான 226 வழக்குகளை (தொடரப்பட்டவை) பூர்த்தி செய்துள்ளதுடன் இதன் மூலம் ரூபா 439,034,814/- மேலதிக வரியாக சேகரிக்கப்பட்டது.

### 5.4 அறவீட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அட்டவணையானது குறித்த ஆண்டு காலப்பகுதியில் வரிகளை அறவிடுவதற்காக தொடரப்பட்ட வழக்குகள் மற்றும் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் எண்ணிக்கையைக் காட்டுகின்றது.

**அட்டவணை 27 – அறவீட்டு நடவடிக்கைகள்**

| | வழக்குகள் | அறிவித்தல்கள் |
|---|---|---|
| கைப்பற்றல் அறிவித்தல்கள் வழங்குதல் | 1481 | 2019 |
| வழக்கீட்டு நடவடிக்கை | 676 | 577 |
| பிற நடவடிக்கை | 5853 | 4324 |

### 5.5 மீள் கொடுப்பனவுகள்

குறித்த ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மீள் கொடுப்பனவுகளின் பகுப்பாய்வு (செலுத்த வேண்டியுள்ள வரிகளுக்கெதிராக கொடுப்பனவு செய்யப்பட்ட மீள் கொடுப்பனவுகள் நீங்கலாக) பின்வருமாறு:

| அட்டவணை 28 – மீள் கொடுப்பனவு பகுப்பாய்வு | | | | |
|---|---|---|---|---|
| | 2012 | | 2013 | |
| வரி வகை | மீள் கொடுப்பனவு தொகை ரூபா. | ஒவ்வொரு வரி வருமானசேகரிப்பின் தேறிய % | மீள் கொடுப்பனவு தொகை ரூபா. | ஒவ்வொரு வரி வருமானசேகரிப்பின் தேறிய % |
| பெறுமதிசேர் வரி | 3,149,577,623 | 1.54% | 459,692,181 | 0.21% |
| நிறுவன வருமான வரி | 194,026,255 | 0.25% | 167,326,086 | 0.20% |
| பிற நிறுவனமல்லா வருமான வரி | 55,356,159 | 0.88% | 50,932,924 | 0.59% |
| குறிப்பீடு செய்யப்பட்ட கட்டண மீதான நிறுத்திவைத்தல் வரி | 5,598,717 | 1.63% | 2,154,419 | 0.84% |
| வட்டி மீதான நிறுத்திவைத்தல் வரி | 12,606,388 | 0.02% | 4,326,494 | 0.01% |
| உ.பொ.செ.வரி | 15,808,330 | 0.11% | 375,690,454 | 2.02% |
| பற்று வரி | 2,430,112 | - | 213,182 | - |
| **மொத்தம்** | **3,435,403,584** | **0.81%** | **1,060,335,740** | **0.23%** |

குறித்த ஆண்டு காலப்பகுதியில் திணைக்களமானது 2,270 பெசேவ மீள் கொடுப்பனவு கோரிக்கைகளைப் பெற்றுள்ளதுடன் குறித்த ஆண்டில் ரூபா 459.69 மில்லியன் மீள் கொடுப்பனவுகளின் மூலம் 732 கோரிக்கைகளுக்குத் தீர்வு காணப்பட்டது. குறித்த ஆண்டு காலப்பகுதியில் மீளளிக்கப்பட்ட மொத்த தொகையில் ரூபா 27.39 மில்லியன் பெறுமதியான தொகையானது மொத்த செலுத்த வேண்டியுள்ள தொகைகளுக்கெதிராக மாற்றப்பட்டது அல்லது கொடுத்து தீர்க்கப்பட்டது.

இலகுபடுத்தப்பட்ட பெசேவ (இபெசேவ) திட்டமானது ஏற்றுமதிகள் மற்றும் கடன் வவுச்சர்களினை வழங்கும் முறைமை மூலமான விசேட கருத்திட்டங்களில் ஈடுபடுகின்ற பெசேவ பதிவு செய்யப்பட்ட ஆட்களுக்கான பெசேவ மீள்கொடுப்பனவுகளை குறைவடையச் செய்கின்றதுடன் மீளளிக்கப்பட்ட தொகையானது 2011 ஆம் ஆண்டில் ரூபா.6,348,377,132 இற்கும்2012 ஆம் ஆண்டில் ரூபா3,149,577,623 இற்கும் 2013 இல் ரூபா 459,692,181 இற்கும் குறைடைந்துள்ளன. ஆணையாளர் நாயகத்தினால் கண்காணிக்கப்படும் இந்த இபெசேவ முறைமையின்கீழ் தகைமை வாய்ந்த ஆட்களின் 50% இற்கும் அதிகமான தகைமை வாய்ந்த ஆட்களுக்கு பொருட்கள் அல்லது சேவையினை வழங்கும் போது அதிகமான ஆட்கள் பொருட்கள் மற்றும் சேவைகளினைக் கொள்வனவு செய்வதற்குத் தகைமை பெறுகின்றார்கள். ஆகையால், எவ்வித வரியினையும் சேகரிக்க முடியாதிருப்பதுடன் ஆனால் செலுத்தப்பட்ட பெசேவரிக்கு முன்பாக உள்ளீட்டு வரியாக கோரிக்கை விடுக்கப்பட்டது.

குறித்த ஆண்டு காலப்பகுதியில் இபெசே.வரிக்காக 473 ஆட்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

| அட்டவணை 29 – இபெசேவ கடன் வவுச்சர் பகுப்பாய்வு | | | |
|---|---|---|---|
| ஆண்டு | மீள் கொடுப்பனவு செய்யப்பட்ட பெசேவ தொகை ரூபா. | குறித்த ஆண்டின் தேறிய வருமான சேகரிப்பின் % | இபெசேவ கடன் வவுச்சர் வழங்கப்பட்ட பெசேவ பாகத்தின் பெறுமதி ரூபா. (உள்நாட்டு கொள்வனவுடன் தொடர்புடையவை) |
| 2010 | 8,869,784,827 | 4.05% | |
| 2011 | 6,348,377,132 | 2.94% | 26,100,132,430 (from April 2011) |
| 2012 | 3,149,577,623 | 1.54% | 41,991,314,893 |
| 2013 | 459,692,181 | 0.21% | 45,337,507,743 |

## அத்தியாயம் 6 - சர்வதேச உறவுகள்

### 6.1 இரட்டை வரி விதிப்பினைத் தவிர்க்கும் ஒப்பந்தங்கள்

நாடுகள் சர்வதேச வர்த்தகத்தில் (அல்லது கொடுக்கல் வாங்கல்களில்) சட்டரீதியான இரட்டை வரி விதிப்பு மற்றும் அரசிறை வரி தட்டிக் கழிப்பினை இல்லாமல் செய்வதற்கு அல்லது அவற்றினைக் குறைப்பதற்காக இரட்டை வரி விதிப்பு ஒப்பந்தங்களை மேற்கொண்டு வருகின்றன. இத்தகைய ஒப்பந்தங்கள் குறிப்பாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் வெளிநாட்டு முதலீடுகள், நிபுணத்துவம், நவீன தொழில்நுட்பம் மற்றும் வேலைவாய்ப்புக்கள் போன்றவற்றினைக் கவரும் பொருட்டு அவை கடன் முகவராண்மையின் மூலம் பாரிய பங்களிப்புக்களை வழங்கி வருவதால் முக்கியத்துவம் பெறுகின்றன.
அத்துடன் ஒப்புரவினைப் பெற்றுக் கொள்ளும் வகையில் இரட்டை வரி ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் இது போன்ற நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பு இலங்கையின் பல்வேறு ஒப்பந்த பங்காளர்களுடன் ஏற்படுத்தப்பட்டது.

இலங்கையானது 2013.12.31 இலுள்ளவாறு 38 நாடுகளுடன் இரட்டை வரி விதிப்பினைத் தவிர்க்கும் ஒப்பந்தங்களையும் அட்டவணை 30 இல் விதித்துரைக்கப்பட்டவாறான பல்தரப்பு ஒப்பந்தங்களையும் (சார்க்) மேற்கொண்டுள்ளது. குறித்த ஆண்டு காலப்பகுதியில் மேலும் ஆறு ஒப்பந்தங்களுக்கான வரைமுறைகள் பெரும்பாலும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் அவை அமுல்படுத்தப்படும் வரையில் நிலுவையில் இருந்துள்ளன.

#### 6.1.1 இரட்டை வரி விதிப்பு ஒப்பந்தங்கள் மற்றும் பல்தரப்பு ஒப்பந்தங்களின் விபரம்

**அட்டவணை 30 - 2013.12.31 இல் வலுவிலுள்ளவாறு இரட்டை வரி விதிப்பு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ள நாடுகள்**

| | நாடுகள் | உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட திகதி | வர்த்தமானி | | வரி மதிப்பீட்டாண்டிலிருந்து இலங்கையில் தொழிற்பாடு |
|---|---|---|---|---|---|
| | | | இலக்கம் | திகதி | |
| 1 | அவுஸ்திரேலியா | 18-டிசம்-1989 | 657/2 | 8-ஏப்-1991 | 1992/93 |
| 2 | பங்களாதேஷ் | 24-யூலை-1986 | 448/13 | 7-ஏப்-1987 | 1989/90 |
| 3 | பெல்ஜியம் | 3-பெப்-1983 | 292/6 | 9-ஏப்-1984 | 1984/85 |
| 4 | கனடா | 23-யூன்-1982 | 253/8 | 13-யூலை-1983 | 1986/87 |
| 5 | சீனா | 11-ஆகஸ்-2003 | 1374/20 | 6-ஜன-2005 | 2006/07 |
| 6 | டென்மார்க் (Rev.) | 22-டிசம்-1981 | 228/15 | 20-ஜன-1983 | 1980/81 |
| 7 | பிரான்ஸ் | 17-செப்-1981 | 210/17 | 17-செப்-1982 | 1982/83 |
| 8 | பின்லாந்து | 18-மே-1982 | 253/8 | 13-யூலை-1983 | 1981/82 |
| 9 | ஜேர்மனி(Rev.) | 13-செப்-1979 | 113 | 31-ஒக்-1980 | 1982/83 |
| 10 | ஹொங்கொங் (வரையறு..) | 26-மார்ச்-2004 | 1374/21 | 6-ஜன-2005 | 2005/06 |
| 11 | இந்தியா (Rev.) | 22-ஜன-2013 | 1828/9 | 17-செப்-2013 | 2014/15 |
| 12 | இந்தோனேசியா | 3-பெப்-1993 | 789/10 | 21-ஒக்-1993 | 1995/96 |
| 13 | ஈரான் | 25- யூலை-2000 | 1187/16 | 6-யூன்-2001 | 2002/03 |
| 14 | இத்தாலி | 28-மார்ச்-1984 | 322/4 | 5-நொவ-1984 | 1978/79 |
| 15 | ஜப்பான் | 12-டிசம்-1967 | 14803/5 | 29-மே-1968 | 1969/70 |
| 16 | கொரியா | 28-மே-1984 | 342/11 | 29-மார்ச்-1985 | 1980/81 |
| 17 | குவைற் | 5-பெப்-2002 | 1245/19 | 18-யூலை-2002 | 2002/03 |
| 18 | மலேசியா (Rev.) | 16-செப்-1997 | 1028/21 | 22-மே-1998 | 99/2000 |
| 19 | மொறீசியஸ் | 12-மார்ச்-1996 | 958/10 | 15-ஜன-1997 | 1998/99 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 20 | நேபாளம் | 6-யூலை-1999 | 1116/6 | 26-ஜன-2000 | 2001/02 |
| 21 | நெதர்லாந்து | 17-நொவ-1982 | 281/13 | 26-ஜன-1984 | 1979/80 |
| 22 | நோர்வே(Rev.) | 1-டிசம்-1986 | 464/4 | 27-யூலை-1987 | 1989/90 |
| 23 | ஓமான் (வரையறு..) | 26-யூலை-1994 | 881/7 | 26-யூலை-1995 | 1979/80 |
| 24 | பாகிஸ்தான்(Rev.) | 15-ஒக்-1981 | 210/17 | 17-செப்-1982 | 1983/84 |
| 25 | பிலிப்பைன்ஸ் | 11-டிசம்-2000 | 1237/7 | 21-மே-2002 | 2010/11 |
| | | | 1256/27 | 2-ஒக்-2002 | |
| 26 | போலந்து | 25-ஏப்-1980 | 130 | 27-பெப்-1981 | 1984/85 |
| 27 | கட்டார் | 7-நொவ-2004 | 1422/10 | 5-டிசம்-2005 | 2008/09 |
| 28 | ரூமேனியா | 19-ஒக்-1984 | 371/9 | 15-ஒக்-1985 | 1986/87 |
| 29 | ரஷ்யா | 2-மார்ச்-1999 | 1101/22 | 15-ஒக்-1999 | 2003/04 |
| 30 | சவூதி அரேபியா (வரையறு) | 16-டிசம்-1999 | 1101/23 | 15-ஒக்-1999 | 1983/84 |
| 31 | சிங்கப்பூர் | 29-மே-1979 | 57/11 | 10-ஒக்-1979 | 1977/78 |
| 32 | சுவீடன் (Rev.) | 23-பெப்-1983 | 297/28 | 18-மே-1984 | 1985/86 |
| 33 | சுவிற்சலாந்து | 11-ஜன-1983 | 292/6 | 9-ஏப்-1984 | 1981/82 |
| 34 | தாய்லாந்து | 14-டிசம்-1988 | 571/16 | 18-ஆகஸ்-1989 | 1990/91 |
| 35 | ஐ.அ.எ. (வரை.) | 7-யூலை-1992 | 824/13 | 23-யூன்-1994 | 1979/80 |
| | ஐ.அ.எ. (விரிவான) | 24-செப்-2003 | 1346/1 | 21-யூன்-2004 | 2004/05 |
| 36 | ஐக்கிய இராச்சியம் | 21-யூன்-1979 | 60/23 | 2-நொவ-1979 | 1977/78 |
| 37 | ஐக்கிய அமெரிக்கா | 14-மார்ச்-1985 | 398/4 | 22-ஏப்-1986 | 2004/05 |
| | ஐக்கிய அமெரிக்கா | 20-செப்-2002 | 1298/8 | 21-யூலை-2003 | |
| 38 | வியட்னாம் | 26-ஒக்-2005 | 1455/9 | 24-யூலை-2006 | 2007/08 |
| **பல்தேசிய ஒப்பந்தங்கள்** | | | | | |
| 39 | சார்க் பல்தரப்பு ஒப்பந்தம் | 13-ஒக்-2005 | 1447/3 | 29-மே-29 | 2011/2012 |

### 6.1.2. 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இரட்டை வரி விதிப்பு ஒப்பந்தங்கள் தொடர்பிலான விடயங்கள்

**மீளாய்வு செய்யப்பட்ட இந்தியாவுடனான அறிக்கை**

இலங்கையில் நடாத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் பின்னர் உத்தியோகபூர்வ மட்டத்தில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையானது, ஜனவரியில் கைச்சாத்திடப்பட்டு 2013 ஒக்டோபர் 23 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

**பாலஸ்தீனத்துடனான உடன்படிக்கை**

பேச்சுவார்த்தைகளின் பின்னர் 2012 இல் கொழும்பில் அரசாங்க மட்டத்தில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையானது, 2013 நவம்பர் 26 ஆம் திகதியன்று வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது.

**பெலாரசுடனான உடன்படிக்கை**

பேச்சுவார்த்தைகள் 2013 ஆகஸ்ட் 05 - 09 வரையான காலப்பகுதியில் மின்ஸ்க்கில் நடாத்தப்பட்டதுடன் உடன்படிக்கை தொடர்பான விடயங்கள் உத்தியோகபூர்வ மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டன. அமைச்சரவை அங்கீகாரமானது 2013, ஆகஸ்ட் 15 ஆம் திகதியன்று பெறப்பட்டுள்ளதுடன் 2013 ஆகஸ்ட் 26 ஆம் திகதி அரசாங்க மட்டத்தில் கைச்சாத்திடப்பட்டது. பாராளுமன்ற அங்கீகாரமானது பெறப்பட்டதுடன் உடன்படிக்கையானது 2013 நவம்பர் 20 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டது.

**மீளாய்வு செய்யப்பட்ட சிங்கப்பூர் உடன்படிக்கை**

இலங்கைக்கும் சிங்கப்பூருக்குமிடையிலான இரட்டை வரி விதிப்பினைத் தவிர்ப்பதற்கான உடன்படிக்கையின் மீளாய்வுக்கான பேச்சுவார்த்தைகளின் முதலாவது சுற்று 2013 ஒக்டோபர் 21 – 26 வரையில் நொவெனாவில் நடாத்தப்பட்டது. இந்த உடன்படிக்கையானது உத்தியோகபூர்வ மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

**மீளாய்வு செய்யப்பட்ட போலந்து நாட்டுடனான உடன்படிக்கை**

போலந்து நாட்டுடனான இரட்டை வரி விதிப்பினைத் தவிர்க்கும் உடன்படிக்கையின் மீளாய்வு மீதான பேச்சுவார்த்தைகள் 2013 டிசம்பர் 2 ஆம் திகதியிலிருந்து 6 ஆம் திகதி வரையில் நடாத்தப்பட்டதுடன் உடன்படிக்கையின் வரைபு உத்தியோகபூர்வ மட்டத்தில் தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது. அரசாங்க மட்டத்தில் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கான அமைச்சரவையின் அங்காரம் மற்றும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான அங்கீகாரம் என்பன எடுக்கப்பட வேண்டியுள்ளன.

**லக்ஸ்ஸம்பேர்க் உடனான உடன்படிக்கை**

2010 இல் உத்தியோகபூர்வ மட்டத்தில் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட உடன்படிக்கையானது, 2013 ஜனவரி 31 ஆம் திகதி அரசாங்க கைச்சாத்திடப்பட்டுள்ளதுடன் 2013 நவம்பர் 26 ஆம் திகதியன்று வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது.

**சீசெல்சுடனான உடன்படிக்கை**

2011 இல் அரசாங்க மட்டத்தில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையானது, 2013 நவம்பர் 20 ஆம் திகதியன்று வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது.

**மீளாய்வு செய்யப்பட்ட ஓமானுடனான உடன்படிக்கை**

இலங்கைக்கும் ஓமானுக்குமிடையில் இரட்டை வரி விதிப்பினைத் தவிர்ப்பதற்கான உடன்படிக்கையின் மீளாய்வு தொடர்பான பேச்சுவார்த்தைகள் 2013 ஒக்டோபர் 07 – 10 வரையில் கொழும்பில் நடாத்தப்பட்டதுடன் ஒப்பந்த கைச்சாத்திடலானது நிலுவையில் உள்ளது.

## 6.2 வெளிநாடுகளில் நடாத்தப்பட்ட சர்வதேச வரி விதிப்பு தொடர்பான விடயங்களில் பங்குபற்றுதல்கள்

**அட்டவணை 31 - வெளிநாடுகளில் நடாத்தப்பட்ட சர்வதேச வரி விதிப்பு தொடர்பான விடயங்களில் பங்குபற்றுதல்கள்**

| | அலுவலரின் பெயரும் பதவிப் பெயரும் | நிகழ்ச்சித்திட்டம் | நாடு | காலப்பகுதி |
|---|---|---|---|---|
| 1 | திரு.எச்.பீ.ஏ.செனெவிரத்ன<br>சிரேஷ்ட பிரதி ஆணையாளர் நாயகம் | சார்க் தகைமைவாய்ந்த அதிகாரிகளின் இரண்டாவது கூட்டம் | நேபாளம் | 22.05.2013-23.05.2013 |
| 2 | திரு.எச்.பீ.ஏ.செனெவிரத்ன<br>சிரேஷ்ட பிரதி ஆணையாளர் நாயகம் | இரட்டை வரி விதிப்பினைத் தவிர்க்கும் உடன்படிக்கை | பெலாரஸ் | 05.08.2013-09.8.2013 |
| 3 | திரு.எச்.பீ.ஏ.செனெவிரத்ன<br>சிரேஷ்ட பிரதி ஆணையாளர் நாயகம் | இரட்டை வரி விதிப்பினைத் தவிர்க்கும் உடன்படிக்கை | சிங்கப்பூர் | 21.10.2013-26.10.2013 |
| 4 | திரு.எச்.பீ.ஏ.செனெவிரத்ன<br>சிரேஷ்ட பிரதி ஆணையாளர் நாயகம் | இரட்டை வரி விதிப்பினைத் தவிர்க்கும் உடன்படிக்கை | போலந்து | 02.12.2013-06.12.2013 |
| 5 | திருமதி.கே.தஹநாயக்க<br>பிரதி ஆணையாளர் நாயகம் | IFA இன் 67 ஆவது காங்கிரஸ் | டென்மார்க் | 25.08.2013-30.08.2013 |
| 6 | திருமதி.ஆர்.எம்.ஆர்.டப்.மஞ்சநாயக்க<br>பிரதி ஆணையாளர் நாயகம் | OECD : 18 ஆவது வருடாந்த வரி ஒப்பந்த கூட்டம் | பாரிஸ் | 25.09.2013-27.09.2013 |

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | திருமதி.பி.ரோஹினி<br>ஆணையாளர் | OECD : 18 ஆவது வருடாந்த வரி ஒப்பந்த கூட்டம் | பாரிஸ் | 25.09.2013-27.09.2013 |
| 8 | திருமதி.ஆர்.எம்.பி.எஸ்.கே.ராஜபக்ஷ<br>ஆணையாளர் | OECD : 18 ஆவது வருடாந்த வரி ஒப்பந்த கூட்டம் | பாரிஸ் | 25.09.2013-27.09.2013 |
| 9 | செல்வி.டி.ஜி.பி.டப்.குணதிலக<br>ஆணையாளர் | IRBM- OECD வரிக் கொள்கை பகுப்பாய்வு | மலேசியா | 18.02.2013-22.02.2013 |
| 10 | செல்வி.டி.ஜி.பி.டப்.குணதிலக<br>ஆணையாளர் | இரட்டை வரி விதிப்பினைத் தவிர்க்கும் உடன்படிக்கை | சிங்கப்பூர் | 21.10.2013-26.10.2013 |
| 11 | திரு.ஜே.பி.டி.ஆர்.ஜயசேகர<br>ஆணையாளர் | ஆசிய நாடுகளுக்கான நான்காவது உயர் மட்ட வரி மாநாடு | ஜப்பான் | 02.04.2013-04.04.2013 |
| 12 | திருமதி.கே.எஸ்.பீ.ஆர்.டி.எஸ்.கருணாரத்ன<br>ஆணையாளர் | IRAS-OECD : பிராந்திய GST/VAT மாநாடு | சிங்கப்பூர் | 22.05.2013-23.05.2013 |
| 13 | திரு.எச்.எம்.ஜி.விஜேசிங்க<br>ஆணையாளர் | IRBM-OECD : வரி ஒப்பந்த விசேட விடயங்கள் | மலேசியா | 18.03.2013-22.03.2013 |
| 14 | திருமதி.பீ.ஏ.டி.டி.ஹேரத்<br>ஆணையாளர் | IRBM-OECD : வரி ஒப்பந்த விசேட விடயங்கள் | மலேசியா | 18.03.2013-22.03.2013 |
| 15 | திருமதி.பீ.ஏ.டி.டி.ஹேரத்<br>ஆணையாளர் | இரட்டை வரி விதிப்பினைத் தவிர்க்கும் உடன்படிக்கை | பெலாரஸ் | 05.08.2013-09.08.2013 |
| 16 | திருமதி.பீ.ஏ.டி.டி.ஹேரத்<br>ஆணையாளர் | இரட்டை வரி விதிப்பினைத் தவிர்க்கும் உடன்படிக்கை | சிங்கப்பூர் | 21.10.2013-26.10.2013 |
| 17 | திரு.ரி.எம்.தயானந்த<br>ஆணையாளர் | OECD-IBFD : நிதிச் சந்தைகள் மீதான வரி விதிப்பு | மலேசியா | 26.08.2013-30.08.2013 |
| 18 | திரு.டி..ஆர்.எஸ்.ஹபுஆரச்சி<br>ஆணையாளர் | சார்க் தகைமைவாய்ந்த அதிகாரிகளின் இரண்டாவது கூட்டம் | நேபாளம் | 22.05.2013-23.05.2013 |
| 19 | திரு.டி..ஆர்.எஸ்.ஹபுஆரச்சி<br>ஆணையாளர் | இரட்டை வரி விதிப்பினைத் தவிர்க்கும் உடன்படிக்கை | போலந்து | 02.12.2013-06.12.2013 |
| 20 | திரு.எம்.ஐ.எம்.முஸாம்மில்<br>பிரதி ஆணையாளர் | LHDNM-OECD: வரி ஒப்பந்தங்கள் தொடர்பான பிரயோகம் மற்றும் பேச்சுவார்த்தைகளின் அறிமுகம் | மலேசியா | 30.09.2013-12.10.2013 |
| 21 | செல்வி.எச்.ஏ.லலிதா ரஞ்சனி<br>பிரதி ஆணையாளர் (பதிற் கடமை) | IRBM : CATA; சர்வதேச கொடுக்கல் வாங்கல் தொடர்பான வரி விதிப்பு மீதான செயலமர்வு | மலேசியா | 03.06.2013-21.06.2013 |
| 22 | திரு.பந்துல ஹபுதத்ரிகே<br>பிரதி ஆணையாளர் (பதிற் கடமை) | IRBM-OECD: சர்வதேச வரி தவிர்ப்பு, | மலேசியா | 21.10.2013-25.10.2013 |
| 23 | திருமதி.எச்.எஸ்.வை.சொய்சா<br>வரி மதிப்பீட்டாளர் | இரட்டை வரி விதிப்பினைத் தவிர்க்கும் உடன்படிக்கை | பெலாரஸ் | 05.08.2013-09.08.2013 |
| 24 | திருமதி.எச்.எஸ்.வை.சொய்சா<br>வரி மதிப்பீட்டாளர் | இரட்டை வரி விதிப்பினைத் தவிர்க்கும் உடன்படிக்கை | சிங்கப்பூர் | 21.10.2013-26.10.2013 |
| 25 | திருமதி.எம்.சி.குணதிலக<br>வரி மதிப்பீட்டாளர் | இரட்டை வரி விதிப்பினைத் தவிர்க்கும் உடன்படிக்கை | போலந்து | 02.12.2013-06.12.2013 |
| 26 | திருமதி.பி.டி.ஐ.டி.ஜயரத்ன<br>வரி மதிப்பீட்டாளர் | இரட்டை வரி விதிப்பினைத் தவிர்க்கும் உடன்படிக்கை | பெலாரஸ் | 05.08.2013-09.08.2013 |
| 27 | திருமதி.பி.டி.ஐ.டி.ஜயரத்ன<br>வரி மதிப்பீட்டாளர் | இரட்டை வரி விதிப்பினைத் தவிர்க்கும் உடன்படிக்கை | போலந்து | 02.12.2013-06.12.2013 |

## அத்தியாயம் 7 - சட்டவாக்கம்

### 7.1 குறித்த ஆண்டு காலப்பகுதியில் சட்டமாக்கப்பட்ட சட்டவாக்கம்

i. 2013 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி (திருத்த) சட்டம்
ii. 2013 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டண (திருத்த) சட்டம்
iii. 2013 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க பெறுமதிசேர் வரி (திருத்த) சட்டம்
iv. 2013 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க தேச கட்டுமான வரி (திருத்த) சட்டம்
v. 2013 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க பந்தயம் மற்றும் சூதாட்ட வரி (திருத்த) சட்டம்
vi. 2013 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு (திருத்த) சட்டம்

### 7.2 அங்கீகரிக்கப்பட்ட தரும தாபனங்கள்

குறித்த ஆண்டு காலப்பகுதியில் அங்கீகாரம் எதுவும் வழங்கப்படவில்லை.

### 7.3 வர்த்தமானி அறிவித்தல்கள்

திணைக்களத்தினால் நிருவகிக்கப்படும் உரிய சட்டங்களின் கீழ் குறித்த ஆண்டு காலப்பகுதியில் பின்வரும் வர்த்தமானி அறிவித்தல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

**அட்டவணை 32 – 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்கள்**

| | வர்த்தமானி இல. | திகதி | விவரணம் |
|---|---|---|---|
| I | 1813/17 | 06.06.2013 | 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 34 ஆம் உட்பிரிவின் (2) ஆம் பந்தியின் நோக்கங்களுக்காக, அதிகாரத்தின் மூலம் அடையாளங் காணப்பட்ட கிராமங்களின் பெயர்கள் பிரசுரிக்கப்பட்டன. |
| II | 1823/05 | 12.08.2013 | இணைந்த தொழில்முயற்சிகளுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்களின் இலாபங்களை மதிப்பீடு செய்வதற்கு தொடர்புபடாத விலையிலான முறைகள் |

### 7.4 உரைபெயர்ப்புக் குழு

வரிச் சட்ட விதிகள் தொடர்பான உரைபெயர்ப்புக் குழுவானது உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் நிருவகிக்கப்படும் சட்டங்களின் ஏற்பாடுகள் தொடர்பான உரைபெயர்ப்புக்கள், விளக்கமளிப்புக்கள், வழிகாட்டுதல்கள் போன்றவற்றின் வழங்குகைகளுக்கு பொறுப்பு வகிக்கின்ற சிரேஷ்ட பிரதி ஆணையாளர் நாயகத்தின் தலைமையில் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் சிரேஷ்ட உத்தியோகத்தர்களைக் கொண்டதாக உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரிவு 208 அ இன் கீழ் உள்நாட்டு இறவைரி ஆணையாளர் நாயகத்தினால் 2011 இல் நியமிக்கப்பட்டது.

உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் நிருவகிக்கப்படும் அனைத்து சட்டவாக்கங்களின் ஏதேனும் ஏற்பாட்டில் ஒன்றிற்கு மேற்பட்ட பொருளினைக் காணுமிடத்து, இக்குழுவிடம் (குழு செயலாளர், செயலகம், உள்நாட்டு இறைவரி திணைக்களம்) அது தொடர்பான உரைபெயர்ப்பினை கோரலாம். வரிச் சட்ட விதிகளுக்கான உரைபெயர்ப்புக் குழுவானது, குறித்த ஆண்டு காலப்பகுதியில் கையாண்ட 54 வழக்குகள் தொடர்பான உரைபெயர்ப்புக்கள் மற்றும் நடைமுறைகள் தொடர்பில் ஒத்திசைவான

உறுதிப்படுத்துகைக்கு தேவையான வழிகாட்டுதல்கள் மற்றும் அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. அட்டவணை 33 ஆனது வரிச் சட்ட விதிகள் தொடர்பான உரைபெயர்ப்புக் குழுவினால் வழங்கப்பட்ட உரைபெயர்ப்புக்களின் விபரத்தினைக் காட்டுகின்றது.

**அட்டவணை 33 – 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் குழுவினால் வழங்கப்பட்ட உரைபெயர்ப்பின் விபரங்கள்**

| வரி வகை | விடயம் | வழங்கப்பட்ட உரைபெயர்ப்புக்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| **வருமான வரி** | வருமான வரியின் பொறுப்புடமை | 3 |
| | பங்கிலாபங்கள் | 1 |
| | விலக்களிப்புக்கள் | 8 |
| | இலாபங்கள் மற்றும் வருமானத்தினைக் கணிப்பீடு செய்வதில் அனுமதிக்கப்பட்ட கழிப்பனவுகள் | 3 |
| | ஊழிய வருமானம் | 2 |
| | சலுகை வீத வரிகள் | 8 |
| | வரைவிலக்கணம் | 3 |
| | தண்டப்பணக் குறைப்பு அல்லது விடுவிப்பு | 1 |
| | | |
| **பெறுமதிசேர் வரி** | பெசேவ இற்கான பொறுப்புடமை | 5 |
| | பூச்சிய வீத வரியளிக்கப்பட்ட வகையீட்டினுள் உள்ளடங்கும் கம்பனியின் வழங்கல்கள் | 2 |
| | உள்ளீட்டு வரி தீர்ப்பனவு | 1 |
| | முதலீட்டு நிதிய கணக்கு | 1 |
| | | |
| **தேசக் கட்டுமான வரி** | புரள்வுப் பொறுப்புடமைக்கான வரைவிலக்கணங்களும் கணிப்பீடும் | 6 |
| | தேகவ இற்கான பொறுப்புடமை | 2 |
| | விலக்களிப்புக்கள் | 1 |
| | | |
| **முத்திரைத் தீர்வை** | விலக்களிப்புக்கள் | 1 |
| | மாற்றல் அல்லது பங்கு வழங்கல் மீதான பங்கு சான்றிதழ்களின் மீதான பொறுப்புடமை | 3 |
| | | |
| **பொசேக** | புரள்வு பொறுப்புடமையின் கணிப்பீடு | 2 |
| | | |
| **பந்தயம் மற்றும் சூதாட்ட வரி** | பொறுப்புடமை | 1 |
| | **மொத்தம்** | **54** |

# அத்தியாயம் 8 - ஏனைய பணிகள்

## 8.1 வரி செலுத்துனர் சேவைப் பிரிவு

வரி செலுத்துனர் சேவைப் பிரிவானது, திணைக்களத்தின் கோவையானது பொதுமக்களுக்கும் வரி செலுத்துனருக்கும் சௌகரியமான முறையில் கிடைக்கச் செய்வதற்கான வசதிப்படுத்தல்களினை வழங்கி வருகின்றது. இப்பிரிவானது இப்பிரிவானது உதவியினை அல்லது தகவலினைக் கோருகின்ற ஒவ்வொரு ஆளுக்கும் உதவியளிப்பதற்கான அலுவலர்களைக் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. உரிய சட்டவாக்கங்கள், திணைக்கள வெளியீடுகள், கொடுப்பனவு துண்டுகள், படிவங்கள் போன்றன இப்பிரிவில் கிடைக்கக் கூடியதாகவுள்ளன. வரி செலுத்துனர் அடையாள இலக்கங்கள் (TIN) மற்றும் தற்காலிக பெசேவ இலக்கங்களை வழங்குவதில் ஏற்படும் தாமதங்கள் மற்றும் அசௌகரியங்களைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள் இப்பிரிவில் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்கிணங்க, குறித்த ஆண்டு காலப்பகுதியில் 7666 சான்றிதழ்கள் இப்பிரிவினால் வழங்கப்பட்டுள்ளன. (புதிய கோவைகளை திறப்பதற்காக தகவல் பிரிவுக்கு 3523 தற்காலிக பெசேவ விண்ணப்பங்களும் ஒருங்கிணைந்த பிரிவுகளுக்கு 4034 வரி செலுத்துனர் அடையாள இலக்க (TIN) விண்ணப்பங்களும் இப்பிரிவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.)

மேலும், குறித்த ஆண்டு காலப்பகுதியில் 276 விடுவிப்புச் சான்றிதழ்கள் வரி செலுத்தாதோருக்காக வழங்கப்பட்டுள்ளதுடன் வரி செலுத்துனர்களுக்கு நன்மையளிப்பதற்காக பல்வேறு வகையான துண்டுப் பிரசுரங்களும் தயாரிக்கப்பட்டன. இதற்கும் மேலாக, திணைக்களத்தின் நிலத்தளத்தில் தாபிக்கப்பட்டுள்ள " One Stop Shop" இனூடாக வரி செலுத்துனர்களுக்கான உசாவுதல் சேவைகளும் வழங்கப்பட்டு வருவதுடன் குறித்த ஆண்டு காலப்பகுதியில் 33 விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

## 8.2 திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பணிப்புரைகள் மற்றும் இசைவாணைச் சான்றிதழ்கள்

**அட்டவணை 34 – திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பணிப்புரைகளும் இசைவாணைச் சான்றிதழ்களும்**

| விபரணம் | 2013 | 2012 |
|---|---|---|
| ***வழங்கப்பட்ட பணிப்புரைகள்*** | | |
| • உபொசெ வரி கழிப்பனவு தொடர்பில் தொழில் வழங்குனர்களுக்கு | - | - |
| • வட்டி மீதான பிடித்து வைத்தல் வரிக்காக வங்கிகளுக்கு | 97 | 123 |
| • குறித்துரைக்கப்பட்ட கட்டணங்கள் தொடர்பில் | 7 | 16 |
| ***வழங்கப்பட்ட விடுவிப்புச் சான்றிதழ்கள்*** | | |
| • ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்தான மீளப்பெறுகைகளுடன் தொடர்புடையவை | 125 | 333 |
| • நாட்டினை விட்டு செல்பவர்களுடன் தொடர்புடையவை | 276 | 33 |
| ***வழங்கப்பட்ட சிறப்புரிமை அட்டைகள்*** | | |
| • தங்க அட்டைகள் | 157 | 150 |
| • வெள்ளி அட்டைகள் | 93 | 65 |
| ***மோட்டார் கார்களின் இறக்குமதிகள் மீதான வரிச் சலுகைகளுக்காக வழங்கப்பட்ட சான்றிதழ்*** | | |
| • வழங்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை | 129 | 233 |

## 8.3 பகுப்பாய்வு அறிக்கைகள்

திணைக்களத்தின் பொருளாதார ஆய்வு மற்றும் திட்டமிடல் அலகானது, மத்திய வங்கி, குடித்தொகை மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் போன்ற பல்வேறு மூலங்களிலிருந்து பெறப்பட்ட தரவுகளைப் பகுப்பாய்வு செய்வதன் மூலம் பல்வேறு வகையான ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது.

பொருளாதார ஆய்வு மற்றும் திட்டமிடல் அலகினால் குறித்த ஆண்டு காலப்பகுதியில் பின்வரும் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

1. வங்கித்துறையின் வருமான வீழ்ச்சி மீதான பகுப்பாய்வு அறிக்கை.
2. 04 தெரிவு செய்யப்பட்ட துறைகளுக்கான வரையளவு. (சிகை அலங்கரிப்பாளர்களும் அழகு நிலையங்களும், ஹோட்டல் துறை, நிருமாண கைத்தொழில், விளம்பரத்துறை)
3. காலாண்டு பெசேவ மீள் நிதியிடல் அறிக்கை. (30.09.2012, 31.12.2012, 31.03.2013 மற்றும் 30.06.2013)
4. வருமான வரி மீது வழங்கப்பட்ட வரி விலக்களிப்புக்களின் தாக்கம் மீதான பகுப்பாய்வு அறிக்கை, பெசேவ மற்றும் தேகவ என்பவற்றிற்கான எல்லையினை அதிகரித்தல் மற்றும் வருமானம் மீதான SVAT இன் அறிமுகம்.
5. துறை ரீதியான, செயற்பாட்டு ரீதியான மற்றும் வரி ரீதியான பொருளாதார குறிகாட்டிகளைக் கருத்தில் கொண்ட வருமானம் தொடர்பான பகுப்பாய்வு அறிக்கை. (வருடாந்தம், காலாண்டு, மாதாந்தம், தினசரி)
6. மாதாந்த மற்றும் காலாண்டு வரி அறிக்கைகள். (2013.04.30 வரையில்)

## 8.4 வருமான நிருவாக முகாமைத்துவ தகவல் பிரிவு (RAMIS)

திணைக்களத்தின் வினைத்திறனை விரிவாக்கும் நோக்குடன் நிதி திட்டமிடல் அமைச்சானது பிசுக்கால் முகாமைத்துவ மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக வருமான நிருவாக முகாமைத்துவ தகவல் பிரிவு முறைமையினை அமுல்படுத்துவதற்கு விரும்பியது.

நிதி திட்டமிடல் அமைச்சானது வருமான நிருவாக முகாமைத்துவ தகவல் பிரிவு முறைமையினை அமுல்படுத்துவதில் உதவியளிப்பதற்காக சிங்கப்பூர் ஈடுபடுவதற்கென 2012.11.29 ஆம் திகதியன்று அமைச்சரவை அங்கீகாரத்தினைப் பெற்றிருந்தது.

இந்நோக்கத்திற்காக, நிதி திட்டமிடல் அமைச்சுக்கும் சிங்கப்பூரின் இன்போகொம் சர்வதேச அதிகாரசபைக்குமிடையில் 2013.06.05 ஆம் திகதியன்று புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டது.

வருமான நிருவாக முகாமைத்துவ தகவல் பிரிவு முறைமையின் நோக்கங்கள் பின்வருமாறு இனங்காணப்பட்டுள்ளன.

i. வரிச் சட்ட விதிகளுடன் இணங்கியவாறு வரி செலுத்துனர்களுக்கான முயற்சிகளைக் குறைக்கும் வகையில் சுயசேவை முறையிலான வரி செலுத்துனர் சேவைகளின் மாற்றீடும் கொடுக்கல்வாங்கல்கள் செயல்முறையில் வரி அதிகாரிகளின் நிருவாக சுமையினைக் குறைத்தலும்.

ii. வரி செலுத்துனர்களுக்கான வரி இணக்கச் செலவு மற்றும் திணைக்களத்திற்கான வரி நிருவாகச் செலவு ஆகியவற்றினைக் குறைத்தல்.

iii. திணைக்களத்தினுள் அல்லது திணைக்களத்திற்கு வெளியே கிடைக்கக் கூடிய தகவல்களின் அடிப்படையில் வரி செலுத்துனர் தகவல் மற்றும் வரி பொறுப்புகளுக்கிடையேயான வரிகள் மீது நல்லிணக்கத்தினை ஏற்படுத்துதல்.

iv. கணனிகள் மற்றும் இணையத்தின் அணுகுமுறையுடன் அல்லது இல்லாமல் அனைத்து வரி செலுத்துனர்களுக்கும் சேவை வழங்கும் வழிமூலங்களை அமுல்படுத்துதல்.

v. தனிநபர் மற்றும் ஒருங்கிணைந்த வரி செலுத்துனர்களுக்காக தனித்துவமான அடையாள இலக்கத்தினை அமுல்படுத்துதலும் மையப்படுத்தப்பட்ட வரி செலுத்துனர் தரவுத் தளத்தினை உருவாக்குதலும்.

vi. திணைக்களத்திற்கும் ஏனைய பிரதான அக்கறைதாரர்களான நிதி திட்டமிடல் அமைச்சு, வங்கிகள், சுங்கத் திணைக்களம் மற்றும் தொழிற்பாட்டு வினைத்திறன்கள், வருமான சேகரிப்பு மற்றும் இணக்க கண்காணிப்பு போன்றவற்றினை மேம்படுத்துவதற்கான ஏனைய உரிய முறைகளைத் தாபித்தல்.

vii. வரி செலுத்துனர்களுடன் தொடர்புடைய வெளியக நடவடிக்கை தரவு மூலங்களின் பகுப்பாய்வினை, வினைத்திறன் வாய்ந்த வரி இணக்க கண்காணிப்பினூடாக வரி வருமானத்தினை மேம்படுத்துதல்.

உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட 5 ஆணையாளர்கள் மற்றும் பிரதி ஆணையாளர் நாயகம் ஆகியோரினைக் கொண்ட குழுவானது சிங்கப்பூர் இன்போகொம் அபிவிருத்தி சர்வதேச அதிகாரசபையின் பிரதிநிதிகள் மற்றும் நிதி திட்டமிடல் அமைச்சின் உத்தியோகத்தர்கள் ஆகியோரைச் சந்தித்து தேவையான நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடியுள்ளார்கள்.

சிங்கப்பூர் இன்போகொம் அபிவிருத்தி சர்வதேச அதிகாரசபையானது 2013 ஆகஸ்டில் அவற்றின் விரிவான பிரேரணையினை சமர்ப்பித்தது. அமைச்சரவையானது பிரேரணையினை மதிப்பாய்வு செய்வதற்கும் நியதிகள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கும் பேச்சுவார்த்தைக் குழுவொன்றினை நியமித்தது.

வருமான உத்தியோகத்தர்களின் குழுவொன்று நடைபெற்று வரும் வேலைகளை மதிப்பாய்வு செய்வதற்காக 2013 நவம்பரில் சிங்கப்பூருக்கு விஜயம் செய்து அமைச்சரவை நியமித்த பேச்சுவார்த்தை குழுவுக்கு அறிக்கையொன்றினைச் சமர்ப்பித்துள்ளது.

## மதிப்பீட்டுப் பிரிவுகளுக்கிடையில்பதவியணி , கோவைகள்மற்றும் வருமான பகிர்வு

| மதிப்பீட்டுப் பிரிவுகள் | பதவியணி | | | | | | | கோவைகள் | | | | | | | | வருமானம் (ரூபா மில்.) | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பிஆ | சிவம | வம | சிவஅ | வஅ | ஏனையவை | மொத்தம் | வ/வ-நிவைவ | வதியாதோர் | பெசேவ/வி ருப்பு பெசேவ | தேகவ | உபொசெவ | பொசேக | பந்.& சூ.அறவீடு மு.தீர் | அசாநி | வருமான வரி சபொஅறவீடு | உபொசெவ | பொசேக | பெசேவ/ பொசேவ/ மா.பெசே.வ | தேகவ | கவ/ப்பதீ | பு.வ/ ப.சூ | மு.தீர்வை - காணி வரி | மொத்தம் |
| சர்வதேச பிரிவு (5ஆ) | 1 | - | 6 | 3 | - | 4 | 14 | - | 555 | 81 | 30 | 67 | 21 | - | 179 | 4,126.74 | 380.68 | 103.09 | 515.18 | 66.48 | - | - | - | 5,192.17 |
| அலகு 1 மற்றும் 2 | 1 | - | 7 | 7 | - | 6 | 21 | 3,762 | - | - | - | - | 14 | - | - | 760.40 | - | 0.37 | 18.62 | 10.97 | - | - | - | 790.36 |
| அலகு 3 | 1 | 1 | 8 | 9 | - | 9 | 28 | - | - | - | - | - | - | - | - | 19.30 | - | - | - | - | - | - | - | 19.30 |
| அலகு 4 | 1 | 2 | 5 | 5 | - | 9 | 22 | 1,064 | - | 777 | 612 | 818 | 168 | - | - | 635.81 | 231.44 | 124.41 | 1,343.77 | 520.86 | 0.23 | - | - | 2,856.52 |
| அலகு 4அ | 1 | 4 | 8 | 6 | - | 8 | 27 | 5,378 | - | 926 | 2,518 | 1,664 | 14 | - | - | 592.01 | 191.78 | 79.06 | 998.72 | 395.05 | 0.82 | - | - | 2,257.45 |
| அலகு 5 | 1 | 2 | 5 | 6 | - | 7 | 21 | 862 | - | 624 | 593 | 653 | 87 | - | - | 754.98 | 412.79 | 221.03 | 1,286.83 | 463.93 | - | - | - | 3,139.55 |
| அலகு 5இ | 1 | 2 | 9 | 6 | - | 6 | 24 | 4,376 | - | 1,035 | 548 | 1,281 | 39 | - | - | 698.65 | 251.71 | 127.40 | 927.97 | 499.70 | 0.57 | - | - | 2,505.99 |
| அலகு 17 | 1 | - | 8 | 8 | - | 8 | 25 | 7,952 | - | 812 | 585 | 636 | 72 | - | - | 441.82 | 320.08 | 41.04 | 1,170.82 | 469.14 | - | - | - | 2,442.89 |
| அலகு 12 (5ஆ) | 1 | 1 | 7 | 8 | - | 5 | 22 | 902 | 7 | 888 | 482 | 764 | 767 | - | 1 | 1,471.04 | 350.71 | 187.09 | 1,374.61 | 408.38 | 0.22 | - | - | 3,792.05 |
| அலகு 5ச | 1 | 1 | 8 | 7 | - | 4 | 21 | 3,919 | - | 903 | 522 | 667 | 70 | - | - | 510.50 | 176.53 | 117.36 | 927.47 | 324.65 | (0.40) | - | - | 2,056.12 |
| அலகு 14 மற்றும் 15 | 2 | 1 | 11 | 9 | - | 10 | 33 | 9,180 | - | 2,682 | 1,855 | 2,002 | 1,114 | - | - | 1,085.12 | 185.57 | 220.24 | 2,470.61 | 1,407.27 | 0.12 | - | - | 5,368.92 |
| நிறுவன வரிக் கணக்காய்வு | 1 | 1 | 7 | 8 | - | 7 | 24 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| அலகு 10 | 2 | 2 | 12 | 12 | - | 5 | 33 | 634 | - | 431 | 367 | 469 | 379 | - | - | 5,875.60 | 2,352.95 | 1,017.43 | 10,687.45 | 3,604.54 | 0.13 | - | - | 23,538.08 |
| அலகு 6அ | 1 | 2 | 8 | 11 | - | 7 | 29 | 411 | 3 | 403 | 389 | 341 | 33 | - | - | 7,469.15 | 1,652.01 | 611.01 | 10,751.56 | 4,863.58 | 0.31 | - | - | 25,347.62 |
| பா.வ.செ.அலகு கணக்காய்வு | 2 | - | 12 | 13 | - | 9 | 36 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| அலகு 6இ | 2 | 1 | 13 | 10 | - | 9 | 35 | 164 | 7 | 279 | 85 | 138 | 94 | - | - | 34,559.82 | 3,707.79 | 190.71 | 30,464.39 | 1,706.51 | 0.31 | 0.47 | - | 70,630.00 |
| அலகு 7அ | 2 | 2 | 10 | 11 | - | 8 | 33 | 464 | 3 | 400 | 412 | 416 | 271 | - | - | 13,186.78 | 3,692.81 | 1,434.28 | 15,902.81 | 8,808.70 | 1.85 | - | - | 43,027.24 |
| அலகு 7ஆ | 2 | 2 | 11 | 10 | - | 7 | 32 | 423 | - | 394 | 361 | 350 | 89 | - | - | 8,396.99 | 1,447.27 | 573.75 | 18,670.61 | 4,100.15 | 4.26 | - | - | 33,193.03 |
| அலகு 8 | 2 | 1 | 11 | 13 | - | 6 | 33 | 428 | 8 | 445 | 350 | 399 | 431 | - | - | 13,049.17 | 2,604.79 | 944.73 | 19,128.05 | 2,874.95 | 0.03 | - | - | 38,601.73 |
| நிவைவரி-விசேட கட்டணம் | 1 | - | 3 | 6 | - | 6 | 16 | 84 | - | - | - | - | - | - | - | 1,007.03 | - | - | - | - | - | - | - | 1,007.03 |
| வட்டி மீதான நிவைவரி | 1 | - | 7 | 4 | - | 5 | 17 | 2,517 | - | - | - | - | - | - | - | 77,694.70 | - | - | - | - | - | - | - | 77,694.70 |
| உபொசெவ பிரிவு | 1 | - | 5 | 3 | - | 7 | 16 | - | - | - | - | 1,113 | - | - | - | 1,233.11 | 63.62 | - | - | - | - | 1,197.41 | - | 2,494.15 |
| பொசேக, தேகவ, பந். & சூ.. | 1 | 1 | 5 | 5 | - | 5 | 17 | - | - | - | - | - | - | 1,072 | - | - | - | - | - | - | 592.77 | - | - | 592.77 |
| பெசேவ விசேட கணக்காய்வு | 1 | 1 | 10 | 11 | - | 6 | 29 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| பெசேவ மீளளிப்பு | 4 | 2 | 15 | 16 | - | 13 | 50 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| பெசேவ பதிவு | 1 | - | 4 | 2 | - | 9 | 16 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| பெசேவ-கணக்காய்வு&சேகரிப்பு | 2 | - | 14 | 13 | - | 4 | 33 | - | - | 3,941 | - | - | - | - | - | - | - | - | 3,453.83 | - | - | - | - | 3,453.83 |
| இபெசேவ-கணக்காய்வு பிரிவு | 1 | - | 9 | 6 | - | 4 | 20 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| இபெசேவ - மேற்பார்வை | 1 | - | 3 | 1 | - | 1 | 6 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| முத்திரைத் தீர்வை | 1 | - | 8 | 10 | - | 8 | 27 | - | - | - | - | - | - | 7,648 | - | - | - | - | - | - | - | - | 6,981.06 | 6,981.06 |
| **பிராந்திய அலுவலகங்கள்** | | | | | | | | | - | | | | | | | | | | | | | | | |
| கொழும்பு தெற்கு | 1 | 1 | 14 | 9 | - | 12 | 37 | 10,043 | - | - | 366 | - | 63 | - | - | 822.01 | - | 13.11 | 0.47 | 165.97 | - | - | - | 1,001.56 |
| கொழும்பு மத்திய | 1 | 2 | 12 | 8 | - | 13 | 36 | 12,296 | - | - | 714 | - | 7 | - | - | 746.40 | - | 28.72 | 0.64 | 387.95 | - | - | - | 1,163.71 |
| கொழும்பு நகரம் | 1 | 1 | 13 | 10 | - | 19 | 44 | 10,500 | - | 32 | 874 | - | 205 | - | 27 | 718.52 | - | 23.86 | 0.23 | 430.38 | - | - | - | 1,172.99 |
| மஹரகம கிழக்கு | 1 | - | 6 | 9 | - | 13 | 29 | 10,819 | - | - | 623 | - | 1 | - | - | 237.36 | - | 27.93 | 0.69 | 236.17 | 0.17 | - | - | 502.32 |
| மஹரகம மேற்கு | 1 | 1 | 9 | 10 | - | 13 | 34 | 15,661 | - | 77 | 654 | - | 2 | - | - | 357.20 | - | 11.10 | 0.76 | 228.98 | - | - | - | 598.04 |
| பதுளை | 1 | 1 | 6 | 7 | - | 14 | 29 | 5,773 | - | - | 426 | - | 3 | - | - | 161.73 | - | 5.86 | 1.78 | 152.39 | - | - | - | 321.77 |
| காலி | 1 | 1 | 8 | 10 | - | 18 | 38 | 7,538 | - | - | 429 | - | 4 | - | - | 179.06 | - | 11.99 | 2.78 | 159.79 | - | - | - | 353.63 |
| களுத்துறை | 1 | - | 10 | 10 | - | 21 | 42 | 8,013 | - | 55 | 459 | - | 158 | - | - | 134.79 | - | 9.52 | 0.60 | 169.98 | 0.79 | - | - | 315.68 |
| மாத்தறை | 1 | 1 | 13 | 8 | - | 21 | 44 | 9,095 | - | - | 332 | - | - | - | - | 188.01 | - | 10.08 | 1.30 | 177.43 | - | - | - | 376.82 |
| நுவரெலியா | 1 | 1 | 8 | 6 | - | 13 | 29 | 3,703 | - | - | 389 | - | 26 | - | 10 | 141.10 | - | 1.53 | 0.96 | 118.23 | - | - | - | 261.83 |
| இரத்தினபுரி | 1 | 1 | 9 | 9 | - | 15 | 35 | 7,451 | - | 3 | 456 | - | 4 | - | 1 | 225.39 | - | 14.51 | 0.63 | 178.29 | - | - | - | 418.83 |
| அநுராதபுரம் | 1 | 1 | 6 | 9 | - | 19 | 36 | 4,648 | - | - | 607 | - | - | - | - | 208.55 | - | 13.71 | 1.92 | 162.75 | - | - | - | 386.94 |
| கம்பஹா | 1 | 2 | 13 | 9 | - | 12 | 37 | 13,605 | - | - | 835 | - | - | - | - | 263.36 | - | 24.38 | 0.52 | 490.84 | - | - | - | 779.09 |
| மட்டக்களப்பு | 1 | - | 2 | 9 | - | 11 | 23 | 4,704 | - | 74 | 346 | - | 29 | - | - | 72.00 | - | 12.56 | 3.86 | 98.83 | 0.09 | - | - | 187.33 |
| யாழ்ப்பாணம் | 1 | - | - | 1 | 1 | 11 | 14 | 2,178 | - | - | 359 | - | 1 | - | - | 77.69 | - | 1.93 | 2.84 | 120.80 | - | - | - | 203.26 |
| கண்டி | 1 | 1 | 16 | 19 | - | 19 | 56 | 11,467 | - | - | 619 | - | 180 | - | - | 414.28 | - | 14.60 | 2.56 | 263.89 | 1.49 | - | - | 696.81 |
| கேகாலை | 1 | 1 | 9 | 8 | - | 15 | 34 | 5,612 | - | - | 218 | - | 5 | - | - | 97.99 | - | 11.15 | 0.44 | 86.72 | - | - | - | 196.30 |
| குருநாகல் | 1 | 1 | 16 | 15 | - | 20 | 53 | 12,816 | - | 153 | 1,046 | - | 46 | - | - | 220.44 | - | 21.77 | 0.64 | 215.91 | - | - | - | 458.76 |
| தம்புள்ளை | 1 | 2 | 10 | 9 | - | 16 | 38 | 7,557 | - | 49 | 320 | - | 38 | - | - | 133.40 | - | 15.74 | 0.62 | 130.84 | - | - | - | 280.61 |
| நீர்கொழும்பு | 1 | 1 | 8 | 8 | - | 13 | 31 | 12,285 | - | 56 | 699 | - | 126 | - | - | 240.89 | - | 11.84 | 0.53 | 203.37 | - | - | - | 456.63 |
| **மொத்தம்** | **61** | **48** | **437** | **422** | **1** | **510** | **1,479** | **218,284** | **583** | **15,520** | **20,480** | **11,778** | **4,561** | **8,720** | **218** | **179,208.91** | **18,022.54** | **6,278.89** | **120,118.06** | **34,704.38** | **603.75** | **1,197.88** | **6,981.06** | **367,115.46** |

| | |
|---|---|
| **பெசேவ (இறக்குமதி)** | **96,590.09** |
| **தேகவ (இறக்குமதி)** | **22,443.44** |
| **திறைசேரி மாற்றல்கள்** | **4,564.36** |
| **மீளளிப்புகள்** | **(1,060.34)** |
| **செம்மையாக்கல்கள் , வகைப்படுத்தப்படாத வருமானம், செலுத்தப்படாத காசோலைகள் மற்றும் ஏனையவை** | **2,886.41** |
| **தேறிய சேகரிப்பு (மாகாண சபைகளுக்கு மாற்றப்பட்ட முத்திரைத் தீர்வை மற்றும் தே.க.வரி 1/3)** | **492,539.43** |